
KALKI 12-10-75 75 காசு

கல்கி




காலைப்புத்துணர்ச்சியும்
நறுமணமும்
நாள் முழுதும்
திகழட்டும்!
பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
டால்க்
Pond's
Dreamflower talc
சிஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடெட்
HT-CP-8341

ஜான்ஸன்ஸ் வழங்குகிறார்கள்
பல-பயனுள்ள cotton bud



இதோ அதன் உபயோகங்கள்



மேக்-அப்பை சீராக்குகிறது அல்லது விலக்க உதவுகிறது.



நுட்பமான கருவிகளை சாதனங்களை சுத்தம் செய்கிறது.



குழந்தையின் மூக்கை சுத்தம் செய்கிறது—சுலபமாக, மென்மையாக.




சிறு காயங்களின் மீது மருந்தை ஒத்தி எடுக்க உதவுகிறது.



காதுகளை பத்திரமாக சுத்தம் செய்கிறது-குழந்தையின் காதுகளையும் உங்கள் காதுகளையும்.

ஜான்ஸன்ஸ் Cotton Bud-ஐ இன்னும் எத்தனையோ வழிகளில் நாள்தோறும் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் Cotton Bud இருக்கட்டும்.

அது சுத்தமானது • பத்திரமானது.
சுகாதாரமானது • சௌகரியமானது.



புதிது !
வளையக்கூடிய
பிளாஸ்டிக் தண்டு

பத்திரமாக சுத்தம்
செய்வீர்- ஜான்ஸன்ஸ்
Cotton Bud—ஆல் சுத்தம் செய்வீர்



ட்ரு மாரி, எந்நேரமும் சுவைக்கச் சிறந்த பிஸ்கட்.

தேநீர், காபி அல்லது எந்த பானத்துடனும் சுவைத்திட மொறுமொறுப்பான பிஸ்கட்.
உங்கள் குடும்பத்தினருடன் பகிர்ந்து மகிழ சிறப்பான சுவை.

இந்தியாவில் நவீனமான தொழிலகத்தில் சுகாதார முறைப்படி தரமாக தயாரிக்கப்படுபவை.

ட்ரு பிஸ்கட்டுகள் மொறுமொறுப்பானவை.
புதுமணம் குன்றாமல் ருசி மிக்கவை.



ட்ரு

TRUE

-பகிர்ந்திட விரும்பும் தரமிகுசுவை

HT-AFP-8021 ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில் — பாண்டிச்சேரி




துணிகளின்
முன்ணிலாது
பாணிகளில்
மின்னுகிறது பின்னி
பின்னிக்கு
மாறுங்கள்
பாலியெஸ்டர்
இழை கலந்தவை
நாகரீகம், அத்துடன் நீடித்தும் உழைப்பவை-பின்னி மட்டுமே நயமுடன் இணைத்துத்தர முடியும்!

இந்தியாவிலும். அயல்நாடுகளிலும் இப்பொழுது அதிகமான அளவில் தேவைப்படுகிறது இந்த தேங்காய் நார்



Ennor

இயந்திரங்கள் –
தேங்காய் நார்
தயாரிக்க.



Crusher

குறைந்த முதலீட்டில் சிறந்த முறையில் தேங்காய் நார் தயாரிக்க இயந்திரங்கள் இதோ!


தேங்காய் நார் தயாரிக்க இந்தியாவில் இதுவரை சரியான இயந்திரங்கள் இல்லாமல் இருந்தது. அதிக அளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தது.

இப்பொழுது இதற்குத் தேவையான எல்லா இயந்திரங்களையும் நாங்கள் தயாரித்துள்ளோம். இதன் மூலம் நீங்கள் குறுகிய காலத்தில் அதிக அளவு தேங்காய் நார் உற்பத்தி செய்யலாம். அதிக அளவு ஏற்றுமதியின் மூலம் அதிக வருவாய் தேடிக்கொள்ளலாம்...
உங்களுக்கும் உங்கள் தேசத்திற்கும்!


இதுவரை தென் இந்தியாவில் 12 இடங்களில் எங்கள் என்னுர் இயந்திரங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன

மற்ற விபரங்களுக்கும் சரியான ஆலோசனைக்கும் எங்களை அணுகுக:


Manufacturers:
BHARAT MOTORS
5, Greames Road, Madras-600006
Phone: 86204 Cable: FIBRO-FLEX




Turbo Cleaner



Defibering Machine



Revolving Screen



Fibre Baling Press



Interpub/GSC/11/74


601
புதிய சாயல்கள்
மற்றும் கணக்கற்ற
புதிய தினுசுகள்
மாமூலுக்கு முற்றிலும்
மாறுபட்டவை
அழகிய பெண்களின் உடல்
அலங்காரத்துக்காக நமது புத்தம்
புதிய படைப்புகளின் இரகசியம்—
ஃபின்லேயின் ரிஸர்ச் & டெவலப்மென்ட்
டிபார்ட்மென்ட் வழங்கும் புதிய படைப்பு
கள்: 'டூ-இன்-ஒன்' இருபுறமும் மாற்றியணி
யக் கூடிய புதிய புடவைகள். ''மார்பிள்—
மார்வெல்' போலியெஸ்டர். மென்மை
தவழும் அழகுபாயும் ஸாஃப்ட்-அண்ட்-ஸ்டிஃப்
ஆர்கண்டிகள் மற்றும் பலப்பல.
அதோடு இலேசான மிதக்கும் வாயில்கள்.
இணையற்ற மல்கள். தூய, சிறப்பான போலியெஸ்டர்.
உங்களுக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுங்கள்.
ஃபின்லேஸ்—எப்போதும் புதுமை புகுத்துவோர்
Finlay's
ஃபின்லே மில்ஸ் லிட்./கோல்டு மோஹர் மில்ஸ் லிட்.
ASP/FM/45



கல்கி


ராக்ஷஸ
புரட்டாசி 26

○

அக்டோபர் 12
1975


○

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



■ மேலேயுள்ள நட்சத்திரமண்டலத்தில் மொத்தம் உள்ள நட்சத்திரங்கள் எவ்வளவு என்று சொல்லுங்கள்? (விடை: [illegible])

■ வீட்டு வசதி வாரியத்தில் நான்கு பேருக்கு வீட்டு மனை ஒதுக்கப்பட்டது. யாருடைய மனை எது என்று தெரியுமா?




வாய்நாற்றம் உங்களை விலகி நிற்கச் செய்கிறது...





கால்கேட் ஒன்று சேர்க்கிறது



கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

அதன் வித்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பேதென்ன!

வெண்மையான பற்களையும் ஆரோக்கியமான ஈறுகளையும் தூய்மையான இனிய மூச்சையும் பெற்றிடவே **கால்கேட் டூத் பிரஷ்களை** உபயோகியுங்கள்! உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு அமைய— 16 ரகங்கள்.

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...
உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும்விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

DC-G.50 TH (8)

காந்தியின் சீடர்; காந்தீயச் சீலர்

கல்கி

மலர் 35

இதழ் 11

தமிழ்த்திரு நாட்டினைத் தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

காந்திஜியின் பிரதம சீடர்களில் ஒருவர் அண்ணலின் இணையடி சேர்ந்து விட்டார்.

காந்திய உணர்வுகள் நம்மிடமிருந்து படிப்படியாக மறைந்து வருவது கண்டு வேதனைப்பட்டு உருகிய இதயம், காந்தி ஜயந்தியன்று அந்தத் துயரத்தை இனியும் தாளமுடியாமல் வெடித்துவிட்டது.

ஆக, தன்னலம் கருதாமல், பிறர்க்குரியாளராகக் காலமெல்லாம் வாழ்ந்த காமராஜர் இறப்பில் மட்டுமே தன்னலம் கருதினார் என்று கொள்ளலாம்.

அதற்குக் காரணமாக விளங்கியவர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியட்டும்; இனியேனும் திருந்த முயலட்டும்.

அண்ணலின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு நடந்த சீடர்களில் ஒருவர் என்பதால் மட்டும் காமராஜர் சிறப்புப் பெறவில்லை; சீலர்களில் ஒருவர் என்பதால் தனிச் சிறப்பு பெற்றார்.

அவருடன் கருத்து மாறுபாடுகளும் அபிப்பிராய பேதங்களும் கொண்டவர்கள் அநேகர் உண்டு. ஆனால் அவரது அகவாழ்வும் பொதுவாழ்வும் சின்னஞ் சிறு கறைகூடப் படியாமல் தூய்மையே உருவாக விளங்கின என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

கதர் அணிந்து பெருமை பெற முயன்றோர் பலர்; தூய வெண்மைக் கதர் அணிந்து அதற்குப் பெருமை சேர்த்தவர் சிலர். அவர்களில் காமராஜர் ஒருவர். கதர்த் துணி எந்த எந்த உயர்ந்த லட்சியங்களுக்கெல்லாம் உருவகமாக விளங்கியதோ, அந்த உன்னதக் கோட்பாடுகளை யெல்லாம் இம்மி பிசகாமல் கடைப்பிடித்தவர்.


காமராஜரின் வாழ்வு சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரம்; சுதந்திர பாரதத்தின் சரித்திரம். இந்த நாட்டின் கடந்த ஐம்பத்தேழாண்டு கால சரித்திரத்தின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் அவருக்குப் பங்கு உண்டு; அவரால் சரித்திரம் உருவானதும் உண்டு. ஆக அவரைப் பற்றிக் கூறுவதென்றால் நாட்டின் ஐம்பத்தேழு ஆண்டு சரித்திரத்தை எழுத வேண்டும். அது மட்டுமல்ல; இனி எதிர்காலத்திலும் கூட காமராஜரின் ஆன்மீக சக்தி நமது தேச சரித்திரத்தின் போக்கை நிர்ணயிக்க வல்லது. அதையும் எண்ண வேண்டும்.

மிக எளிய சூழலில் பிறந்தாலும் ஒரு மனிதன் தன்னலமற்ற சேவையால், தேசப் பற்றால், தியாக வாழ்க்கையால், உன்னதமான லட்சியங்களில் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையால் உலகம் போற்றும் தலைவனாக உயர முடியும் என்பதற்குக் காமராஜரது வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு. வாழ்க்கையில் முன்னேற, கல்லூரிப் படிப்பு, பட்டம் எல்லாம் உதவும்தான். ஆனால் அவை மட்டும் போதா. யதார்த்த நோக்கில் அமைந்த மேதாவிலாசம், மனிதாபிமானம், வெற்றி தோல்விகளைச் சமமாக ஏற்கும் மனப்பக்குவம் இவையெல்லாம்தான் மனிதனை மா மனிதனாக்குகின்றன என்பதைக் காமராஜரது சரித்திரம் உணர்த்துகிறது.

நாட்டின் வரலாற்றில் முக்கிய இடமும் மக்களின் இதயங்களில் நீங்காத வடிவமும் பெற்றுவிட்ட ஒரு பெருந்தகை பற்றி என்ன எழுதுவது, எவ்வளவு எழுதுவது? எங்கே ஆரம்பிப்பது, எப்படி முடிப்பது? திகைக்கிறோம்.

தேசமே ஆறாப் பெருந்துயரில் மூழ்கி யிருக்கையில் யார், யாருக்கு ஆறுதல் கூறுவது? புரியாமல் பரிதவிக்கிறோம்.

ஆனாலும் எளிதாக ஒரு விஷயத்தைக் கூறிவிடலாம். காமராஜரை நாம் மதிக்கிறோம், போற்றுகிறோம் என்றால் காந்தீயத்தை மதிக்கிறோம் என்று அர்த்தம். காந்தீயத்தை மறந்துவிட்டு அல்லது தாற்காலிகமாகக்கூட ஒதுக்கிவிட்டு காமராஜருக்கு அஞ்சலி செலுத்துவது அபசாரமாகும். இதனை மனத்தில் கொண்டு காமராஜருக்காக நாம் கண்ணீர் உகுக்கும்போது அந்தக் கண்ணீரால் நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்வோம். காந்தீயம் இந்த நாட்டின் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி பெற உழைப்போம், பாடுபடுவோம்.



இசை வாரமும் இசை வாழ்வும்

சென்னை கன்னிமரா ஹோட்டல் 'பால் ரூம்' எத்தனையோ சீமான்களையும் சீமாட்டிகளையும் கண்டிருக்கிறது. எத்தனையோ கவர்னர்களையும் மந்திரிப் பிரதானிகளையும் வரவேற்றிருக்கிறது. எத்தனையோ மேற்கத்திய, இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறது.

ஆனால் சென்ற செப்டம்பர் மாதம் 29ந் தேதி மாலை, அந்த ஹோட்டல் தனது தொன்மையான சரித்திரத்தில் முன் எப்போதும் பெற்றிராத பெருமையை அடைந்து சிறப்புற்றது.

சென்னையில் சர்வதேச இசை வாரத்தின் தொடக்கம் அங்கு நிகழ்ந்ததைத்தான் குறிப்பிடுகிறோம்.

அன்று ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் தெய்விக இசைக் கச்சேரி ஒன்றரை மணி நேரத்தோடு முடிந்ததே நல்லதாயிற்று! இன்னும் கொஞ்ச நேரம் பாடியிருந்தால் அந்த ஹோட்டல் பால் ரூமின் சுவர்களில் பதிக்கப் பட்டிருக்கும் நிலைக்கண்ணாடிகள் கூடக் கரைந்துருகியிருக்கு மென்றால் ரசிகர்கள் எம்மாத்திரம்? அவையோரின் கவனத்தைத் திருப்பவோ அந்தத் தெய்விகச் சூழ்நிலைக் கலைக்கவோ டெலிவிஷன் ஊழியர்களால் கூட முடியவில்லை; படுதோல்வி அடைந்தார்கள்!

விழாவைத் தொடங்கி வைத்த திரு வி.வி. நரசிம்மன், யெஹூதி மெனுஹின் அவர்களின் அறிக்கையை யொட்டியே பேசினார். சித்தம் ஒருமைப்பட்டுச் சீரிய சிந்தனைகள் உதிக்க மௌனம் அவசியமானது. உயர்ந்த சங்கீதம் பிறக்கவும் மௌனமே பெருதவி புரிகிறது என்ற கருத்தை வலியுறுத்தியதுடன் சர்வதேச நல்லுறவுகள் வளரச் சங்கீதம் எப்படித் துணைபுரிகிறது என்பதையும் அநுபவ ஞானத்தோடு எடுத்துரைத்தார். ஐ. நா. சபையில் மிகப் பெரிய பொறுப்பு வகிப்பவரல்லவா? அத்துடன் நமது சங்கீதத்தின் தனிச் சிறப்பையும் அவர் சுட்டிக் காட்டினார். மேற்கத்திய இசையில் *கற்பனை சுதந்திரம் என்பதே கிடையாது. தாம் சந்திக்க நேர்கிற இசை ஆர்வமுள்ள அயல் நாட்டவரெல்லாம் நமது சங்கீதத்தின் இந்தச் சிறப்பு அம்சம் குறித்து அதிசயப்பட்டுப் பேசுவதைக் கேட்டுத் தாம் பெருமை அடைவதாகக் குறிப்பிட்டார் திரு நரசிம்மன்.

இத்துடன் மேநாட்டுச் சங்கீதத்தில் இசை அமைப்பது என்ற அம்சம் மட்டும்தான் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இசை அமைப்பாளர்களாகவும் இருந்து இசைக்கேற்ற சாஹித்தியத்தையும் உருவாக்கிய மேதைகள் நமது வாக்கேயக்காரர்கள். இறைவனுடன் ஒன்றிப் போக ஒரு சாதனமாகவே சங்கீதத்தை அவர்கள் கருதினார்கள்.

இவ்வளவு உன்னதக் கலைச் செல்வத்தைப் பெற்றிருக்கும் நமக்குப் பார்க்கப்போனால்

இசை வாரம் என்று தனியே ஒன்று இல்லை தான். நாள், வாரம், மாதம், வருஷம் என்ன, நம் வாழ்க்கையே இசை மயம்தான்.

இதனை 'ராகதரங்கிணி'யில் பேசிய ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி வெகு நயமாக எடுத்துரைத்தார். பிறந்த குழந்தையைத் தொட்டிலிலிட்டு ஆட்டும்போது பாட்டு, நாற்று நடும்போது பாட்டு, ஏற்றம் இறைக்கும் போது பாட்டு, கல்யாணத்தில் ஊஞ்சல் பாட்டு, நலங்குப் பாட்டு, சுமையை ஏற்ற, இறக்கப் பாட்டு, படகோட்ட பாட்டு, நெல் குத்த பாட்டு, மாடு மேய்க்கும்போது பாட்டு, ஏன், மரணம் சம்பவித்தபோதுகூடப் பாட்டுத்தான்! இவ்விதம் இசை நமது வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று, நமது பண்பாட்டின் ஆணிவேர் என்பதை நினைவுபடுத்திய ஸ்ரீமதி எம். எஸ்., இந்தப் பண்பாடு நம்மிடையே மறுமலர்ச்சி பெற வேண்டும் என விரும்பினார். யெஹுதி மெனுஹின் குறிப்பிடுவது போல் பேச்சுக் குறைய வேண்டும்; மௌனம் கலையும்போது இசை மலர வேண்டும் என்றார்.

அதே மேடையில் பேசிய ஸ்ரீமதி பால சரஸ்வதி மேற்கூறிய கருத்துக்களை ஆமோதித்ததுடன் நடனத்துக்கும்கூட இசையே ஆதாரம் என்பதைக் கூறி நம் நெஞ்சங்களை நெகிழ்வித்தார். முதல் சங்கீத கலாநிதி பேசியதை மற்றொரு சங்கீத கலாநிதி ஆமோதித்ததில் மேற்படி கருத்துக்கள் இரட்டிப்பு முக்கியத்துவம் பெறுகின்றன.

இசை வாரத்தை யொட்டி நடந்த விழாக்கள், சொற்பொழிவுகள், சங்கீத நிகழ்ச்சிகளினூடே மனத்தை லயிக்க விடும்போது மெனுஹின் அவர்களின் அறிக்கையில் ஒரு வரி மீண்டும் மீண்டும் இதயத்தைச் சுற்றுகிறது. அவர் கூறுகிறார்:

...Yet music is used to cover up and drown less acceptable noises as in factories, restaurants and departmental stores.

இதனை நெஞ்சம் அசை போடுகையில் இருவித அர்த்தங்கள் தோன்றுகின்றன.

சங்கீதமானது தொழிலகங்களிலும் இதர பொது இடங்களிலும் எழும் இரைச்சலை மூழ்கடிக்க உதவுகிறது என்பது மேலெழுந்தவாரியான அர்த்தம். இதனை இசையின் லட்சியமாகக் கருதி இப்படி மகிழ்ச்சியோடு மெனுஹின் எழுதியதாகக் கொள்ளலாம்.

ஆயின், ஆழ்ந்து யோசிப்போமானால் தொழிலகத்தில் எழும் இரைச்சலை இனிய சங்கீதம் எப்படி மூழ்கடிக்க முடியும் என்ற கேள்வி பிறக்கிறது. எனவே வேறு ஓர் உட்பொருளும் விளங்குகிறது:

சந்தைக்கடை இரைச்சலை மூழ்கடிக்கும் விதமாகச் சங்கீதம் பயன்படுத்தப்படுகிறது! அதாவது, இக்காலத்தில் சந்தைக்கடை இரைச்சலை விடப் பெரிதாகக் கூச்சலை எழுப்பி விட்டு அதற்குச் சங்கீதம் என்று பெயர் கொடுத்தும் விடுகிறார்கள்!

இதைக்கண்டு மனம் நொந்து போய் மெனுஹின் எழுதியிருப்பதாகவும் கொள்ளலாம். இதில் உண்மையும் இருக்கிறது என்பதை மேனாடுகளில் 'பாப் மியூஸிக்' என்ற பெயரில் நடக்கும் அட்டகாசங்களை உணர்வோர் அறிவர்.

அத்தகைய ஒரு நிலை தமிழ் நாட்டுக்கும் விரைவில் வந்துவிடும்போல்தான் இருக்கிறது! இன்னும் கொஞ்ச நாட்களில் வீணைக்குக்கூட பக்க வாத்தியமாகத் தவில் வாசித்தார்களே யானால் வியப்பதற்கில்லை!

இறைவன் துணையும் அருளும் வேண்டி இது போன்ற அநாகரிகங்களைத் தவிர்ப்போம்!

கலப்பு இசை!

காலையில் மணமான காப்பியைச் சுவைக்கிறோம்; பிற்பகலில் டீ அருந்தலாம். அது ருசிக்கவும் செய்யும். இரண்டுமே நன்றாயிருக்கிறது என்பதற்காக ஒன்றாய்க் கலந்து குடிக்க முடியுமா? ஆனால் இப்படிக் கலந்து குடிப்பது தான் அகில இந்திய ரேடியோவினருக்கு ரொம்பப் பிடிக்கிறது போலும்!

அவர்கள் தீட்சிதர் சாகித்தியங்களை மேற்கத்திய பாணி இசையில் அமைத்துப் பாடி மகிழ்ந்தார்கள். நமக்குத்தான் கேட்கச் சகிக்கவில்லை! சர்வதேச இசை வாரமாம்! ஸ்ரீ முத்துசாமி தீட்சிதருக்கு இருநூறாவது பிறந்த நாள் விழாவாம். இதையொட்டி இப்படி ஒரு நிகழ்ச்சி! இந்தக் காரியம் இசை வாரத்துக்குப் பெருமை தேடித் தரவில்லை என்பதோடு தீட்சிதருக்குச் செய்த பெரிய அபசாரமாகவே முடிந்தது.

கர்நாடக சங்கீதத்தில் மேலெழுந்தவாரியான ஞானம் உள்ளவர்களுக்குக்கூட தீட்சிதர் கிருதிகள் எவ்வளவு புனிதமானவை என்பது தெரியும். அவற்றை இப்படி அவமதித்திருக்க வேண்டாம்.

உலக இசை வாரத்தில் சர்வதேச நல்லுறவுகள் வளர வேண்டியதுதான்; கலாசாரப் பரிவர்த்தனை தேவைதான். அது கலாசாரக் குழப்படி வேலையாக முடியக் கூடாது. மேற்கத்திய இசையை நாம் அனுபவிக்கப் பழகுவோம். கர்நாடக இசையின் சிறப்பை மேல்நாட்டவர் உணர்ந்து மதிக்கட்டும். இவ்விதம்தான் நல்லுறவுகளை வளர்க்க வேண்டுமே தவிர இரண்டையும் ஒன்றாக்கி இசைச் சிதைவு செய்வதன் மூலம் எந்தப் பயனும் ஏற்படாது.

கலப்பு மணத்துக்குத் தமிழக அரசு பரிசு கொடுப்பதால் இந்த இசைக் கலப்புக்குச் சர்வ தேசப் பரிசே கிடைக்கும் என்று நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் எண்ணினர் போலும்! கஷ்டம்! கஷ்டம்!

மேற்படி நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்கள் அதில் பங்கு பெற்றவர்கள் ஆகியோரின் ஆற்றலை நாம் குறை கூறவில்லை. அவர்கள் அலை வருக்கும் இசைத் துறையில் ரொம்ப ரொம்பத் திறமை உண்டு. அந்த ஆற்றல் நல்ல படியாகப் பயனாக வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை - யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலையில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங்காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டுமானால், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக்குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது— ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

உங்கள் குறையும் என் நிறைவும் (7)

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

நான் சுத்தாத்மாவாக ஆவதுதான் வழியே தவிர, சும்மாவுக்காக உபந்நியாசம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருப்பது அல்ல. இதற்கு ஓரளவு உபகாரமாக இருந்தது, நான் இங்கே ஒன்றரை வருஷம் இருந்து பல விஷயங்களைப் பற்றி என் மனசுக்கு ஒரு தெளிவு ஏற்படுத்திக் கொண்டது.


தெளிவுபட்ட விஷயங்களை நான் அநுஷ்டானம் பண்ண வேண்டியது என்னுடைய கடமை. பகவானைப் பிரார்த்தித்து அவன் கிருபை இருந்தால் இப்படி நான் முழுக்க நடத்திக் காட்டி என்னை என்றைக்காவது நன்றாகப் பண்ணிக் கொள்ள முடியுமானால், அன்றைக்கே நீங்கள் எல்லோரும் நன்றாக ஆகி விடுவீர்கள். லோகத்தில் அதர்மமே இருக்காது. என்னை நான் பூரணமாகச் சுத்தப் படுத்திக்கொள்ள முடிந்ததானால், எனக்குத் தெரியாதவர்கள் கூட அதன் சக்தியில் சுத்தமாகிவிடுவார்கள். அப்படியிருக்க, நீங்கள் எல்லோரும், இத்தனை ஜனங்கள், ஒன்றரை வருஷம் என்னிடம் இவ்வளவு பழகி, என்னை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள்— உங்களுக்கு அப்படி (என் நினைவே) ஒரு பழக்கமாக ஏற்பட்டுப் போச்சு — இப்படிப் பட்ட எல்லோரும் சுத்தப்படுவதில் சந்தேகமே இல்லை.

ஒன்றரை வருஷங்களாக உபந்நியாசம் செய்ததில் ஐம்பது வருஷ அபிப்பிராயங்களை எல்லாம் அலசி அலசி சாஸ்திரம், லௌகிகம் அது இது எல்லாவற்றையும் கலந்து கலந்து, ''இதுதான் தத்வம்; இப்படித்தான் இருக்கணும்'' என்று நான் மனசில் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அப்படி என்ன முடிவு கட்டிக்கொண்டிருக்கிறேனோ அதைப் பிரார்த்தனையினால் அநுபவத்துக்குக் கொண்டு வந்தாக வேண்டும். இது பெரிய, பெரி...ய்ய, காரியம்! ஒரு சின்ன ஃபோட்டோவில் ஒன்றுக்கொன்று 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொள்வதே சிரமமாக இருக்கிறது. ஒரு குடும்ப வாழ்க்கையில் சேர்ந்து இருப்பவர்கள் தங்களுக்குள் 'அட்ஜஸ்ட்' செய்து கொள்வதில் எத்தனையோ கஷ்டம் ஏற்படுகிறது. அப்படி இருக்கும் போது ஒரு மனுஷ்யன் சகல விஷயத்திலும் தர்மப்படி தன் வாழ்க்கையை 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொள்வதென்றால் அது லேசில் முடிகிற விஷயம் இல்லை. தர்ம விஷயங்கள் அறிவுக்கு நன்றாகத் தெரிந்தால் கூட, தெரிந்தும்கூட, பிரதி க்ஷணமும் அதற்கு மாறாமல் நடந்து காட்டுகிறது என்றால் மகா கஷ்டமாயிருக்கிறது. ஃபோட்டோவில் ''ஃபோகஸ்'' ஆகிறது என்கிறீர்களே, அந்த மாதிரி நம் ஈடுபாடும் 'ஃபோகஸ்' ஆனால்தான் ஒரு வாழ்க்கை முறையையே மாற்றிக் கொள்வது சாத்தியம். சகல சமாசாரங்களும் சேர்ந்து இப்படி ஃபோகஸ் ஆகிறது ரொம்ப சிரம சாத்தியம்தான். ஆனாலும் இதைப் பண்ணியாக வேண்டும். நான் இப்படி ஃபோகஸ் பண்ணிக் கொண்டு விட்டால் உங்களுக்கெல்லாம் தானாகச் சிரத்தை வந்துவிடும்; படிப்படியாக அது மேலே கொண்டு விட்டுவிடும். அந்தச் சிரத்தை இல்லையென்றால் அதற்காக உங்களுக்குக் குற்றம் இல்லை. அது என் குறையைத்தான் காட்டுகிறது.

''தர்ம மார்க்கத்தில் இருக்க வேண்டும் என்று பெரியவாள் சொன்னாரே ; இன்னும் பல பெரியவர்களும் சொன்னார்களே ! நாம் அப்படிச் செய்யவில்லையே'' என்று நீங்கள் எவரும் கஷ்டப்பட வேண்டாம். இப்படித் துக்கப்பட்டீர்களானால் துக்கம்தான் மிச்சம். பின்னே என்ன செய்வது ? நான் என்னைச் சுத்தப்படுத்திக் கொள்வது என் காரியம். அதற்கே எல்லாவற்றையும் விட்டு விட்டு நீங்கள்பாட்டுக்கு இருக்க முடியுமா ? 'நாமும் ஏதாவது செய்யத்தானே வேண்டும். வெறுமே இருக்கிறோமே' என்று உங்களுக்குக் குறையாகத்தான் இருக்கும். அதனால் ஒன்று வேண்டுமானால் செய்யுங்கள். உங்கள் குறைக்கு நான் ஏதாவது பரிகாரம் சொல்லத்தான் வேண்டும். ஆனால் 'தர்மப்படி இப்படிப் பண்ணுங்கள், அப்படிப் பண்ணுங்கள்' என்று பரிகாரம் சொல்வதால் பிரயோஜனமில்லை என்பதைத்தான் இவ்வளவு நேரம் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் பரிகாரம் சொல்ல வேண்டிய கடமையும் இருக்கிறது. அதனால் பெரிசாக மாறுதல் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்காமல், அப்படிப் பண்ணச் சொல்லாமல், கொஞ்சத்தில் கொஞ்சம் காரியசாத்தியமாகத் தோன்றுகிற ஒன்று சொல்கிறேன் : அதாவது, இப்போது நான் என் மனசில் ஏற்பட்டிருந்த பல அபிப்பிராயங்களை அலசிக் கொண்டு ஒரு தெளிவுக்கு வந்ததாகச் சொன்னேனல்லவா, அதே போல், நீங்களும் சாஸ்திர விஷயங்களையும் தர்மங்களையும் சாவகாசப் பட்டபோதெல்லாம் அலசிப் பார்த்துக் கொள்ளுங்கள். இப்போது லோக வாழ்க்கை இருக்கப்பட்ட நிலையிலே சாஸ்திரப் பிரகாரமான அநுஷ்டானம் உடனேயே பட்டண வாசக்காரர்களுக்குச் சாத்தியம் இல்லாமல் இருக்கும் : ஆனால் அந்த சாஸ்திர விதி முறைகளை, தத்வார்த்தங்களை மனசுக்குள் அலசிப் பார்த்து, நாம் அநுஷ்டித்தாலும் அநுஷ்டிக்காவிட்டாலும் அவைதான் ஆத்ம க்ஷேமமானவை என்று நமக்கு நாமே ஒரு தெளிவை ஏற்படுத்திக் கொள்வது முடிகிற காரியம்தான். அவ்வளவுதான் முடியும். அதைப் பண்ணுங்கள் என்று சொல்கிறேன்.

(தொடரும்)

1959ல் சென்னை பிரிவுபசாரத்தில் அருளிய உரை.



அந்த ஆர்க்காட்டுச் சாலையிலே

துரோணன்

எழும்பூர் ஸ்டேஷனில் ரயிலைவிட்டு இறங்கின எனக்கு அழுகை அழுகையாக வந்துவிட்டது. அதிகாலையில் ஐந்தேமுக்காலுக்கு வந்து சேர வேண்டிய ரயில் நூறு நிமிஷம் லேட். மணி ஏழரை. என் ஆருயிர்த் தோழி சந்திராவுக்குக் கல்யாணம்.

ஹேண்ட்பாகைத் திறந்து கண்ணாடியை எடுத்து உற்று நோக்கினேன். தூக்கமில்லாத விழிகளும், கலைந்திருந்தவகிடும், சிதைந்திருந்த திலகமும், வறண்டிருந்த உதடுகளுமான அலங்கோலம் கண்டு வெட்கினேன். இப்படியா கல்யாண வீட்டுக்குள் நுழைவது? தலையைத் திருப்பினேன். நல்லவேளையாகப் பக்கத்திலுள்ள பயணிகள் அறைக்குள் எவரும் இல்லை. பைக்குள்ளிருந்த சோப்பு, சீப்பு, பவுடர், திலக மை — உபகரணங்களோடு குழாயடியை நெருங்கினேன். சோப்பைக் குழைத்து முகத்தில் அப்பித் தேய்த்து, சோர்வும் சோகமும் போகும் அளவுக்குக் கழுவினேன். துவாலைத் துண்டை எடுத்துத் துடைத்துக் கொண்டு, பெஞ்சுக்கு வந்து அமர்ந்தேன். பதினைந்தே நிமிடங்களில் முகம், வகிடு, நெற்றி எல்லாம் சீர்ப்பட்டு விட்டன. உடை வகையையும் மாற்றினேன். பாசி நிறமும், சரிகை ஜரிகைப் பேட்டுமான நைலக்ஸை எடுத்து உடுத்தினேன். அதற்கு 'மேட்சான' பச்சை வயலெட் ஜாக்கெட்! பொட்டலத்தோடு இருந்த கனகாம்பரக் கத்தையை அள்ளிப் பின்னலோடு செருகிக் கொண்டு எழுந்தேன். அவ்வறைக்குள்ளிருந்த நிலைக் கண்ணாடியில் என் உருவமே புது மாதிரியாகப் பளிச்சிட்டது! பரபரப்போடு, உள் பிளாட்பாரத்தைவிட்டு வெளியே வந்தேன் —

'பல்லவன்' டிரான்ஸ்போர்ட்டுகள் வந்து நிற்கக்கூடிய இடத்திலே, ஒரு போலீஸ் பட்டாளமே அணிகொண்டு நின்றது. தலையை மூடிய இரும்புத் தொப்பிகள்—தோளில் சுமக்கப்பட்ட தோட்டாக்கள் — இவ்வளவும் எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்த தோரணையில் அங்கே ஆரவாரம். ஏதோ இயக்கமாம், கதவடைப்பாம், கலாட்டாவாம். நெருக்கடி நிலை பிரகடனத்துக்கு முற்பட்ட கதை!

வாடகைக் கார்கள் நிற்குமிடம் வெறிச்சோடிக் கிடந்தது. போர்ட்டிகோவைத் தாண்டிக் கொஞ்சம் மேற்கே போனேன். பார்சல் புக்கிங் ஷெட்டுக்கு அருகில் ஒரே ஒரு டாக்ஸி. என் அதிர்ஷ்டத்துக்காகவே மிச்சப்பட்டிருப்பதைப் போல் நின்றிருந்தது. பரபரப்போடு சென்று அதை அணுகினேன். ஆனால், அதற்குரியவனாக அங்கே யாரையும் காணோம். சுற்றிச் சுற்றி வந்து நாலாபுறங்களையும் நோக்கினேன். பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, ஒருவன் வந்தான். நல்ல வாட்டசாட்டமான உருவம் — பரந்த முகம்— முறுக்கு மீசை — தடித்த உதடுகள் — முகத்தை அடைத்த கறுப்புக் கண்ணாடி — கையிலிருந்த சிகரெட் துண்டைக் காலின் கீழே போட்டுத் தேய்த்துவிட்டு வாய்ப் புகை வெளியாக, ''ஏன், வர்றீங்களா?'' என்று கேட்டான். நான் தலை அசைக்கவும், அவன் சற்று நேரம் நின்று நாலாபுறங்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். பின்னர், மீட்டரைப் போட்டு விட்டு, பின் ஸீட்டின் கதவைத் திறந்து விட்டான். ஏறி அமர்ந்தேன். அவனும் அமர்ந்து கொண்டு, ஸ்டியரிங்கைப் பிடித்தபடி என் பக்கம் திரும்பி, ''எங்கே போக வேணும்?'' என்றான்.

''மந்தவெளி — மங்களாபாய் கல்யாண மண்டபம்'' என்ற பதிலே விடுத்தேன். கார் கிளம் பிற்று. பத்து நிமிடங்களில் பலப் பல குறுக்குத் தெருவுகள் மூலம் எழும்பூரைச் சுற்றி வட்டமடித்து விட்டு, ஏதோ ஒரு பாதைக்குத் திரும்பிற்று. என் நினைவுக்கெட்டிய வரையில் அது சரியான வழியாகத் தோன்றவில்லை. கொஞ்சம் பரபரப்பான குரலில், ''டிரைவர், இது எங்கே போகிற பாதை?'' என்றேன்.

டிரைவரிடமிருந்து சற்று நேரம் பதில் இல்லை. பின்னர் ஒரு சூள் கொட்டலுடன், ''ஆமாம்மா, இது கொஞ்சம் சுற்றுப் பாதை தான். ரயில்வே மேம்பாலம் வேலே நடக்குது. அதனாலே, ரோடுகளெல்லாம் பிளாக் ஆகியிருக்குது'' என்றான்.

என் மனம் கொஞ்சம் சமாதானம் அடைந்தது. மறுபடியும் ஒரு பத்து நிமிஷம். கார், அதிக நடமாட்டமில்லாத தெருக்கள் வழியாகத் திருப்பப்பட்டு, ஒரு சாலையை அடைந்தது. ''என்னார், இது — மவுண்ட் ரோடு, ராயப்பேட்டை வழியில்லே போல் இருக்கிறதே?'' என்றேன் பதற்றக் குரலில்.

இப்போதும் அவன் சூள் கொட்டிவிட்டே பதில் அளித்தான். ''நீ பேசாமல் வாம்மா; இன்னிக்கு அந்தப் பக்கம் போகிற வண்டியெல்லாம் தானுதான்!''

அவனுடைய பதில் இப்போதும் எனக்கு ஆறுதலை அளித்தது. மறுபடியும் பத்து நிமிஷங்கள் கழிந்தன—

வண்டி, ஒரு குறுகலான சாலேத் திருப்பத்தைக் கடக்கும் நிலையில், திடீரென்று ஒருவன் எங்கிருந்தோ ஓடி வந்து நின்று கையை ஆட்டினான். வண்டி குலுங்கியபடி நின்றது. அப்படி நிறுத்தின ஆளும் — ஐயோ பயங்கரமே! அவனுடைய முகத்தில் என்னென்னவோ எழுதி ஒட்டியிருந்தது. அவனுடைய விழிகள் என் பக்கத்தை ஆராய்ந்துவிட்டு, டிரைவரை நோக்கிற்று. வியப்புக் குரலில், ''ஏமி நாயினு? குறி வைச்சபடியே சவாலே நிறைவேத்திட்டியே? அடிச்சே லக்கி! ஒரே கல்லுலே ரெண்டு மாங்கா! 'டென்தார்ட்டி' ஆளு எங்கே பூட்டான்; எப்புடி ஏமாந்தான்?'' என்றான் மூச்சு விடாமல்.

டிரைவர் நறுக்கெனச் சிரித்தபடி, ''அவன் பூட்டான் எங்கியோ! உடுப்பு மாத்தப் போனானே. இல்லாட்டி, தம்பியைத் தேடிக்கிட்டுப் போனானே? எனக்கும் நல்ல சந்தர்ப்பமாத் தோணிச்சு — புடிச்சுக்கிட்டேன்'' என்றான்.

வெளியே நின்றவன் 'பக்'கென்ற ஒரு சொடுக்கல் சிரிப்பை விடுத்தான்.

டிரைவர் அவனே நோக்கி, ''அது சரி, தம்பி ராஜபார்ட்டு. டாக்டர், விநாயகம், சேக்கு — இவனெல்லாம் எங்கே பூட்டாங்க?'' என்றான் ஆர்வக் குரலில்.

''ஏன், அங்கேயேதானே இருந்தாங்க? ராஜ் ஹோட்டல் பக்கம் பார்க்கிறது தானே?''

''அதுக்கெல்லாம் ஏதுடா நேரம்? சரி, நீயாவும் இப்போ ஏர்றியா வண்டிலே? இவங்களை, மயிலாப்பூர் மந்தவெளியிலே 'டிராப்' பண்ணனும்.'' — இவ்வாறு சொல்லிக் கொண்டே, தனக்கு எதிரேயிருந்த சிறு கண்ணாடியின் கொக்கியைப் பிடித்து உயர்த்திவிட்டான் டிரைவர். இது வரையில், அக்கண்ணாடியின் மூலம் என் பார்வைக்குத் தெரிந்து கொண்டிருந்த அவனுடைய முகம் இப்போது மறைந்துவிட்டது.

வெளியே நின்றவன் ஒரு கோணல் புன்னகையுடன், ''அச்சோ! நான் வரமுடியாது இப்போ. வேணுன்னு, அங்கே வாரா வதிவிட்டே வேணு அண்ணன் ரெடியாயிருக்கும் — அதைப் புடிச்சுக்கோயேன்?'' என்றான் கை அசைத்தபடி.

கார் கிளம்பிவிட்டது. பத்தே நிமிஷங்களில் ஓர் அகலமான சிமிட்டிச் சாலேயில் பறக்கத் தொடங்கிற்று. இரு பக்கங்களிலும் கட்டடமே தென்படாத வெட்டவெளி. இரண்டு திசைத் திருப்பங்கள் கடந்தன. அவ்விரண்டு இடங்களிலும் இரண்டு வழி காட்டிப் பலகைகள் எதிர்ப்பட்டு மறைந்தன. அவை ஒன்றிலிருந்து மட்டும் என் கண்



களுக்குத் தென்பட்ட ஒரே எழுத்து—'ஆ' என்பதுதான். நெஞ்சு 'பகீ'ரென்றது.

'ஐயோ! இதுவா மயிலாப்பூருக்குப் போகிற பாதை?' என்ற கேள்வி அடி வயிற்றிலிருந்து எழும்பிற்று. இருமருங்கும் வெறித்து வெறித்து நோட்டமிட்டேன் — நகர்ப்புறமாகவே தெரியவில்லை.

இந்த டிரைவருக்கும், இவனுடைய சகாவுக்கும் நிகழ்ந்த உரையாடலின் உட்பொருள் என்ன? யார் அந்த 'டென்தர்ட்டி' அந்த நம்பருள்ள பழைய கேடியாக இருக்குமோ? அப்புறம், அவன் சொன்னனே — 'ராஜுபார்ட்டு, டாக்டர், விநாயகம், சேக்கு, ராணி ஓட்டல்' இந்த மாதிரிப் பெயர்ப் பட்டியலை எங்கேயோ கேட்டது போல்—படித்தது போல இருக்கின்றனவே?

'ஒரே கல்லிலே ரெண்டு மாங்காய்' என்று வேறு குறிப்பிட்டானே, அது என்ன?' —

ஓ! கொஞ்ச நாட்கள் முன்னுலே செய்தித்தாள்களில் படித்திருந்தேனே — 'விடை ணசி விசாரணைக் கேஸ்'; அதைப் படித்துவிட்டுப் பத்து நாளைக்குப் பிதற்றினேனே — அப்படிப் போலவே இருக்கின்றனவே—இந்தப் பெயர்களும் சூட்சுமங்களும்? அந்த மாதிரி எதுவும்—

நாலு வருஷங்களாகப் பெட்டிக்குள்ளேயே தூங்கிக் கொண்டிருந்த அம்மாவின் இரட்டை வடம் சங்கிலி இப்போது என் கழுத்தில் - இது ஐந்தரை பவுன்; கையில் இருக்கிற வளையல் சோடிகள், மோதிரம் எல்லாம் மூன்றரை பவுன்; காது ஸ்டெட்டும், மூக்குத்தியும் ஒன்றரைப் பவுன்; கையிலுள்ள ஹேண்ட்பாகிலும்... இவ்வளவையும் கணக்கிட்டிருக்கிறுனே?

இதோடு மட்டிலுமா? அம்மாவுக்கும், பாட்டிக்கும் அருமைச் செல்வமாக விளங்கி, கவலையற்ற காரிகையாக வளர்ந்து, கண்ணைப் பறிக்கிற காட்டு ரோஜாவாக—இருபத்து மூன்று வயதுக் குமரியாக உள்ளேனே? என்னைப் பற்றி?

இனி ஒரு விநாடியும்கூட இந்தக் காருக்குள்ளே இருக்கக் கூடாது. கூச்சம் நாச்சங்களை விட்டுத் தொலைத்து, எதையாவது சொல்லி நடித்துக் காரை நிறுத்தச் செய்ய வேண்டியது — இறங்க வேண்டியது — இறங்கினவுடனே, கார் தொடர முடியாத இந்தக் காட்டுப் பாதை வழியாக மூச்சுள்ள அளவுக்கு ஓட வேண்டியது. அப்படியும் அவன் துரத்தி வந்தால் — நடப்பது நடக்கட்டும். கைக்குக் கிடைக்கிற கூழாங் கற்கள் அத்தனையையும் பொறுக்கி, அவன் அண்ட முடியாத வகையிலே வீச வேண்டியது. அப்புறம் தெய்வத்தின் பங்கு பாக்கி. அது எப்படி வேண்டுமானுலும் செய்யட்டும்!

இப்படி நினைத்த இதே சமயம் —

டிரைவர் நாயினுவின் செய்கையிலும் திடீரென்று ஒரு மாறுதல் தென்பட்டது. ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த கைகளும், ஆக்ஸிலேட்டர் ஸ்பீட் கட்டைகளை அமுக்கிக் கொண்டிருந்த கால்களும் ஏதோ ஒரு விசித்திரமான சேஷ்டைகளைப் புரிவன போன்று இருந்தன. வண்டியின் வேகம் குறைக்கப்பட்டது. திடீரெனத் திரும்பி என் முகத்தில் நெருப்பைக் கொட்டுவதுபோல் பார்த்துவிட்டு நெஞ்சைக் கரண்டிக் காரி உமிழ்ந்தான். ஸ்டியரிங்கையும் நிதானப்படாமலே கோணல் மாணலாகத் திருப்பத் தொடங்கிவிட்டான்.

இதே சமயம் — எதிர்த் திசையிலிருந்து இரண்டு கார்கள் காற்றுடியின் வேகமாக எங்களை நோக்கி எதிர்ப்பட்டு வருவது என் கண்களுக்குப் புலப்பட்டன. இரண்டும், பக்கத்துக்குப் பக்கத்தில் ஜோடியாக வந்தன. அவற்றில் 'யெல்லோ டாப்' ஒன்று; மற்றொன்று ஜீப்! திடீரென்று பேய்களின் ஆங்காரக் கூச்சல்கள் போல் இரண்டு கார்களின் மின்விசைக் குரல்களும் அதிர்ந்து வெளிப்பட்டன. ஒரு நொடிப் பொழுதிலே—

எதிர்ப்பட்டு வந்த கார்கள் இரண்டும் திடீரென்று வழிமறித்து நின்றன. இந்தக் காரும் கோணல் மாணலான ஈசான்னியத் திக்கை நோக்கி நிறுத்தப்பட்டது. 'படபட' வென்ற பூட்ஸ் கால்களின் முழக்கத்தோடு மூன்று போலீஸ்காரர்களும், ஓர் இன்ஸ்பெக்டரும் ஜீப்பைவிட்டுக் கீழே குதித்தார்கள். மற்றொரு காரிலிருந்து இரண்டு கனவான்களும், டிரைவர் ஒருவரும் இறங்கினர்கள். என்னுடைய பார்வைக்கும் கருத்துக்கும், இது கனவா, உண்மையா என்பதே பிடிபடவில்லை. பரக்கப் பரக்க இறங்கினேன்.

ஜீப்பைவிட்டு இறங்கின போலீஸ்காரர்களில் ஒருவர், தெய்வ சந்நதம் வந்தவரைப் போன்று ஓடி வந்து, கறுப்புக் கண்ணுடி நாயினுவின் மார்புச் சட்டையைப் பற்றி இழுத்தார். மற்றொருவர், அவனுடைய பிடறிப்புறத்தைப் பற்றி உலுக்கியவண்ணம், ''இன்னுடா, கேப்மாறி? தொடங்கி விட்டியா தொழிலே?'' என்றார் கொடூரக் குரலில்.

''இல்லீங்க, இல்லீங்க, இந்த அம்மா தான்'' என்று என்னைச் சுட்டிக்காட்டிய வண்ணம் ஏதோ ஒரு சமாதானத்தைத் தொடங்கினுன் நாயினு. அப்போது, இன்ஸ்பெக்டரின் புறங் கை வீச்சு, நாயினுவின் கன்னத்திலே 'பளார்' என்ற வெடியோசையோடு, பரிசைப் பதித்தது. அவனுடைய கறுப்புக் கண்ணுடி எகிறிப் போய் எட்டத்திலே விழுந்தது.

மற்றொரு காரை விட்டு வந்த கனவான்கள் இருவரும் பரபரப்போடு என்னை நெருங்கி வந்தனர். அவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதை அவர்களுடைய முகங்களே உறுதிப்படுத்தின. ஒருவர் பதைப் போடு, ''ஏனம்மா, நீங்கள் எந்த ஊர் — எங்கே கிளம்பினீங்க? — ஏன் தனியாக வந்தீங்க?'' என்ற கேள்விகளை உதிர்த்தார். அவரது பரிவு நிறைந்த முகமும், வினுக்களும், கார்காலத்து மேகங்களில் பட்ட குளிர் காற்ருக என் உள்ளத்திலே உணர்ந்தின. அவர்கள் இருவரையும் நோக்கி, அனைத்துச் செய்திகளையும் கொட்டித் தீர்த்தேன் — கொடு மழையாக.

மூத்தவராகத் தென்பட்டவர், மிகுந்த வியப்போடு என்னை நோக்கி, ''ஏனம்மா, நீங்கள் தாம்பரம் ஏ. எஸ். எம். சங்கரின் கல்யாணத்துக்காகவா வந்தீர்கள்? அவர் உங்களுக்கு என்ன உறவு?'' என்று கேட்டார்.



''இந்தப் புதுக் கோட்டு நானூறு ரூபா விலைன்னு சொன்னு நம்பமாட்டேங்க நீங்களே! இதுக்காகக் கடைக்காரன் எனக்கு விட்டிருக்கிற வக்கீல் நோட்டீசைப் பார்த்தப்புறமாவது நம்புவீங்களா?''

— உஷா


ராசி
தீபாவளி கலர்கள்—
மனோஹரி
வஜ்ரமாலா
ராதா சில்க் எம்போரியம்
சென்னை-600004
ராதா சில்க் எம்போரியம்
29, கோவிந்த் மஹல்,
86-B, மரைன் டிரைவ், G.ரோடு,
பம்பாய்-400002
சார்பு நிறுவனம்: ராதா சில்க்ஸ்
'தன் பில்டிங்ஸ்' மவுண்ட் ரோடு,
சென்னை-600002


அம்மா அவங்க பாத்ரூம் ஏன் அவ்வளவு நாற்றமடிக்குது நம்முடையது எவ்வளவு வாசனையா யிருக்கு?
கண்ணு, நாம் ஓடோனில் உபயோகிக்கிறோம்
ODONIL
ஓடோனில் துர்நாற்றங்களை உடனடியாக அழிக்கிறது. பாத்ரூம் போன்ற இடங்களைத் தூய்மையாகவும் நறுமணத்துடனும் வைக்கிறது.
ஓடோனில் பல்வேறு நறுமணங்களில் கிடைக்கின்றன. ஓடோனில் வகைவகையான அளவுகளில், திறுசுகளில், டப்பாக்களில் கிடைக்கின்றன.
பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு நவீனமான வசதிகள்
BALSARA

தோட்டக்காரர்: ஏன்டா பையா, மாம்பழம் திருடலாம்னு பார்க்கறியா?
பையன்: சேச்சே, திருடாம இருக்கப் பார்க்கிறேன்! — உ.வி.



''இல்லை, அந்த மணப் பெண் சந்திரா வுக்கு உயிர்த் தோழி நான்'' என்பதைச் சொன்னேன். அப்போது, அவ்விரு சகோ தரர்களும், முகத்திலே பொங்கிய வியப்பு மலர்ச்சியுடன் ஒருவரையொருவர் நோக்கிய படி ஸ்தம்பித்து நின்றுவிட்டனர் ஒரு கணம். இளையவர் அனுதாபம் மிகுந்த குரலில், ''அடப் பாவமே! இந்தக் கார் கடத்தல் கோஷ்டியிடம் வந்து சிக்கிக் கொண் டீர்களேம்மா? நீங்கள் வந்த கார் எங்க ளுடையதுதான்'' என்றார். அவரைத் தொடர்ந்து மூத்தவரும் விவரித்தார்:

''என் தம்பி, வழக்கம்போல, எனக் காகவே காரைப் பார்சல் ஷெட்டு ஓரம் நிறுத்திவிட்டுப் போயிருந்தான். நான், கோடம்பாக்கத்திலிருந்து என் மனைவியும் கல்யாணத்துக்கு வருவதை எதிர்பார்த்து, அடுத்தாற்போல் உள்ள மின்சார ரயில் பிளாட்பாரத்துக்குப் போயிருந்தேன்..... வண்டி லேட்டானபடியால், என் மனைவி என்னைச் சந்திக்க முடியாமல், முன்னடியே போய்விட்டதை அறிந்து திரும்பிவிட் டேன். நான் வருவதற்குள்ளாக, இந்தக் கார் கடத்தல் நிகழ்ந்திருக்கிறது. இதோடு, பெரிய புதையல் கிடைத்ததைப் போல நீங் களும் வந்து சேர்ந்து கொண்ட வகை, இந்தக் கொலைகாரத் தோழருக்குப் பெரிய இட்டமாகிவிட்டது. நீங்களும், எங்கள் காரும் தப்பியது — தெய்வச் செயல்.''

இளையவர், தம் கைக் கடிகாரத்தை உற்று நோக்கிவிட்டுப் பரபரப்போடு பெரிய வரைப் பார்த்தார். பெரியவரும், ''ஆமாம், நேரமாகிவிட்டது'' என்று சொல்லிவிட்டு, என்னை நோக்கி, ''நீங்கள் இப்போது மிக தைரியமாக — நம்பிக்கையாக — என்னோடு வரலாம். ஏனென்றால், நீங்கள் போகிற இடத்துக்குத்தான் நானும் வந்து கொண் டிருக்கிறேன்'' என்றார் சிரித்தபடி. நான் வியப்படைந்த கோலமாக அவரைத் தொடர்ந்து போய்க் காரில் ஏறிக் கொண் டேன். அவரே டிரைவராகவும் அமர்ந்தார். மற்ற இருவரும் அந்தக் கடத்தல் காரிலே ஏறிக் கொண்டனர். அது மீண்டும் வந்த திசைக்கே திருப்பப்பட்டது. இதற்கிடையில், கறுப்புக் கண்ணாடி நாயினு போலீஸ் ஜீப் காருக்குள்ளே ஏற்றப்பட்டான்.

மூன்று கார்கள் தொடர்ந்தாற்போல் நகரை நோக்கிப் பறந்தன.

ஜீப் காரிலிருந்த இன்ஸ்பெக்டர், உரத்த குரலில், கையசைத்தபடி, ''ஓகே மிஸ்டர் டென் தர்ட்டி! நீங்கள் போய் மேரியேஜ் அட்டெண்ட் பண்ணிவிட்டு ஈவினிங் வந்து விடுங்கள்; ஸ்டேட்மெண்ட்டை எழுதிவிடு வோம்'' என்றார்.

''தாங்க் யூ ஸார்!'' என்று பதில் குரல் கொடுத்தார், நான் இருந்த வண்டியின் கன வான். நான் வியப்பின் மூலம் அதிர்ச்சி யடைந்தேன்! இந்தக் கனவான் 'மிஸ்டர் டென் தர்ட்டி' என்று அழைக்கப்பட்டாரே— அப்படியானால், இவருடைய பெயரா அது? இவரும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த வரோ; ஒரு கால் — இந்த நம்பருள்ள ஒரு கான்ஸ்டேபிளா?'' என்ற சந்தேகங்களோடு உழன்றேன்.

எங்கள் கார் மயிலாப்பூரை நோக்கி விரைந் தது. இதற்குள்ளாக, என் நெஞ்சிலிருந்த சந் தேகங்கள் அனைத்தையும் களைந்துவிட்டார்— 'டென் தர்ட்டி' கனவான்.

என்னுடைய ரயில் பிரயாணத்தில் சக பயணி ஒருவர் சொன்னார்:

''இப்போது இந்த ரயிலிலே, ஐந்நூறு பேர்களுக்குக் குறைவில்லாமல் பயணம் செய்கிறோம். இவ்வளவு உயிர்களுக்கும் பொறுப்பானவன், இதை ஓட்டுகிற என்ஜின் டிரைவர். இவன் யார், இவனுக்கு என்ன பெயர், எத்தனை வயது, கறுப்பா—சிவப்பா, என்ன குணமுடையவன் — என்பதை யெல் லாம் பற்றி யாருக்காவது தெரியுமா? நம்பிக் கொண்டுதானே இவ்வளவு உயிர் களும் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றன? இதே முறையில்தான், நம்முடைய வாழ்க் கைப் பயணத்தை நடத்தி வைக்கிற டிரைவ ராகிற ஆண்டவனின் மீதும் நாம் நம்பிக்கை வைத்தே ஆக வேண்டும்!''

ஆஹா! எத்தனை பெரிய வேதாந்தக் கருத்து? இதை இப்போது ஏன் நினைக்க வேண்டும் என்றால், நினைத்தே ஆகவேண்டி யிருக்கிறதே!

நான் — கல்யாணப் பெண் சந்திராவுக்குத் தோழி. இதே போல், கல்யாண மாப்பிள்ளை யாகவும், உதவி ஸ்டேஷன் மாஸ்டராகவும் விளங்குகிற சங்கருக்கு உத்தியோகத் தோழர் இந்த 'டென் தர்ட்டி' கனவான்!


இதோ — மணி ஒன்பது ஐம்பது. கல்யாண வீட்டு வாசலிலே கன மகிழ்வோடு இறங்கு கிறேன். என்னைத் தொடர்ந்து, இந்தக் கன வானும் இறங்கி வருகிறார். சந்திராவின் கழுத்தில் சரடு கெட்டிப்படுகிற நேரத்தில், உள்ளே நுழைகிற எங்களையும் வரவேற்பது போல, இரண்டு ஜதை கெட்டி மேளங்கள் முழங்குகின்றன. பலப் பலக் குரல்கள் எங்களை — எல்லாம் சரி, மிக முக்கிய மானதை நினைக்காமல் மகிழ்கிறேனே?

நான் பயணப்பட்டு வந்திருந்த ரயிலில், என்ஜின் டிரைவரை 'யாரோ' எனக் குறிப் பிட்டிருந்தார் அல்லவா அந்தப் பெரியவர்? அது — பொதுவான வேதாந்தக் கருத்து தான்; அதில் பிழையில்லை. ஆனால் அப்படி 'யாரோ'வாகக் கருதப்பட்டு, அறியப்படா மல் இருந்த டிரைவர் தெய்வம் — இதோ — உருவமும், பெயரும், குணமும் அறியத்தக்க தெய்வமாக எனக்கெதிரே விளங்குகிறாரே! தக்க சமயத்தில் என்னை ஆர்காட்டுச் சாலை யிலே காப்பாற்றினாரே! இந்த அற்புதம் யார் வாழ்வில் நிகழ முடியும்? இவர்தான் 'டென் தர்ட்டி!'

நான் வந்த 'பாண்டியன் எக்ஸ்பிரஸ்' வண்டியின் எண் — 'டென் தர்ட்டி' என்பதை யும், அதே எண் எல்லோராலும் அழைக்கப் படும் அளவுக்கு இந்த டிரைவர் தெய்வத்துக் குச் சிறப்புப் பெயராக நிலைத்துவிட்டிருக்கும் அதிசயத்தையும் இப்போதல்லவா அறிகிறேன்?

'ஆளப் பிறப்பானோ, ஆறடி வளருவானோ'...
கருத்தரித்தவள் கனவு பலித்திடுமே
கால்ஷியம்-ஸாண்டோஸ்
இனிப்பினிலே!

கருவிலிருக்கும்போதே உங்கள் குழந்தையின் பற்களும் எலும்புகளும் அமையத் தொடங்கும். அப்போதுதான் அவனுக்குக் கால்ஷியம் மிகவும் தேவை. அளித்திட உங்களால்தான் முடியும். அதற்கு இலகுவான வழி: கால்ஷியம்-ஸாண்டோஸ்.



அன்றாடம் மும் முறை மென்றிடுங்கள் 3-4 வில்லைகள்; வைட்டமின்கள் C, D, B_{12} அடங்கிய, இனிய ராஸ்ப்பெர்ரி-சுவையுள்ள கால்ஷியம்-ஸாண்டோஸ். வளரும் குழந்தையின் பற்களும் எலும்பும் வலுப்பெறும்; கால்ஷியம் குறைபாடுகளும், காலில் பிடிப்பும், தசை வலியும் வராது குழந்தைக்கு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்—
தூய கால்ஷியம் படைப்பதில்
உலக முன்னோடிகள்.



dCP/CS/9/Tam

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி



முப்பத்தாறும் அத்தியாயம்

"வெற்றி அல்லது மரணம்"

வெள்ளைக்கொடி இறக்கப்பட்டதன் பொருள் என்ன, அதன் காரணம் என்னவாயிருக்கும் என்று யோசித்தவாறு சேனாதிபதி பரஞ்சோதி ஒரு நிமிஷம் நின்ற இடத்திலே நின்றார். அந்த நிமிஷத்திலேயே அவர் மனத்தில் உதித்த கேள்விகளுக்கு விடை சொல்வது போன்ற இந்திரஜாலக் காட்சி கோட்டை மதில் நெடுகக் காணப்பட்டது. இத்தனை நாளும் வெறுமையாயிருந்த அந்த நெடிய விசாலமான மதிலின்மீது கையில் வேல் பிடித்த வீரர்கள் வரிசையாக நின்றார்கள். மாலை வேளையின் மஞ்சள் வெயிலில் அவர்கள் தலையில் அணிந்திருந்த இரும்புத் தொப்பிகளும் மார்பில் அணிந்திருந்த செப்புக் கவசங்களும், கையில் பிடித்த வேல்களின் கூரிய முனைகளும் பளபளவென்று ஒளிவீசித் திகழ்ந்தன.

''மகாராஜாதி ராஜ சளுக்க குல திலக திரிபுவன சக்கரவர்த்தி சத்தியாச்ரய புலிகேசி நீடூழி வாழ்க!'' என்று இடிமுழக்கக் குரல் ஒலிக்க, அதைத் தொடர்ந்து, ''ஜய விஜயீ பவ!'' என்று ஆயிரக்கணக்கான குரல்கள் ஏககாலத்தில் ஆர்ப்பரித்தன.

அந்த அதிசயக் காட்சியைப் பார்த்துக் கொண்டு சேனாதிபதி பரஞ்சோதி, சிறிது நேரம் திகைப்புற்று நின்றார். ''அதோ! அதோ!'' என்று அவர் பக்கத்தில் இருந்த வீரர்களில் ஒருவன் கூவிய வண்ணம் கோட்டை முன் வாசலின்



உச்சியைச் சுட்டிக் காட்டினன். அங்கே நெடிதுயர்ந்த கம்பீர உருவம் ஒன்று நின்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தது. ஆ! அந்த உருவம் புலிகேசிச் சக்கரவர்த்தியினுடையதுதான் ; சந்தேகமில்லை.

வெள்ளைக் கொடி இறங்கியதன் தாத்பரியம் பரஞ்சோதிக்கு அந்தக் கணமே நன்கு விளங்கி விட்டது. புலிகேசிச் சக்கரவர்த்தி யுத்த களத்திலிருந்து தப்பிப் பிழைத்து இரகசியச் சுரங்க வழி மூலமாகவோ, அல்லது இரவு வேளையில் பல்லவ வீரர் காவலை மீறி மதில் ஏறிக் குதித்தோ, கோட்டைக்குள்ளே வந்து சேர்ந்து விட்டார். சமாதானம் என்ற பேச்சு இனி இல்லை. யுத்தம் செய்தேயாக வேண்டும்; கோட்டையைத் தாக்கியே தீர வேண்டும்; இன்னும் ஆயிரமாயிரம் மனிதர்களின் இரத்தம் வெள்ளமாக ஓடியே ஆக வேண்டும். வாதாபி நகரம் தீப்பட்டு எரிந்தே தீர வேண்டும்.

இப்படிச் சேனாதிபதி எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் கோட்டை வாசல் உச்சியிலிருந்து திடீரென்று ஓர் அம்பு ஜிவ்வென்று பறந்து வந்தது. பரஞ்சோதியின் தலைக்கு நேராக அந்த அம்பு வந்ததைப் பார்த்து அருகில் நின்ற வீரர்கள் ஹாஹாகாரம் செய்தார்கள். ஒரு க்ஷண நேரம் அவர்கள் அவ்வளவு பேருக்கும் நெஞ்சு அடிப்பு நின்று போயிருந்தது. நல்ல வேளையாக அந்த அம்பு சேனாதிபதியின் தலைக்கு மேலே ஒரு சாண் உயரத்தில் பாய்ந்து சென்று அவருக்குப் பின்னால் பூமியில் குத்திட்டு நின்றது.

மற்றவர்கள் எல்லோரும் திகிலடைந்த போதிலும் சேனாதிபதி ஒரு சிறிதும் கலங்கவில்லை. முகத்தில் புன்னகையுடன் தரையில் பாய்ந்த அம்பை எடுக்கும்படி கட்டளையிட்டார். அதன் இறகில் ஒரு சிறு ஓலைச் சீட்டு கட்டியிருந்தது. அதை எடுத்துப் பரஞ்சோதி படித்தார். 'வெற்றி அல்லது மரணம்' என்று அதில் எழுதியிருந்தது.

பரஞ்சோதியின் இருதயத்திலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கியது போல் இருந்தது. அவருடைய உள்ளத்திலே நடந்து கொண்டிருந்த போராட்டத்துக்கு இனி இடமில்லை. மீண்டும் யுத்தம் தொடங்கி இரத்த வெள்ளத்தைப் பெருக்கும் பொறுப்புப் புலிகேசியின் தலைமேல் விழுந்து விட்டது. இனிமேல் மனத்தில் சஞ்சலம் ஏதுமின்றிக் கோட்டைத் தாக்குதலை நடத்தலாம்.

பரஞ்சோதி மேற்படி தீர்மானத்துக்கு வந்ததும், பக்கத்தில் நின்ற வீரனைப் பார்த்து, ''சடையா! அதோ அந்தக் கோட்டை வாசலில் உள்ள கணபதி விக்கிரகம் கண்ணுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டார்.



''தெரிகிறது, சுவாமி! தாங்கள் அந்த விக்கிரகத்தின் அருகில் நின்று பார்த்தபோது நானும் கவனித்தேன்!'' என்றான் சடையன்.

''நல்லது! உனக்கு மிகவும் முக்கியமான காரியம் ஒன்றைத் தருகிறேன். சூரியன் அஸ்தமித்து நன்றாக இருட்டியதும் நீயும் இன்னும் பத்து வீரர்களும் மதில் சுவர்மீது நிற்கும் சளுக்க வீரர் கண்ணில் படாமல் கோட்டை வாசலுக்குப் போக வேண்டும். போய் அந்தக் கணபதி விக்கிரகத்துக்கு ஒருவிதமான சேதமும் ஏற்படாமல் பெயர்த்து எடுத்து என்னுடைய கூடாரத்துக்குக் கொண்டு வர வேண்டும். தெரிகிறதா? நீ அந்த விக்கிரகத்தைப் பத்திரமாகக்


கொண்டு வந்து சேர்ப்பதைப் பொறுத்துத்தான் நமக்கு இந்தக் கடைசி யுத்தத்தில் வெற்றி ஏற்பட வேண்டும்!'' என்றார் சேனாதிபதி.

''அப்படியே சேனாதிபதி! விநாயகரின் விக்கிரகத்தைச் சர்வஜாக்கிரதையாகக் கொண்டு வந்து கூடாரத்தில் சேர்க்கிறேன்!'' என்றான் சடையன்.

உடனே சேனாதிபதி குதிரையைத் திருப்பிக் கொண்டு மாமல்லச் சக்கரவர்த்தி தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி விரைந்து சென்றார்.

* * *

சக்கரவர்த்தியின் கூடாரத்தில் ஏற்கெனவே மற்ற தளபதிகள் எல்லோரும் வந்து சேர்ந்திருந்தார்கள். முடிவான கட்டளையைச் சக்கரவர்த்தியிடம் பெற்றுக்கொண்டு போவதற்காக அவர்கள் வந்திருந்தார்கள். சேனாதிபதி பரஞ்சோதியின் வருகைக்காகச் சக்கரவர்த்தி



காத்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. தமக்கு அருகில் நின்றவர்களிடம் அவர் சாவதானமாகப் பேசிக் கொண்டிருந்தார். கோட்டை வாசலில் பறந்த வெள்ளைக் கொடி இறக்கப்பட்ட விவரமும், மதிற் சுவரின் மேல் சளுக்க வீரர் போருக்கு ஆயத்தமாய் நின்றதும் அங்கிருந்தவர்களுக்கு இன்னும் தெரியாது. சளுக்க வீரர்களின் யுத்த கோஷத்தை அவர்கள் பல்லவ வீரர்களின் கோஷம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அவ்விதம் அமைதி குடிகொண்டிருந்த சக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் பரஞ்சோதி புயல் நுழைவது போல் நுழைந்து முதலில் சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்தினார்.

''பிரபு!....'' என்று அவர் மேலும் பேசுவதற்குள்ளே மாமல்லர் குறுக்கிட்டுக் கூறினார்:

''சேனாதிபதி! ஏன் இவ்வளவு பரபரப்பு? இந்த மூன்று நாட்களும் சிந்தனை செய்ததில் உம்முடைய யோசனைதான் நியாயத்துக்கும் தர்மத்துக்கும் உகந்தது என்ற முடிவுக்கு வந்தேன். கோட்டையின் சரணாகதியை ஒப்புக் கொண்டு யுத்தத்தை நிறுத்துவது என்ற முடிவு செய்து விட்டேன்!'' என்றார்.

சேனாதிபதி முன்னைக் காட்டிலும் அதிக பரபரப்பை அடைந்து, கண்ணில் நீர் ததும்பத் தொண்டை அடைக்கக் கூறினார்:

''பிரபு! நான் அறிவீனன்; நான் சொன்ன யோசனை அபத்தம். தாங்கள் முதலில் இட்ட கட்டளைதான் நியாயம், தர்மம் எல்லாம். என் யோசனைப்படி மூன்று நாட்கள் தாமதித்ததே பெருந்தவறு பிரபு! கோட்டை வாசலில் வெள்ளைக்கொடி இறங்கிவிட்டது. மதிற்சுவர் மேல் சளுக்க வீரர்கள் போர்க் கோலம் பூண்டு நிற்கிறார்கள்....''

பரஞ்சோதி இவ்விதம் சொன்னதைக் கேட்டு, அங்கிருந்தவர்கள் அனைவரும் அளவற்ற வியப்பும் ஆத்திரமும் அடைந்தார்கள்.

சக்கரவர்த்தி தாம் வீற்றிருந்த ஆசனத்திலிருந்து துள்ளிக் குதித்து எழுந்து ''சேனாதிபதி! நீர் சொல்வது உண்மைதானா?'' என்று கர்ஜித்தார்.


''உண்மை பிரபு! என் கண்ணாலேயே பார்த்தேன்! பார்த்துவிட்டு நேரே இவ்விடம் வருகிறேன்.''

''இந்த மாறுதலுக்குக் காரணம் என்னவென்று ஏதேனும் ஊகிக்க முடிகிறதா?'' என்றார் மாமல்லர்.

''ஊகம் வேண்டியதில்லை, பிரபு! புலிகேசி போர்க்களத்தில் சாகவில்லை. தப்பிப் பிழைத்துக் கோட்டைக்குள்ளே எப்படியோ வந்து விட்டான். கோட்டை வாசல் உச்சியில் வாதாபிச் சக்கரவர்த்தி நின்று நமது சைனியத்தைப் பார்வையிட்டதையும் நான் கண்ணால் பார்த்தேன். சந்தேகத்துக்கு இடமில்லாதபடி இதோ புலிகேசியின் ஓலையும் இருக்கிறது. அம்பின் இறகிலே கட்டி இந்த ஓலை எனக்குக் கிடைத்தது!'' என்று சொல்லிக்கொண்டே ''வெற்றி அல்லது மரணம்'' என்று எழுதியிருந்த ஓலைத் துண்டைச் சக்கரவர்த்தியிடம் பரஞ்சோதி காட்டினார்.

''ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. வாதாபிக்கு நேரும் கதிக்குப் பாவம் பழி எல்லாம் அவன் தலைமேல்!'' என்று மாமல்லர் உற்சாகமான குரலில் கூறிவிட்டு, ''சேனாதிபதி! இனிமேல் சந்தேகம் ஒன்றுமில்லையே, கோட்டை

அன்றும் இன்றும்



நேற்று நிறுவப்பட்டது ஜோதி யூனிபில்ட் பம்பு




இன்றே காணமுடிந்தது இன்ப நாள் இதனை


முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி யூனிபில்ட் பம்பு

வெற்றி மிகு ஜோடி



ஜோதி
யூனிபில்ட்
பம்பு



ஜோதி
ஸ்டார்ட்டர்


ஆழ ஈர்ப்பு (டீப் ஸக்ஷன்) மூலம் செவ்வனே நீரிறைக்கும் திறன், அன்றாடப் பழுதுபார்ப்புத் தொல்லைக்குத் தீர்வு, மின்சாரச் செலவுகளிலே மிச்சம், நீடித்த ஆயுள்—இவை யாவும் ஜோதி யூனிபில்ட் பம்புகளிலே கிடைக்கும் முக்கிய நன்மைகள். இக் காரணத்தினால் தான் ஜோதி பம்பு காப்பியடிக்கப் படுகிறது. ஜோதி ஆராய்ச்சி நிலையத்தின் ஓயாத முயற்சிகளின் பயனாக, எப்போதுமே விவசாயிகள் இந்தப் பம்பையே கோருகின்றனர்.

ஜோதி லிமிடெட், பரோடா 390 003


quality is our creed.

everest/24/JY-tm

கிளை: எயர் லைன்ஸ் ஹோட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 85007.
வியாபாரிகள்: ராஜம் & கோ; சத்தி ரோடு, ஈரோடு; ராஜா டிரேடிங் கோ; அருணாசல ஆசாரித் தெரு, சேலம்; ஆட்டோமேட்டிக் பம்பு ஸ்பெஷலிஸ்ட்ஸ், 4 பாண்டி பஜார், சென்னை;
முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோவில் தெரு, உசிலம்பட்டி;
பிரீமியர் இண்டஸ்ட்ரீஸ், செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை.



கோபுரம்போல் உயர்ந்த பழமையின்
பெருமை, அணை கட்ட முடியாத இளமை
யின் உற்சாகம் இவை இரண்டும் கலந்த
தனிச் சிறப்பு வாய்ந்தவை சாஸ்திரி
யாரின் பட்டுப் புடவைகள்.
சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்
வடக்கு மாட வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.
போன்: 71719.
கல்கத்தா: 14-A, பார்க்ஸைட் ரோட்,
கல்கத்தா-26 போன்: 46-3976
ஜம்ஷெட்பூர்: மதுரவி சம்மேளனி,
"L" ரோடு, ஜம்ஷெட்பூர்



குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ ஃபாஸ்ஃபோமின் டானிக்
Phosfomin Iron
Phosfomin
ஃபாஸ்ஃபோமின் அயன்
பெண்களுக்கான அயன் டானிக்
ஃபாஸ்ஃபோமின் அயன் சத்துமிக்கச் சிவப்பு இரத்தம் உருவாகக் காரணமாயிருந்து உதவுவதுடன் உடலில் அயன் சத்தைச் சமநிலையில் பெற்றிருக்கவும் உதவுகிறது. இதில் பி காம்ப்ளெக்ஸ் விடமின்களும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகளும் கூட அடங்கியுள்ளது. சக்தியும் ஆரோக்கியமும் பெற்றுத் திகழ உதவுவதுடன் களைப்பையும் விரட்டுகிறது. பெண்களுக்கென்று விசேஷ முறையில் உருவாக்கப்பட்டுள்ள முதல் டானிக்—ஃபாஸ்ஃபோமின் அயன்.
ஃபாஸ்ஃபோமின் விடமின்
குடும்பத்திற்கான விடமின் டானிக்
பழரச மணம் கமழும் சிறந்த டானிக். ஆரோக்கிய முழுமையோடு உணவு நிறைவைக் கூட்டுகிறது. உங்கள் குடும்பத்தினர் நாளும் ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாய்த் திகழச் செய்ய, மிக அவசியமான பி காம்ப்ளெக்ஸ் விடமின்கள் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கியது. குடும்பம் முழுவதும் அருந்தி ஆரோக்கியத்துடன் மகிழ—ஃபாஸ்ஃபோமின் விடமின்.
ஃபாஸ்ஃபோமின் டானிக்குகள்—பசியைத் தூண்டி,
வலிவு, நோயெதிர்ப்புச் சக்தி கூட்டுவன!
SARABHAI CHEMICALS LTD.

யைத் தாக்க ஆரம்பிக்கலாமல்லவா?'' என்று கேட்டார்.

''இனி ஒரு சந்தேகமும் இல்லை பிரபு! எல்லாம் ஆயத்தமா யிருக்கிறது. இன்னும் ஒரு முகூர்த்த நேரத்தில் நமது யானைப் படை கோட்டை வாசலைத் தகர்க்க ஆரம்பித்துவிடும். நம் வீரர்கள் கோட்டை மதிலைத் தாண்டி உள்ளே பிரவேசிக்க ஆரம்பித்து விடுவார்கள்!'' என்றார் சேனாதிபதி.

பின்னர் அங்கு நின்ற தளபதிகளைப் பார்த்து, ''எல்லோரும் அவரவர்களுடைய படைகளுக்குச் செல்லுங்கள். நகரத்துக்குள்ளே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இன்னொரு தடவை நம் வீரர்களுக்கெல்லாம் ஞாபகப்படுத்துங்கள். பேரிகை முழக்கம் கேட்டதும் புறப்படுவதற்கு ஆயத்தமாயிருங்கள்'' என்றார்.

இதைக் கேட்டதும் அங்கு நின்ற தளபதிகள் எல்லோரும் சக்கரவர்த்திக்கும் சேனாதிபதிக்கும் வணக்கம் செலுத்தி விட்டு உற்சாகத்துடன் விரைந்து வெளியேறினார்கள். சக்கரவர்த்தியும், அவருடைய மெய்க்காவலர் இருவரும், மானவன்மரும், சேனாதிபதி பரஞ்சோதியும் மட்டும் அங்கே மிச்சம் இருந்தார்கள்.

''சேனாதிபதி! நகரத்துக்குள் நடந்து கொள்ள வேண்டியது பற்றி நம் வீரர்களுக்கு என்ன கட்டளை யிட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் மாமல்லச் சக்கரவர்த்தி.

''பிரபு! குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் எவ்விதத்திலும் துன்பம் உண்டாக்கக் கூடாது என்று கட்டளை யிட்டிருக்கிறேன். ஆண் மக்களில் எதிர்த்தவர்களை யெல்லாம் கொன்று விடும்படியும், பணிந்தவர்களை யெல்லாம் சிறைப்பிடிக்கும்படியும் கட்டளை யிட்டிருக்கிறேன். வாதாபி நகரில் ஒரு வீடு மிச்சம் இல்லாமல் எரிந்து சாம்பராக வேண்டுமென்று கட்டளை இட்டிருக்கிறேன். தீயை அணைக்க முயல்வோரை யெல்லாம் கொன்றுவிடும்படி சொல்லியிருக்கிறேன். நம்முடைய வீரர்கள் வாதாபி நகரிலிருந்து அவரவர்களால் முடிந்த வரையில் பொருள்களைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் கொண்டு வருவதில் பாதிப் பொருள் அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறேன். இன்னும் ஏதேனும் கட்டளையிருந்தால் தெரியப்படுத்த வேண்டும்'' என்றார் பரஞ்சோதி.

''சேனாதிபதி! நான் சொல்வதற்கு ஒரு விஷயமாவது மிச்சம் வைக்கவில்லை. எல்லாம் முன்யோசனையுடன் செய்திருக்கிறீர்கள்!'' என்றார் மாமல்லர்.

''பிரபு! இன்னும் ஒரு முக்கியமான காரியம் இருக்கிறது. அதை நம் இலங்கை இளவரசருக்கென்று வைத்திருக்கிறேன். தாங்கள் கட்டளை பிறப்பிக்க வேண்டும்!'' என்றார்.

மாமல்லர் மறுமொழி சொல்வதற்குள்ளே, ''சேனாதிபதியின் கட்டளைக்குக் காத்திருக்கிறேன்!'' என்றார் மானவன்மர்.

''வாதாபிச் சக்கரவர்த்தியின் அரண்மனையில் உலகத்திலே வேறு எந்த நாட்டு அரசர் அரண்மனையிலும் இல்லாத செல்வங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஹர்ஷவர்த்தனர் ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை தம் செல்வங்களை யெல்லாம் பிரஜைகளுக்



குத் தானம் செய்து விடுகிறார். மகா லோபியான புலிகேசி அப்படி யெல்லாம் செய்வதில்லை. முப்பது வருஷமாகச் சேகரித்த குபேரச் சம்பத்துக்கள் புலிகேசியின் அரண்மனையில் இருக்கின்றன. அந்தச் செல்வங்களைப் பத்திரமாய்ப் பாதுகாத்துக் கொண்டு வர வேண்டிய பொறுப்பை மானவன்மர் ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லாச் செல்வங்களையும் அப்புறப்படுத்திவிட்டுப் பிறகுதான் அரண்மனையை எரிக்க வேண்டும். இந்தக் காரியத்தில் மானவன்மருக்கு ஒத்தாசை செய்ய ஐயாயிரம் வீரர்களைத் தனியாக வைத்திருக்கிறேன்.''

இதை யெல்லாம் மாமல்லரைப் பார்த்தே சேனாதிபதி கூறினார்.

''சேனாதிபதி! தங்கள் விருப்பத்தை மானவர்மர் நிறைவேற்றுவார். ஆனால்

வாதாபி நகருக்குள்ளே அரண்மனைச் செல்வங்களைத் தவிர காப்பாற்ற வேண்டிய செல்வம் வேறொன்றுமில்லையா? அதைப் பற்றி என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?'' என்று மாமல்லர் கேட்டபோது அவரது குரல் கம்மிற்று.

சிவகாமி தேவியைப் பற்றித்தான் சக்கரவர்த்தி கேட்கிறார் என்பதைப் பரஞ்சோதி தெரிந்து கொண்டார்.

''பிரபு! அந்தப் பொறுப்பை மட்டும் அடியேன் வைத்துக் கொண்டிருக்கிறேன். வேறு யாரிடமும் அதை ஒப்புவிக்க எனக்கு விருப்பமில்லை'' என்றார்.

''ரொம்ப நல்லது. சத்ருக்னன் இது வரையில் செய்தி ஒன்றும் கொண்டு வரவில்லையா?''

''ஒவ்வொரு கணமும் அவனைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''சேனாதிபதி! எல்லோருக்கும் கட்டளை இட்டீர். எனக்கு மட்டும் ஒரு வேலையும் தரவில்லையே? நான் என்ன செய்யட்டும்?''

''பிரபு! தாங்கள் இங்கேயே, இந்தக் கூடாரத்திலேயே இருக்க வேண்டும் என்பது அடியேன் பிரார்த்தனை.''

''வாதாபி நகரத்துக்குள் நான் வரவே வேண்டாமா?''

''அவசியமானால் சொல்லி அனுப்புகிறேன். உடனே வந்து சேர ஆயத்தமாயிருக்க வேணும். இப்போது என்னோடு கண்ணனை ரதத்துடன் அனுப்பி வைக்க வேணும்!''

''அப்படியே அழைத்துக் கொண்டு போங்கள். இங்கே நான் முள்ளின் மேல் இருப்பது போலத்தான் இருப்பேன்.''

''பிரபு! விநாயகப் பெருமான் கருணையால் எல்லாம் நன்றாக முடியும். கவலைப்பட வேண்டாம். அவசியம் ஏற்பட்டதும் உடனே சொல்லி அனுப்புகிறேன். இப்போது விடை கொடுங்கள்.''

''போய் வாருங்கள், சேனாதிபதி! வழக்கம்போல் வெற்றி மாலை சூடித் திரும்புங்கள்!''

சேனாதிபதி கூடாரத்திலிருந்து விரைந்து சென்றார். அவர் போனவுடன், சக்கரவர்த்தி, ''இது என்ன திடீரென்று விநாயகக் கடவுளிடம் இவருக்கு இவ்வளவு பக்தி!'' என்று வியந்தார். (தொடரும்)

சுக்ராச்சாரியார்

அசுர குருவான சுக்ராசாரியாரின் வரலாற்றைப் பல கிளைக் கதைகளோடு விளக்கியிருக்கிறார்கள். கொடியவர்களான அசுரர்களுக்குக் குருவானாலும், சுக்ராசாரியார் கொடியவர் அல்ல; அவர்களை நல்வழிப்படுத்தவே அவர் முயன்றார் என்னும் கருத்தை விளக்கவே இந்நாடகம்.

ஒரு நாள் வைகுண்டத்தில் திருமாலிடம் அசுரர்களைத் திருத்த வேண்டும் என்று திருமகள் பிரார்த்தித்தாள். ஆனால் தேவேந்திரன் அவர்களை அழித்து ஒழிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டான். இந்நிலையில், திருமால் தன்னிலிருந்தே ஒருவனை அளிக்கிறார். அவன்தான் பார்க்கவன். அசுரர்களை அழித்து விடாமல் திருத்த முயல்வதுதான் நல்லது என்கிறான் அவன். அதிலிருந்து தேவேந்திரனுக்கும், பார்க்கவனுக்கும் பகை முற்றுகிறது. தன் கருத்தைநிலைநாட்டப் பல பிறவிகள் எடுத்து அனுபவம் பெறும் பார்க்கவன், கடைசியில் பிருகு மகரிஷியின் புதல்வனாகப் பிறந்து சகவரனால் விழுங்கப்படுகிறான்.



இது சுக்ராசாரியார் நாடகத்தின் முதல் பாகம். இரண்டாம் பாகத்தில் அவர் அசுர குருவாகி விண்ணவரும் மண்ணவரும் வியக்க விளங்கிய விவரங்கள் வெளியாகும். முதல் பாகம், இரண்டாம் பாகம் என்று பிரித்து நாடகங்கள் நடத்துவது மனோகரின் புதுமையான சாதனைதான்.

சுக்ராசாரியாரை ஆற்றலின் வடிவமாக, மகா தபஸ்வியாக, நல்லெண்ணத்தின் உருவாகவே காட்ட முயன்றிருக்கிறார் மனோகர். புராணக் கதைகளை மேடையில் நடத்திக் காட்டுவதையே இந்நாளில் பெரிய காரியமாகக் கொள்ள வேண்டும், நல்லதையும் தீயதையும் பகுத்துக் காட்டி, தீயது எங்கிருந்தாலும் அதை வேரோடு கெல்ல வேண்டும் என்னும் கருத்தையும் மனோகரின் நாடகங்களில் பரவலாகக் காண முடிகிறது.

கதை, வசனம் இரண்டையும் சிறப்பாக உருவாக்கியிருப்பவர் கவிஞர் ஆர். பழனிசாமி. வசனத்தைக் கணக்காகப் போட்டு நாடகத்தைப் புயல் வேகத்தில் கொண்டு செல்வது பாராட்டுக்குரியது.

''சுக்ராசாரியார்'' தந்திரக் காட்சிகளிலும் காட்சி ஜோடனைகளிலும் அக்காட்சிகளின் துரித மாற்றங்களிலும் மிக மிகச் சிறந்து விளங்குகிறது. திரைப் படம் தோற்றுப் போங்கள்!

— காந்தன்

கதை, கிதை என்று கேட்காமல், படத்தைப் பார்த்ததும் காரணம் இல்லாமலே சிரிக்க விரும்புகிறவர்களைச் சிரிப்பாய்ச் சிரிக்க அடிக்கிறது இப்படம். மனநோய் மருத்துவராக வரும் முத்துராமனும், சிவகுமாரும் வரும் காட்சிகள் சிரிக்க வைப்பதில் சிறப்பாயிருக்கின்றன. முத்துராமன் இத்தனை நாட்களாக இத்தனை நகைச்சுவை நடிப்பை எங்கே ஒளித்து வைத்திருந்தார்? அவரும் 'சோ'வும் சந்திக்கும் காட்சி ஒன்று போதும், பார்த்து ரசிப்பதற்கு, சிரிப்பதற்கும்தான்!

அக்கிரமத்தையும், அநீதியையுமே மூச்சாகக் கொண்ட அந்தக் குடும்பத்தில் தப்பித் தவறிப் பிறந்தவன் அப்பாவி அசோக். அப்பா, அம்மா, அண்ணன், தங்கை முதலியவர்கள் அநீதியின் எல்லைக்கே போய் வேலைக்காரனுக்கு விழுந்த லட்ச ரூபாய்ப் பரிசுத் தொகையை மறைத்து ஏமாற்றியதை அறிந்ததும் அவனால் தாங்க முடியவில்லை. அப்பாவி ஆண்பிள்ளை சிங்கமாக மாறுகிறான். அவர்களையெல்லாம் திருத்தப் பைத்தியம் பிடித்தவனாக நடிக்கிறான். என்னதான் பைத்தியமாகி விட்டாலும், பெற்ற பிள்ளைக்கு விஷ ஊசி போடும் அளவுக்கு எந்தப் பெற்றோரும் மாற மாட்டார்கள். அதில் எதுவும் நகைச்சுவை இருந்தாலாவது ஒழியட்டும் என்று விட்டு விடலாம். குரூரம் அல்லவா இருக்கிறது?

அப்பாவியாகவும் ஆண் பிள்ளை சிங்கமாகவும் வரும் சிவகுமார் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். அவருக்கு அண்ணனாக வரும் 'சோ' பேச்சினாலும், நடிப்பினாலும் கொட்டகையை அதிர வைக்கிறார். எம். என். ராஜம் அகம்பாவம் பிடித்த எஜமானி; பழைய மெருகு குலையாமல் தம் நடிப்பையும், உடல் நலத்தையும் 'அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல்' பேணி வருகிறார். விஜயகுமார் வேலைக்காரனாக வந்து மனம் உருகி நடித்திருக்கிறார். எஜமானனால் பரிசுச் சீட்டில் மோசடி செய்யப்பட்ட அவர் நடிப்பில் நம்மை மோசம் செய்துவிடவில்லை!

வேலைக்காரியாக வரும் சுஜாதா நடிப்புக் கலையில் தேர்ந்தவர்களால் எந்தப் பாத்திரத்தையும் தம் சொந்தப் பாத்திரமாக ஏற்று நடிக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார். இவர்கள் போதாக்குறைக்கு ஸ்ரீப்ரியாவும் ஜெயலட்சுமியும் பணக்கார வீட்டு மருமகள்மாராக வருகிறார்கள். சதா கோள் சொல்லிச் சொல்லிக் கதையை நீட்டும் சின்னப் பெண் ராஜி நன்றாய் நடித்திருக்கிறாள்.

ஐந்து பாடல்கள் இருக்கின்றன. போனால் போகட்டும். அவற்றை நாம் பொருட்படுத்த வேண்டாம். அவைகளுக்காகவும் சிரித்து வைக்கலாம்!

கதை (அப்படி ஒன்று இருந்தால்...!) அதை எழுதியவர் பஞ்சு அருணாசலம்; வசனம் சுவையாகத் தீட்டியிருக்கிறார். எஸ்.பி. முத்துராமனின் டைரக்ஷன் பாராட்டுப் பெறுகிறது.

ஆண்பிள்ளை சிங்கம்: கூண்டில் அகப்பட்டு, போட்டதைத் தின்றுவிட்டு, எப்போதாவது கர்ஜிக்கும் பலவீனமான சிங்கம்தான்!

— காந்தன்



இன்பத் தென்றல்

3

பெண்கள் எல்லோரும் போன பிறகு, ரூபாவுக்குத் தான் சற்று முன்பு பங்கெடுத்துக் கொண்டிருந்த நாடகத்தின் திரை விழுந்து விட்டதாகத் தோன்றியது. தங்கள் தங்கள் நடிப்பு முடிந்ததும் நாடகப் பாத்திரங்கள் அனைவரும் திரைக்குப் பின்னால் போய் விட்டது போலவும், தான் மட்டும் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கி அங்கேயே கல்லாக நின்று விட்டது போலவும் உணர்ந்தாள். சட்டென்று தலையை ஓர் உதறல் உதறிக் கொண்டாள். மார்பகத்தைப் பொத்தியிருந்த கைகளைத் தளர்த்தி விட்டுக் கொண்டாள். திரும்பிக் கண்ணாடியில் தன் பிரதிபிம்பத்தைப் பார்க்கலானாள்.






குல்ஷன் நந்தா

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

அரை மணிக்கெல்லாம் உடை மாற்றிக் கொண்டு அவள் வார்டனது அலுவலகத்துக்குச் சென்றாள். 'வானில்' நின்ற பெண்கள் அவளை அநுதாபத்தோடு நோக்கினர். 'இன்று ரூபாவுக்கு வந்த காதல் கடிதம் அவளைச் சரியாகப் பழி வாங்கிவிடப் போகிறது' என்ற நினைப்பில் அலைபாய்ந்தனர். போகும்பொழுது ரஜியா சொன்னது மட்டும் அவள் காதுகளில் விழுந்தது. அவள் அஞ்சுவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்: ''பாவம், ரூபா! அநியாயமாக மாட்டிக் கொண்டுவிட்டாள். ஐ ரியலி ஃபீல் ஸாரி ஃபார் ஹெர்!''

அலுவலகக் கதவைத் தட்டி ரூபா உள்ளே வர அனுமதி கேட்டாள். ஸிஸ்டர் தெரெஸா அவளைத் தலையெடுத்துப் பாராமலே, ''கம் இன்'' என்றாள்.



ரூபா பேசாமல் தலையைக் குனிந்தவாறு வார்டனை நெருங்கினாள். நியாயம் வேண்டி நீதிபதியை நெருங்கும் குற்றவாளியைப் போல் இருந்தது அவள் நிலை. அவள் தன் கடிதம் வார்டனின் மேஜைமீது 'பேப்பர் வெயிட்டு'க்குக் கீழே இருப்பதைப் பார்த்தாள். வார்டன் சில முக்கியமான கடிதங்களைப் பார்வையிட்டுக் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். ரூபாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. பயத்தினால் அவள் தொண்டை வறண்டது. உலர்ந்த உதடுகளை உமிழ்நீர் கூட்டி அடிக்கடி நாக்கினால் துழாவி விட்டுக் கொண்டாள். வார்டன் கேட்டால் என்ன சொல்வது என்று யோசிக்கலானாள். 'நடந்தது நடந்தபடி உண்மையையே ஏன் சொல்லிவிடக் கூடாது?' யோசனையின் முடிவாக அவள் உறுதி பூண்டாள், வார்டனிடம் பொய் சொல்வதில்லை என்று. இந்த முடிவால் அவள் முகத்தில் திருப்தியும் மகிழ்ச்சியும் இழையோடிப் பளிச்சிட்டன.

''இந்தக் கடிதம் உன்னுடையதுதானே?'' அறையில் நிலவின மௌனத்தைக் கலைத்தது வார்டனின் குரல்.

''ஆமாம், ஸிஸ்டர்!''

''அப்போ நீ படிப்போடு கூடவே காதல் துறையிலும் பட்டம் பெறத் தீர்மானித்து விட்டாய், அப்படித்தானே? வெரி கிளெவர்... என்ன நான் சொல்வது?''

''இல்லை, ஸிஸ்டர்! இது நிஜம் இல்லை!''

''எது நிஜம் இல்லை?''

''இந்தக் காதல் கடிதம்!''

''இது காதல் கடிதம் இல்லையா?''

''காதல் கடிதம்தான். ஆனால்....''

''என்ன ஆனால்?... யார் எழுதியது இது?''

''நானே எனக்கு எழுதிக் கொண்டது!''

''வாட்!'' ஸிஸ்டர் தெரெஸா கூவியே விட்டாள். ''அறிவோடுதானே பேசுகிறாய்?''

''நல்ல சுய அறிவோடுதான் பேசுகிறேன், ஸிஸ்டர்! உண்மையில் நான், எனக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்துக் கொள்ள விரும்பி

சென்ற இதழ்களில்.....

ஹாஸ்டல் மாணவிகளுள் ஒருத்திக்கு மட்டும் கடிதமே வருவதில்லை. அதனால் அவள் தோழிகளின் கேலிக்கு இலக்கானாள்.

அவள்தான் ரூபா. ஏழையானாலும் கெட்டிக்காரி. தான் உண்டு, தன் காரியம் உண்டு என்று தனிமையை நாடுவாள்.

அவளது அறைத் தோழி அஞ்சலோ பணக்காரி. பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாக அவளுக்கு ரூபாவைக் கண்டால் பிடிப்பதில்லை.

அன்று மாலை அவள் ரூபாவிடம் பயந்து கெஞ்சும்படியாயிற்று. அருவிக் கரையில் அவள் தனது பாய் ஃபிரண்டோடு சரசமாடுவதை ரூபா கண்டுவிட்டதுதான் காரணம். தன்னைப் பற்றி வார்டனிடம் சொல்லி விடுவாளோ என்று அஞ்சினாள். அவள் அச்சத்தைப் போக்க ரூபா கூறினாள்: ''நீ ரோமியோவைத் தேடி வந்தது போல் நானும் என் பிரின்ஸைத் தேடித்தான் வந்தேன்.'' அதைத் தொடர்ந்து ரூபாவின் உள்ளத்திலே தனது கற்பனைக்கு ஓர் உருவம் கொடுத்தால் என்ன என்று தோன்றியது! அவள் போட்ட திட்டப்படி ஒருநாள் அவள் பெயருக்கு நீல உறை ஒன்று வந்தது. அதில் வந்திருப்பது காதல் கடிதம்தான் என்று சக மாணவிகள் தீர்மானித்தனர். அதைப் பிடுங்கவும் முயன்றனர்.

அவர்கள் போட்ட கூச்சலில் ஹாஸ்டல் வார்டன் தெரெஸா அங்கு வந்துவிட்டாள். கீழே விழுந்த ரூபாவின் கடிதத்தை எடுத்துக் கொண்டு ரூபாவை விசாரணைக்குத் தன் அறைக்கு வருமாறு கூறிவிட்டு ஸிஸ்டர் போய்விட்டாள்.

மாணவிகள் அனுதாபமும் தைரியமும் தெரிவிக்க ரூபாவுக்கோ எரிச்சலாக இருந்தது. அவளுக்கு அத்தனை கோபம் வந்து தோழிகள் கண்டதே இல்லை!

னேன். அதனால் இந்தக் கடிதத்தை எனக்கு நானே எழுதிக்கொண்டேன்....''

''என்ன உளறுகிறாய்? தனக்குத் தானே காதல் கடிதம் எழுதிக் கொள்வதால் என்ன புதுப் பெருமை வந்துவிடப் போகிறது?''

''வந்து, வந்து... மற்றப் பெண்கள் பார்வையில்....''

''என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாயா?'' ஸிஸ்டர் தெரெஸா அவநம்பிக்கையோடு கேட்டாள். பிறகு கையிலிருந்த கடிதத்தைப் புரட்டிக் கிரட்டிப் பார்க்கலானாள்.

''உண்மையில் இது என்னுடைய கையெழுத்துத்தான். நீங்கள் ஒத்திட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.''

''ஐ காண்ட் பிலீவ் இட்!'' - வார்டன் ஐயக் கண்ணோடு ரூபாவைப் பார்த்தாள்.

ரூபா உடனே மேஜையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தாள். மடமடவென்று இடது கையினால் ஏதோ எழுதத் தொடங்கினாள். ரூபா இடது கையினால் இவ்வளவு இலகுவாகவும் வேகமாகவும் எழுதக் கூடியவள் என்பது வார்டனுக்குத் தெரியாது. அவள் எழுதுவதைக் கண் கொட்டாமல் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு இரண்டு எழுத்துக்களையும் ஒத்திட்டுப் பார்த்தாள். ஒருவித வேறுபாடும் தெரியவில்லை.

எழுத்துக்களை ஒத்திட்டுப் பார்த்தபின் வார்டன் ரூபாவை நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஓர் உறுதி குமிழியிட்டது. அவள் உதடுகளில் விளையாடிய எளிய இனிய புன்னகை வார்டனின் மனத்தை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. ஸிஸ்டர் தெரெஸாவுக்கு அவளையும் மீறிச் சிரிப்பு வந்தது. சிரித்தாள், சிரித்தாள்; அப்படிச் சிரித்தாள். சிரித்த சிரிப்பில் அவளுக்குத் தொண்டை வறண்டது; விக்கல் எடுத்தது. ரூபா சட்டென்று பக்கத்திலிருந்த கூஜாவிலிருந்து ஒரு தம்ளர் நீரைச் சரித்து அவளிடம் நீட்டினாள். நீர் அருந்தித் தன்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்ட பின், ''யூ ஆர் எ வொண்டர்ஃபுல் கேர்ள்!'' என்றாள் கம்பீரமான குரலில்.

'' எஸ், ஸிஸ்டர்!'' ரூபா யோசிக்காமலே பதில் சொன்னாள். பிறகு தன் தவறு தெரிய வரவே, வெட்கிப் போய் ஸிஸ்டரைப் பார்க்கலானாள்.

''பெண்கள் உனது இந்தக் காதல் கடிதத்தைப் படித்துவிட்டார்களா?''

''இதுவரையில் படிக்கவில்லை.''

''நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிட்டால் உன் கெட்டிக்காரத்தனம் அவ்வளவும் அம்பலமாகிக் குட்டு வெளிப்பட்டிருக்கும். லவ் லெட்டர் என்றால் இப்படி எழுதுவதில்லை. உனக்கு அநுபவம் பற்றாது. ஆமாம், உனக்கு அநுபவமே போதாது!''

''மெய்தான், ஸிஸ்டர்! எனக்கு இந்தக் காதல் — கீதலைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட அநுபவமேகிடையாது.''

''ஓகோ, அப்படியா? அப்போ இதைப் பார், நான் சொல்வதைக் கேளு!'' ஏதோ சொல்ல வாயெடுத்தவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். பேச்சுப் போக்கில் அவள் தன் பதவி, கௌரவம் ஆகியவற்றை மறக்க இருந்தாள். நல்லவேளையாகத் தவறுவதற்கு முன் திருத்திக் கொண்டாள். பிறகு நடுங்கும் விரல்களால் அந்தக் கடிதத்தை எடுத்து உறையில் இட்டு ரூபாவிடம் கொடுத்தாள். ''இனி நீ போகலாம்!'' என்றாள்.

''தாங்க் யூ ஸிஸ்டர்!'' ரூபா தலை வணங்கி வணக்கம் தெரிவித்தாள். பிறகு வேகமாகத் திரும்பி வெளியே செல்ல முயன்றாள். அவளை வார்டனின் குரல் தடுத்து நிறுத்தவே திரும்பிப் பார்த்தாள்.

வார்டன் தன் குரலில் இன்னும் கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டு கூறினாள்: ''இதோ, பார்! இன்னொரு முறை இது போலக் கடிதம் எழுதினால் என்னிடம் காட்டு. நான் 'ரிவைஸ்' செய்து தருகிறேன்!''

ரூபா மரியாதைக்குச் சிறிது தலையை அசைத்தாள். அப்புறம் அங்கிருந்து கழன்றால்



இந்த தீபாவளிக்கு

குமரன்

பட்டுப் புடவைகள்
பாவாடைகள்
வாங்கி மகிழுங்கள்

- கண் கவர் வண்ணங்கள் அநேக டிசைன்கள்
- நவநாகரீக நங்கைகள் தேர்ந்தெடுப்பது **குமரன்** பட்டுப் புடவைகளே!
- உற்பத்தி விலைக்கே வாங்கிட, இன்றே விஜயம் செய்வீர்!!



குமரன் சில்க்ஸ்
(பனகல் பார்க் எதிரில்)
தி. நகர், சென்னை-600017
போன்: 4435[illegible]

தயாரிப்பு நிலையங்கள்:
காஞ்சீபுரம் & ஆரணி

Sarathi-KS


"லக்ஸின்
மயக்கும்
புதிய நறுமணம்
மனதைக்
கவர்ந்திழுக்கிறது!"
என்கிறார் காஞ்சனா

போதும் என்று வெகு வேகமாக வெளியேறி விட்டாள்.

அலுவலகத்துக்கு வெளியே திறந்த வெளிக்கு வந்தபின்தான் ரூபாவினால் நிம்மதி யாக மூச்சுவிட முடிந்தது. அவள் தலையி லிருந்து ஒரு பெரும் சுமை இறங்கினாற் போலிருந்தது. இனி வரும் காலத்தில் அவ் வளவாகக் கவலைப்பட வேண்டியதில்லை என் றும் தோன்றியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் பெண்கள் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். எல்லோருடைய கண்களிலும் ஆவல் நிறைந் தது. அஞ்சுவின் முகம் மட்டும்தான் பேய றைந்தாற்போல் இருந்தது. ரூபா தனக் குள்ள பீதியில், அவனுக்கும் ரோமியோ வுக்கும் இடையே உள்ள காதலைப் பற்றி வார்டனிடம் அவிழ்த்துவிட்டிருப் பாளோ என்ற பயமே அதற்குக் காரணம். சிறிது நேரம் ரூபா அவர்களுடைய பயந்த முகங்களைக் கண்டு மனத்துள் மகிழ்ந்துகொண் டிருந்தாள். பிறகு அலட்சியமாக, "ஹலோ, கேர்ல்ஸ் !" என்று அழைத்தாள்.

"என்ன, ரூபா ! என்ன நடந்தது ?" எல்லோரையும் முந்திக் கொண்டவள் அஞ்சு.

" ஒன்றும் நடக்கவில்லை !" என்ற ரூபா பர்ஸிலிருந்து ஒரு சூயிங்கம்மை எடுத்து அஞ்சு வுக்குக் காட்டிவிட்டு வாயில் அடக்கிக் கொண் டாள்.

" அந்தக் கடிதம் என்ன ஆயிற்று ?" ரஜியா கவலையோடு கேட்டாள்.

" என்னிடம் பத்திரமாக இருக்கிறது !"

" வார்டன் ஏதும் 'ஆக்ஷன்' எடுத்துக் கொள்ளவில்லையா ?"

" 'ஆக்ஷன்' எடுக்க எத்தனையோ முயன் றார். ஆனால்....."

"ஆனால் என்ன ?"

"என் பிரின்ஸ் எழுதியிருந்த கடிதத்தைப் படித்ததும் அவர் மனம் பாகாக உருகிவிட் டது. என்ன சொன்னார், தெரியுமா ? 'நான் என் வாழ்க்கையிலே இது போன்ற அழகான, உணர்ச்சி மிகுந்த கடிதத்தைப் படித்ததே இல்லை. இதைக் காட்டிலும் நேர்த்தியான கடிதம் எந்தக் காதலனும் எந்தக் காதலிக்கும் இன்று வரையில் எழுதியே இருக்கமாட்டான். அத்தனை உயர்த்தி. போ !' என்று சொல்லி விட்டார் !"

"அப்படியானால், அந்தக் கடிதம் வார்ட னையே மந்திரம் போட்டு மயக்கிவிட்டது என்று சொல்லு !"

" அஃப்கோர்ஸ் ! அதனால்தானோ என் னவோ, 'காதல் என்பது ஒரு தூய உணர்வு. அது பாவச் செயல் அல்ல. காதலைப் பாவம் என்று கூறுபவர்கள் செத்த பின்னும் நரகத் தீயில் வீழ்ந்து வெந்து மாய்வார்கள்' என்று உணர்ச்சி மேலோங்கச் சொன்னார்."

"அப்போ நீ இனிமேல் தைரியமாக ஒளிவு மறைவின்றி உன் காதலைத் தொடரலாம் என்று சொல்லு!"

"கூடாது. தேர்வு முடிகிற வரை கடிதப் போக்குவரத்து வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். சந்திப்பு – சிந்திப்பு என்று வைத்துக் கொள்ளக் கூடாது. வார்டனின் உத்தரவு இது !"

" நீ சரி என்று சம்மதித்துவிட்டாயா ?"

"அதிகாரிகளின் உத்தரவுக்குக் கீழ்ப் படியத்தானே வேண்டும் ?" என்று பதில் கூறிய ரூபா அப்புறம் அங்கு நிற்கவில்லை. பெண்கள் அவளை நிறுத்த எத்தனையோ முயன்றார்கள். ஆனால், அவள் நிற்கவில்லை. தன் அறையை நோக்கி விரைந்தாள்.

பெண்கள் அனைவரும் வியப்போடு அவளையே பார்க்கலாயினர். ரூபா போன்ற பயங்கொள்ளிப் பெண் இத்தனை துணிச்சல் காரியாக இருப்பாள் என்பதை அவர்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

"ஷீ இஸ் எ ஸ்மார்ட் கேர்ள் !" ரஜியா ஒரு பெருமூச்சோடு கூறினாள்.

" புதிய இறக்கை முளைத்திருக்கிறது !" நிஷியின் சொற்களிலே பொறாமை தெறித் தது.

" எல்லாம் காதல் செய்யும் வித்தை !" அஞ்சு தழுதழுத்த குரலில் குழைந்தாள்.

இந்த நேரம் பார்த்து ஸிஸ்டர் தெரெஸா தனது அலுவலகத்திலிருந்து வெளியே வந் தாள். எல்லாப் பெண்களும் ஓடித் தங்கள் தங்கள் புத்தகங்களில் தலையை மறைத்துக் கொண்டு அமர்ந்து படிப்பது போல் பாவனை செய்யலாயினர். (தொடரும்)



பெருந்தலைவர்களின் வாழ்நாள் முடிவுற்றாலும் அவர்கள் உதாரண புருஷர்களாக என்றும் நம்மிடையே வாழ்வார்கள். எனவே, இறுதி மரியாதை என்பது உடலுக்கு மட்டும் தான். காமராஜருக்கும் அவரது உன்னத கோட்பாடுகளுக்கும் நாம் என்றும் மதிப்பும் மரியாதையும் செலுத்திவருவோம்.


படங்கள் (1) பிரதமர் இந்திரா பறந்து வந்தார்; கலங்கி நின்றார். அருகே ஆளுநர், அமைச்சர்கள் முதலியோர்.

(2) கடலெனப் பெருகி வந்த பெருங் கூட்டத்தின் சிறு பகுதி.

(3) தளபதிகள் ராமச்சந்திரனும் சிவாஜி கணேசனும் தலைவரை இழந்து தவிக்கும் காட்சி.

(4) ராணுவ மரியாதையைக் கடற்படை அளித்துப் பெருமையுற்றது.

(5) 'கல்கி' அதிபர் திரு சதாசிவம் அவர்களும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களும் கலங்கிக் கைகூப்பி அஞ்சலி செலுத்துகின்றனர்.



முடிவுற்ற வாழ்க்கை; முடிவில்லா லட்சியம்







பொன்னியின் புதல்வர்





சுந்தா

2. துணிவும் துணையும்

துணை நலம் ஆக்கம் தரும்....

கல்கிப் பத்திரிகை பெரிதாக அடைந்த வெற்றிக்கு ஏற்கனவே அனுபவமும் புகழும் கொண்டிருந்த அதன் ஆசிரியரின் எழுத்தாற்றல் ஒரு காரணம்; அதன் நிர்வாகியாகப் பொறுப்பேற்ற சதாசிவத்தின் செயலாற்றல் இன்னொரு காரணம்.

''வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார்'' என்ற சவால் மொழியுடன், ''பத்திரிகையைப் போட்டுப் பார்'' என்பதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். அதுவும் எப்படி? ஒவ்வொரு இதழை வெளியிடுவதும், ஒரு வீட்டைக் கட்டி, அந்த வீட்டிலேயே ஒரு கல்யாணத்தை நடத்துவதற்கு ஒப்பாகச் சொல்ல வேண்டும்.

பத்திரிகை நிர்வாகத்தில் அச்சுக்கூடப் பராமரிப்பு, விநியோகம், விற்பனை, அதன் தனிப் பொருளாதாரத்துக்கு இன்றியமையாத விளம்பரச் சேகரிப்பு — இப்படிப் பல துறைகள்; இவை ஒவ்வொன்றின் உள்ளேயும் தொடர்பாகவும் இன்னும் பல. இவற்றில் எல்லாம் வேலை செய்வோருக்கான பொது நிருவனப் பொறுப்புக்கள் வேறு.

இத்தனையையும் சதாசிவம் ஏற்று, தமது நண்பர் அந்த வகைகளில் கவலையின்றி ஆசிரியருக்கு உரிய அலுவல்களில் கவனம் செலுத்திச் சிறப்படைவதற்குத் துணை புரிந்தார்.

ஆட்களும் சாதனங்களும் பெருகிய வண்ணம் இருந்த அலுவலகத்தை எப்போதும் அருகிலிருந்து கவனித்துக் கொள்ள வசதியாக அது அமைந்த கட்டிடத்தின் மாடியிலேயே தமது இல்லத்தை அமைத்துக் கொண்டார் சதாசிவம். கல்கியும் தமது போக் ரோட் வீட்டிலிருந்து வந்து போகும் நேரத்தை அலுவலகத்துக்குப் பயன்படுத்துவதற்காக, சிறிது காலத்துக்குப் பிறகு காரியாலயத்துக்குப் பக்கத்திலேயே, டாக்டர் குருஸ்வாமி முதலியாருக்குச் சொந்தமான வீடு ஒன்றில் வசிக்கலானார்.

பேனாவும் கையுமான மேசைப் பத்திரிகாசிரியராய் மட்டும் கல்கி இருக்கவில்லை. தமது அரசியல் நெறிகள், கலைப் பற்று, உபகார சிந்தனை, பொதுப் பணி ஆர்வம் முதலியவற்றின் காரணமாய், இனி நாம் பார்க்கப் போகும் பல இயக்கங்களிலும் நன்கொடை திரட்டும் முயற்சிகளிலும் ஈடுபட்டார். அவைகளில் பெரும்பாலானவற்றில் அவருக்குச் சதாசிவம் துணையாகவும் இணையாகவும் இருந்தார். அத்துடன், அவற்றில் அரசியல் தொடர்பில்லாத பணிகளில், தமது மனைவியின் இசைக் கலையையும், கலைப் புகழையும் ஆதரவாய் அளித்தார்.

தேச பக்தியுடன் தெய்வ பக்தியும் கொண்டவர் சதாசிவம். அண்ணல் காந்தியிடமும் ராஜாஜியிடமும் பக்திக்கு ஒப்பான விசுவாசம் பூண்டவர்; காஞ்சியில் வைகும் ஜகத்குருவை நெஞ்சிலே கொண்டு தொழுபவர். பாரதியாரின் கவிப் புனலில் திளைப்பவர்; இசைக் கலையில் மெய்ம் மறந்து லயிப்பவர்; நல்லவர்க்கு உபகாரமாயும் நற்பணிகளுக்கு ஆதரவாயும் தாமாகவே பொருளுதவி செய்வதில் தனி இன்பம் காண்பவர்; முன்னே நின்று பெரும் பணிகள் செய்தாலும் அதற்கு உரிய பெருமையைச் சிறிதும் விரும்பாமல், பின்னே ஒதுங்குபவர்.

இந்தப் பண்புகளும் இயல்புகளும் சதாசிவத்தின் இளமைப் பருவம் அல்லது பாலப் பருவத்திலிருந்தே வளர்ந்து வந்தவை. அதே போல், கல்கிப் பத்திரிகையின் வெற்றிக்காக அவர் கொண்டு செலுத்திய திறமைகளும் முன்னாளிலிருந்தே பெருகி வந்தவை. பிறர் மூலம் கேள்விப்பட்ட







இந்த விவரங்களை அவர் மூலமே நேர்முகமாய் அறிந்து கொள்ள விரும்பி, அவரை இந்த நூலாசிரியன் அணுகிய போது, தம்மைப் பற்றி அதிகமாய் எழுத வேண்டாம் என்று அவர் தடை விதித்தார். அதிகமாய் இல்லாவிட்டாலும், போதிய அளவு எழுதவில்லை எனில் இந்த வரலாறு நிறைவு பெறாது என்று வற்புறுத்தியதின் பேரில், சிலவற்றை அவர் நினைவுபடுத்திக் கொண்டு சொன்னார்.

இங்கொன்றும் அங்கொன்றுமாய் அவர் சொன்ன வெவ்வேறு காலகட்டத்து நிகழ்ச்சிகளை, சுமாராய் வரிசைப்படுத்திப் பார்த்தபோது. அவற்றில் சில கல்கியின் முற்பகுதி வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றைப் போலவே இருந்துள்ளன என்பது புலனாயிற்று; இன்னும் சில நிகழ்ச்சிகள் கல்கியின் தேசியக் கதைகளில் வரும் சம்பவங்கள் போல் அல்லவா இருக்கின்றன என வியக்க வைத்தன.

1902ல் பிறந்த சதாசிவம், கல்கியைப் போலவே பொன்னி வள நாட்டின் புதல்வர். சொந்த ஊர், வால்குடிக்கு அருகே உள்ள மணக்கால் கிராமம்.

இருவருக்கும் விநாயக சதுர்த்தி ஜன்ம தினம். நாளிலும், கோளிலும் நம்பிக்கை உள்ளவர்கள். இந்தப் பொருத்தத்தையும் அவர்களுடைய பத்திரிகைக்கு அடையாளச் சின்னமாய்ப் பிள்ளையார் அமைந்ததையும் எண்ணிப் பார்க்கலாம்.

கல்கியைப் போலவே சதாசிவமும், மிகச் சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர்; இழப்பதற்கு முன்னால் தந்தை சொல் மந்திரமாகத் தெய்வ பக்தி ஊட்டப் பெற்றவர். அரசாங்கப் பொதுப்பணித் துறையில் உயர் உத்தியோகம் வகித்த தியாகராஜ அய்யர், சொந்த வாழ்க்கையிலே ஆத்மீகத் துறையில் ஈடுபட்டிருந்தார். அவர் அடிக்கடி வீட்டுக்கு அழைத்து வந்து உபசரித்துக் கொண்டிருந்த சாமியார்களைப் பார்த்துப் பார்த்துச் சிறுவன் சதாசிவத்தின் மனத்தில் காவிக் கோலத்தின் மீதே பயபக்தி உண்டாகி விட்டது.

தந்தையார் ஊட்டிய பக்தி உணர்ச்சியை, தாயார் மங்களம் அம்மாள் எண்ணிலாப் புராணக் கதைகள் மூலம் பெருக்கி வளர்த்தார்.

சிறுவனின் அழகிய முகமும், இனிய பேச்சுக் குரலும், அதைவிட இனியபாட்டுக் குரலும், அவனைச் சுற்றத்தார் எல்லோரும் செல்லப் பிள்ளையாய்க் கொண்டு சீராட்டிப் பாராட்டச் செய்தன. தந்தையார் காலமாகிவிட்ட காரணத்தால் பள்ளிப் படிப்பு நிலை

'தேசத்துக்காக உயிரைக் கூடக் கொடுப்பாயா?' என்று கேட்ட சிவா.

வ. வே. சு. அய்யருடன் கோவா வழியாகப் பயணம் செய்யும் வாய்ப்பினை அடைந்தார் சதாசிவம்.

'கல்கி'யின் பக்திக்கு ஒருவர், நட்புக்கு ஒருவர். கல்கி, ராஜாஜி, சதாசிவம்.

கலைமகள் பத்திரிகையை நிறுவிய நாராயணசாமி அய்யர் பழைய அச்சயந்திரம் ஒன்றை இங்கிலாந்திலிருந்து தருவித்து அமைக்க உதவி செய்தார்.

யாகவும் முறையாகவும் இருக்கவில்லை. வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு உற வினர்களின் ஆதரவில் இருந்து கொண்டு அவர் படிக்க வேண்டிய தாயிற்று. (அந்த நாட்களிலும், பின்னர் இளமைப் பருவத்தில் இடையிடையேயும், பொருட் கஷ்டத்துக்கு அவர் உள்ளான போது, சிலருடைய உதவியை அடைந் துள்ளார். அதன் மூலம் எழுந்த உணர்ச்சியே பிற்காலத்தில் அவரைப் பலருக்கு உதவி செய்யும் உபகாரியாய்ப் பரிணமிக்கச் செய்தது எனலாம்.)

கல்கியைப் போலவே, சதாசிவமும் பள்ளி வகுப்புக்களில் இருக்கையி லேயே ஆங்கில அறிவில் கல்லூரித் தரத்தை எட்டியிருந்தார். அவர் போன்றே இவரும் ஜி. ஏ. நடேசனின் வெளியீடுகளான தேசியப் புத்தகங்களை ஆர்வத்துடன் படித்தார். மற்றும், அவர் அக்காலத்தில் படித்த ஆங்கில நூல்களில் சில: விவேகானந்தரின் சொற்பொழிவுத் திரட்டு. அரவிந்தரின் ''வந்தேமாதரம்'', ''கர்மயோகி'' சஞ் சிகைகளின் தொகுப்புக்கள்; மார்க்கஸ் அரேலியஸின் ஆத்ம சிந்தனைகள்.

கல்கி செய்த மாதிரியே சதாசிவமும் ஆறாவது படிவம் இறுதித் தேர்வுக்கு முன்னால் தேசிய உணர்ச்சி காரண மாய்ப் பள்ளியை விட்டு விலகிக் கொண்டார் — அவராக விலகியிரா விட்டால் விலக்கப்பட்டிருப்பார். அத் துடன் அவருடைய படிப்பு அப்படியே நின்று போயிற்று. சதாசிவத்தின் நேர்த் தியான ஆங்கில உரையாடலைக் கேட் போர், அவரை ஒரு பி.ஏ., அல்லது பி.ஏ. பி.எல். பட்டதாரி என்று மதிப் பிடுவதுண்டு.

பள்ளிப் படிப்பை நிறுத்திய வருடம் 1921. அப்போது அவர் புதுக் கோட்டை ராமச்சந்திரபுரத்தில் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளி மாண வராய் இருந்தார். அதை விட்டு விலகு வதற்கு முன்னால், இருபது சக மாண வர்களுக்கு அவர் தலைமை வகித்து நாற் பது மைல் தூரம் நடந்து, திருச்சிக்குப் போய், அங்கே வருகை புரிந்திருந்த காந்தி மகாத்மாவைத் தரிசனம் செய் தார். கல்கிக்கு முதல் காந்தி தரிசனம் கிடைத்த அதே சமயம்தான் அது.


காந்தி தரிசனத்துக்குப் பிறகு, கும்ப கோணம் மகாமகத்தின்போது, சுப்பிர மணிய சிவாவைச் சந்தித்தது, சதா சிவத்தின் வாழ்க்கையில் முக்கியமான தொரு நிகழ்ச்சி. காவி உடை அணிந்த அந்தத் தேசபக்தர் கனல் பறக்கப் பேசிய பேச்சைக் கேட்டு அவரது இதயத்தில் ஆவேசம் பொங்கி எழுந்தது. மறுநாள் அந்தத் தலைவர் தற்செயலாய் அவரைக் கண்டபோது, வலிய வந்து, ''தேசத் துக்காக என்ன வேண்டும் என்றாலும் நீ செய்வாயா?'' என்று கேட்டார். ''செய்வேன்'' என்றார் இளைஞர். ''உயிரைக் கூடக் கொடுப்பாயா?'' என்று மேலும் கேட்டார் அவர். ''கொடுப்பேன்'' என்ற பதிலைக் கேட் டதும், ''அப்படியானால் என்னுடன் வா'' என்று அவரைச் சிவா கூட்டிச் சென்றார். அந்த நாள் முதல் ஆறு மாத காலம், அத்தலைவரின் பாரத சமாஜ் தொண்டர்களில் ஒருவராய் இருந்தார் சதாசிவம்.

மனத்துக்குள்ளே சுப்பிரமணிய சிவா ஆங்கிலேயர் ஆட்சியை வீழ்த்த என்ன புதிய சதித் திட்டம் வைத்திருந் தாரோ தெரியாது. வெளிப்படையாய் அவர் செய்த காரியம், தமது சமாஜத் தொண்டர்களை ஊர் ஊராய் அழைத் துக் கொண்டு போய்த் தேசிய பஜனை செய்யச் சொன்னதாகும். திருச்சி, ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அந்தப் பஜனைக் கோஷ்டி செல்கையில், சதாசிவத்தின் பாட்டுத் திறமை சிறப்பாக வெளிப் பட்டது. இனிய குரலில், உணர்ச்சி பொங்கிட அவர் பாடிய பாரதி கீதங் களைக் கேட்டவர்களில் பலர், மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்பதற்காகத் தொடர்ந்து வருவதுண்டு. அவர்களில் சிலர் அந்தப் பாடல்களின் கருத்திலே தோய்ந்து தேசபக்தர்களாய் மாறிய தும் உண்டு. அத்தகையவர்களில் ஒருவர், அப்போது சட்ட மாணவராய் இருந்த மதுரை வக்கீல் ஏ. வைத்திய நாத அய்யர் — பின்னாளில் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை புகுந்தவர்; நாட்டுக்காக அரிய செயல்களும் தியாகங்களும் புரிந்தவர்.

சதாசிவத்துடன் அந்தப் பஜனைக் கோஷ்டியில் நன்றாய்ப் பாடக் கூடிய வர்களாய் இருந்தவர்களில், ஸ்ரீநிவாச வரதன், தியாகராஜ சிவம் ஆகிய இளைஞர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

''பாரத சமாஜ் தொண்டர்களில் நான் ஒருவன்தான் சுப்பிரமணிய சிவா வுடன் ஆறு மாத காலம் நிலைத்திருந் தவன்'' என்று சதாசிவம் கூறினார். மற்றவர்கள் நிலைக்காமல் விலகிப் போனதற்கு அந்தத் தலைவரின் தொழு நோயும் முன்கோபமும் காரணங்கள்.

பாரதியாரின் ''தேசிய கீதம்'' அல் லாத ''வேள்வித் தீ'' என்ற பாடலை அந்த நாட்களில் ஒரு தேசிய அல்லது சுதேசி ஆவேசப் பாடலாகவே, சதா சிவமும் தோழர்களும் பயன்படுத்தி



நண்பர்: டாக்டர்! உங்களைப் போன வாரம் பார்க்க வரதா இருந்தேன்! ஆனா உடம்பு சரியா இல்லாததாலே வர முடியல்லே. மன்னிச்சுக்குங்க! — க.வி.


கண்ணைக்கவரும் வண்ணமய ரகங்களிலிருந்து
உங்களுக்கு தேவையானதை தேர்ந்தெடுங்கள்
VSK LMC PRI 727
லக்ஷ்மியின்
ப்ரீதி
ஸெமி ஃபுல்
வாயில் புடவைகள்
உயர்ந்த ரக பருத்தியால்
தயாரிக்கப்பட்டவை
லக்ஷ்மியின் ப்ரீதி புடவைகள்
உங்களை அழகாக
தோற்றமளிக்கச் செய்யும்.
தேர்ந்தெடுக்க பல ரகங்கள்
ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும்,
விசேஷ சந்தர்ப்பத்திற்கும்
மிக ஏற்றவை.
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்



அமெரிக்க ஆபத்துதவிகள்!

ஜனாதிபதி போர்ட் உயிருக்கு உலைவைக்க இரு முயற்சிகள் நடந்துவிட்டன. அவருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பேர்வழிகள் என்று 47,000 பேர்களைக் கம்ப்யூட்டர் கட்டிக் காட்டியிருக்கிறது! அவர்களிடமிருந்து பாதுகாக்கும் பெரும் பொறுப்பைச் சாதாரண உடையில் இருக்கும் காவலர்கள் செய்கிறார்கள். அந்த ஆபத்துப் பேர்வழிகளின் படங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு கூட்டத்தில் அவர்களில் யாரேனும் இருக்கிறார்களா என்று கண்ணோட்டம் விடுகிறார்கள். கறுப்புக் கண்ணாடி அணிந்து, தங்கள் பார்வை எந்தப் பக்கம் இருக்கிறது என்பதைக் கூட்டம் அறிய விடாமல் செய்து கொள்கிறார்கள்.

-- நியூஸ் வீக்

ஞர்கள். ''எங்கள் வேள்விக் கூடமதில் ஏறுதே தீ! தீ!'' என்று அவர்கள் மேடையிலிருந்து ஓங்கிப் பாடுவார்கள்; கீழே தரையில் விதேசித் துணிக் குவியல்களை ஜனங்கள் எரிய விட்டுக் கொண்டே, திரும்பச் சொல்லிப் பாடுவார்கள்.

அந்தப் பாரதி பாடல் பிரசார நாட்களுக்குப் பிறகு, சதாசிவத்தின் முதலாவது சிறை வாசம் — பதினைந்து மாதங்கள். அதில் ஒரு பகுதி கல்கியின் தோழமையுடன் கழிந்தது என்பதை முன்பே பார்த்தோம். அவருடைய ஒரு வருட கால இரண்டாவது சிறை வாசம் பற்றியும், அதற்கு முன் அவரும் கல்கியும் சேர்ந்து புரிந்த அரிய செயல்கள் பற்றியும் ஏற்கனவே நமக்கு விவரம் தெரியும். பின்னர், மூன்றுவது தடவையாகவும், இரண்டாவதை அடுத்தே அவர் ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

அவற்றினிடையே, 1924 இறுதியில், வடக்கே, பெல்காம் நகரில் மகாத்மா காந்தியின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் சதாசிவம் கலந்து கொண்டார். அதன் மூலம் இரண்டாம் தடவையாக அண்ணலைக் காணக் கிடைத்ததுடன், அங்கிருந்து திரும்புகையில், வ. வே. சு. ஐயருடன் கோவா வழியாகப் பயணம் செய்யும் வாய்ப்பினையும் அடைந்தார். அந்தப் பயணத்தின் பலன்களில் ஒன்று, ஐயரின் இலக்கிய உரைகளின் மூலம் கம்பனின் கவிச் சிறப்பை உணர்ந்தது; இன்னொன்று வீர விநாயக ஸாவர்க்கரைக் கண்டு பெருமை அடைந்தது. ஐயரின் லண்டன் வாசத்தின்போது அவருக்குத் தேச பக்தியுடன் பலாத்காரப் புரட்சி வெறியை ஊட்டிய ஸாவர்க்கர், அந்தமான் சிறைத் தீவிலிருந்து விடுதலை அடைந்து, ரத்தினகிரியில், நடமாட்டக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வசித்து வந்தார். ஸாவர்க்கரும், ஐயரும் சேர்ந்தும், தனித் தனியாகவும் செய்திருந்த தீரப் புரட்சிச் செயல்களை, அக்காலத்து மற்ற இளைஞர்களைப் போலவே சதாசிவமும் பாராட்டி, தாமும் ஒரு புரட்சி வீரனாய் இருக்க வேண்டும் எனக் கனவு கண்டதுண்டு. பின்னர்தான், காந்தி மகாத்மாவின் அஹிம்சா போதனையில் அந்தக் கனவு சிதைவுற்றது.

தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்த சிறிது காலத்துக்கெல்லாம் காந்திஜி தோற்றுவித்திருந்த கதர் இயக்கத்தில் சதாசிவம் பங்கு கொண்டார். முதலில் திருப்பூர் கதர் உற்பத்தி நிறுவனத்தில் பணி புரிந்தார். பின்னர் அங்கிருந்து, பெங்களூரில் அமைந்த அகில பாரத சர்க்கா சங்கத்தின் கதர் விற்பனை நிலையத்துக்கு மாற்றலானார். அவருக்கு இயல்பான இன்முகமும் இனிய பேச்சும், தாமே யோசித்துக் கையாண்ட வியாபார உத்திகளும், அலங்கார ஜோடிப்பு முறையும் அந்நிலையத்தின் விற்பனையை வெகுவாகப் பெருக்கின. அக்காலத்தில் பம்பாய் கதர் நிலையம் ஒன்றில், ஜெராஜானி என்ற பார்ஸி விற்பனையாளர் ''காதி கிங்'' என்ற பாராட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தார். அந்தக் கதர் மன்னனோடு ஒப்பிட்டுச் சொல்லும்படியான விற்பனைக் கலைஞராய் விளங்கினார் சதாசிவம். கதர் ஆடை அணிவது தேசபக்திக்கு மட்டுமல்லாமல், தூய்மைக்கும், கலா ரசனைக்கும், அறிவாற்றலுக்குமே அடையாளமாகும் எனக் கருதும்படியாக அவர் வசியப் பிரசாரம் செய்து, கதர் அபிமானிகளின் தொகையைப் பெருக்கினார்.

அவருடைய கடை, பேராசிரியர்கள், மாணவர்கள், வழக்குரைஞர்கள், கலைஞர்கள், ரசிகர்கள் முதலானோர் சந்தித்து அளவளாவும் ஒரு சங்கம் போலவே, சதாசிவத்தின் நேச உறவாடல் காரணமாய் இயங்கலாயிற்று. அந்தச் சங்கத்தாருடன் பேசியும் அவர்களுடைய பேச்சைக் கேட்டும், தமது மொழி அறிவையும், பொது அறிவையும் அவர் விருத்தி செய்து கொண்டார். பொதுத் தொடர்பு முறையைக் கற்றுக் கொண்டார். ''அந்தக் கடைதான் என்னுடைய கல்லூரி'' என்றார் அவர்.

அங்கு அவர் இருந்த ஐந்து வருடங்களில் அப்போது சர்க்கா சங்கத்தின்

முக்கிய உறுப்பினராய் இருந்த ராஜாஜி அடிக்கடி ''உத்தியோக'' முறையில் வந்து போவார். சதாசிவத்தின் திறமையை மெச்சிப் பேசி ஊக்கம் ஊட்டுவார். அக்காலத்தில் அத்தலைவருடன் சதாசிவத்துக்கு உண்டான தொடர்பு, ஒரு பக்தியாகவும், துணை செய்யும் தொண்டாகவும் பரிணமித்து, அன்னாரின் நெடு வாழ்வு நெடுகிலும் நிலவலாயிற்று.

ராஜாஜியுடன் அப்போது உண்டான தொடர்பு வளர்வதற்கும் கல்கியுடன் வெகு நாட்களாய் உள்ள நட்புப் பலப்படுவதற்கும் என்றே வாய்த்தாற்போல், சதாசிவத்தின் அடுத்த உத்தியோகம் அமைந்தது. ராஜாஜி சொல்லி கல்கி சிபாரிசு செய்து, ஆனந்த விகடனில் வாசன் அளித்த விளம்பர மானேஜர் பதவி அது.

அவருக்கு முற்றிலும் புதிதான வேலை தான். ''ஆனாலும் முன்பு கடையில் கதர் விற்றது போல் இப்போது பத்திரிகையில் இடம் விற்கவேண்டியதுதானே என்ற தைரியத்துடன் அதை ஏற்றுக் கொண்டேன்'' என்றார் சதாசிவம். விளம்பரச் சேகரிப்பு முறைகளை விரைவிலேயே அவர் கற்றுத் தேர்ந்து ஊக்கத்துடன் செய்த வேலையின் மூலம், வாசனுக்கும், விளம்பரதாரர்களுக்கும் ஒருங்கே திருப்தி உண்டாயிற்று. சில வியாபாரிகளின் சார்பில் அவரே எழுதி வெளியிட்ட சில விளம்பரங்கள், அவற்றின் புதுமையினாலும், கருத்தைக் கவரும் வாசகத்தினாலும், தமிழ்ப் பத்திரிகைகள் சம்பந்தப்பட்ட வரை, வகையான விளம்பரக் கலைக்கு முன்னோடிகளாய் அமைந்தன.

சுமார் மூன்று ஆண்டுகளுடன் ஆனந்த விகடன் உத்தியோகம் விட்டுப் போயிற்று. அதை அடுத்து ''ஹநுமான்'' என்ற புதிய பத்திரிகையில் ஏற்ற அதே வித உத்தியோகம் நாலே மாதங்களில் முடிவுற்றது. அதையடுத்து அவர் சுயேச்சையாக விளம்பர ஆலோசகர் தொழிலை மேற்கொண்டார். அதே சமயம் தமக்கு முற்றிலும் புதிதான திரைப்படத் தயாரிப்புத் துறையில் ஈடுபட்டார். ஏற்கனவே சங்கீத உலகில் புகழ் அடைந்திருந்த தமது மனைவி எம். எஸ். சுப்புலட்சுமியை வெள்ளித் திரையிலும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்பதே, அத்துறையில் அவர் அக்கறை கொண்டதற்கு முக்கிய காரணம்.

எம். எஸ். முதலாவதாக நடித்த ''சேவாசதனம்'' என்ற படத்துக்குப் பிறகு, அவர் தலைமைப் பாகம் ஏற்ற ''சகுந்தலா'' திரைச் சித்திரத்தைச் சதாசிவம் எடுத்து முடித்திருந்த சமயத்தில் தான், ஆனந்த விகடனை விட்டுக் கல்கி விலக நேர்ந்தது; அப்படி விலகிய நண்பர் தமது உதவியை நாடியதன் பேரில் அவருக்குக் கைகொடுக்க முன் வந்தார்.

புதுப் பத்திரிகை ஒன்றைச் சேர்ந்து நடத்துவது பற்றி இரு நண்பர்களும் திருவையாற்றில் கூடிப் பேசி, ஓர் உடன்பாட்டுக்கு வந்தார்கள். அவர்களுடைய பேச்சுவார்த்தையில் அப்போது திருச்சி வானொலி நிலையத்தில் நிகழ்ச்சி இயக்குனராய் இருந்த ரா. பார்த்தசாரதியும் கலந்துகொண்டார்.

அந்தத் திருவையாற்று உடன்பாடு பற்றியும் அதைத் தொடர்ந்து நடந்த முயற்சிகள் பற்றியும் சதாசிவம் தெரிவித்த விவரங்கள், 1966ல் வெளியான கல்கி வெள்ளி விழா மலரில் அவர் எழுதிய அஞ்சலிக் கட்டுரையின் பகுதி ஒன்றில் அப்படியே இருக்கின்றன:

ராஜாஜி சிந்தனை

இறைவன் உன் இதயத்தில்

ஆண்டவன் எல்லா உயிர்களின் இதயங்களிலும் வசிக்கிறான். அவனுக்குள்ள மர்மமான சக்தியினால் சகல ஜீவராசிகளையும் பொம்மலாட்டத்தில் கயிற்றினால் இயக்குவது போல் ஆட்டுவிக்கிறான். இதை கீதை கூறுகிறது.

இதிலிருந்து மற்றவர்களை எடை போடுவதற்கு முன்னால் நம்மை நாமே எடை போட்டுக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது. சுய கட்டுப்பாடும் மற்றவர்களை நம்வழிப்படுத்தும் சக்தியும் எல்லாருடைய நடத்தைக்கும் காரணமான இறைவனைப் பிரார்த்திப்பதால் கிடைக்கின்றன. சகலமானவர்களின் நடத்தையையும் நிர்ணயிப்பவன் அவனே என்கிறது கீதை.

ஆயினும் தனித் தனி ஆன்மாக்கள் என்ற அளவில் நல்லது கெட்டது உணர்ந்து நடக்க வேண்டியது நமது கடமை. கடவுளைக் காணப் புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டியதில்லை. அவன் உன் இதயத்திலேயே இருக்கிறான். அங்கே உன் பிரார்த்தனையைச் செலுத்தினால் அவனை உடனே எளிதாகக் கண்டுகொள்ளலாம். நீ வேண்டுகிற, மற்ற எல்லாவற்றையும் விடச் சிறந்ததான சஞ்சலமற்ற அமைதியைப் பெறலாம். எல்லா வித அதீத உணர்ச்சிகளும் எல்லா வித பாபங்களும் அந்த அமைதியைக் குலைப்பவை. — ரத்னகிரி கீதா மண்டல் பிரசுரம், ஏப்ரல் 27, 1963

1941ம் ஆண்டுத் தொடக்கத்தில் நடைபெற்ற தியாகப் பிரம்ம ஆராதனை விழாவில் நண்பர் கல்கியும் நானும் கலந்து கொண்டோம். அவர் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுவதாகவும், சிறையிலிருந்து வெளிவந்த பின்னர், அவரும் நானும் சேர்ந்து சொந்தப் பத்திரிகை தொடங்குவதாகவும் முடிவு செய்து கொண்டோம். நண்பர் சிறை புகுந்தார். நான் கல்கிப் பத்திரிகை தொடங்குவதற்காக முதல் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.

நான் ஈடுபட்டேன் என்று சொல்வதைவிட என் மனைவி ஈடுபட்டாள் என்று சொல்வதே அதிகப் பொருத்தமாய் இருக்கும். ஏனெனில், கல்கிப் பத்திரிகை தொடங்க மூலதனம் வேண்டும் என்பதற்காகவே அவள் ''சாவித்திரி'' படத்தில் நாரதர் பாகம் ஏற்க முன்வந்தாள். தியாகப் பிரம்மம், நாரதர் ஆகிய நாதயோகிகளின் சம்பந்தத்துடன் இப்பத்திரிகை பிறந்திருப்பது பெருமைக்குரிய விஷயம் அன்றோ!

கல்கத்தாவில் படப்பிடிப்பு நடந்து வந்தது. நண்பர் அவர்களோ திருச்சி சிறைச்சாலையில் இருந்து வந்தார். தேசத்தில் சுதந்திரப் போராட்டம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அதோடு உலக மகா யுத்தத்தின் பயங்கரங்களும் நிழலாடின. இந்த இக்கட்டான நிலைமையில் அதிதீவிர தேசிய வாரப் பத்திரிகை தொடங்கும் சாகச முயற்சியில் ஈடுபட்டது, சொந்தத் தைரியத்தில் அல்ல என்றும், விநாயகப் பெருமானின் அருளே இதற்குக் காரணம் என்றும் தோன்றுகிறது. தலைவர் ராஜாஜியும்கூடப் பத்திரிகையைத் தொடங்கி நாங்கள் சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளப் போகிறோமே என்று விசாரம் கொண்டு, இந்த யோசனையைக் கைவிடச் சொன்னார். ஆயினும் அவரது ஆத்ம பலத்தையே நம்பி நாங்கள் முழு மூச்சுடன் இப்பணியில் ஈடுபட்டோம். பத்திரிகை தொடங்குவது நிச்சயம் என்றாகி, கல்கி அவர்களும் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர், தலைவர் ராஜாஜி தமது மனமார்ந்த ஆசிகளைத் தந்து, இந்த ஏட்டினைத் தமது தரும யுத்தங்களின் குருக்ஷேத்திரமாகக் கொள்ளவும் கருணை கூர்ந்தார்.

பத்திரிகையின் மூலதனம் ராஜாஜியின் ஆசியும், எம். எஸ். சுப்புலட்சுமி கொடுத்த நிதியமும் மட்டும் அல்ல. பாலிய நாட்களிலிருந்து கல்கி அவர்களுடன் நட்புக் கொண்டிருந்தவரும், எங்கள் இருவரின் அருமை சிநேகிதருமான மாயவரம் திரு ஆர். கே. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் உள்ளமுவந்து எங்களுக்கு உதவி செய்தார்.

சுப்பிரமணிய பிள்ளை உதவிய மூலதனம், ஐந்து பங்குகளுக்கு உரிய ஐயாயிரம் ரூபாய். எம். எஸ். வழங்கியது இருபதாயிரம் ரூபாய். அதிலிருந்து பதினைந்து பங்குகள் சதாசிவத்தின் பெயரில் பதிவாயின. மீதி ஐந்து பங்குகள், கல்கியின் பெயரைப் பத்திரிகைக்கு இட்ட வகைக்காக, அவருக்கு ஒதுக்கப்பட்டன.

இந்த ஆரம்ப மூலதனத்தின் பலத்தை அக்காலப் பண மதிப்பின்படி அளந்து பார்க்க வேண்டும். முதல் இதழிலேயே மூன்றில் ஒரு பகுதியில் நிறைந்திருந்த விளம்பரங்கள், வியாபாரிகள் அளித்த பலத்துக்கும் அந்தப் பலத்தைத் இரட்டிய சதாசிவத்தின் திறமைக்கும் ஓர் அளவீடாய் இருந்தன.

சுவரை வைத்துத்தான் சித்திரம் என்பதைப் போல, காகிதத்தை வைத்துத்தான் பத்திரிகை. அந்தப் பஞ்ச காலத்தில் கல்கிப் பத்திரிகைக்குக் காகிதம் கொடுத்து உதவியவர், கல்கத்தாவில் டிடாகுர் பேப்பர் கம்பெனியிலிருந்த ஆர். எஸ். சாரி. அவரைச் சதாசிவம் அணுகுவதற்கு அவருடைய உறவினர் என்ற முறையில் ரா. பார்த்தசாரதி எழுதிய கடிதம் ஒன்று உதவியாய் இருந்தது.

இன்னொரு வகையிலும் பார்த்தசாரதி உதவியாய் இருந்தார். திருச்சி சிறையில் கல்கியும், கல்கத்தாவில் சதாசிவமும் இருக்கையில், அவர்களிடையே தகவல் போக்குவரத்தை அஞ்சல் செய்யும் தூதராக அவர் செயல்பட்டார். சிறைக் கைதி ஒருவருடன் அவர் அடிக்கடி நேரில் கொண்ட தொடர்பு, அவருடைய உத்தியோக உயர்வை ஒரு கட்டம் வரை பாதித்தது. இதை அவர் வருத்தத்துடன் அல்லாமல் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார்.

மற்றொரு நண்பர், ''கலைமகள்'' சஞ்சிகையை நிறுவிய நாராயணசுவாமி அய்யர், புது அச்சு எந்திரங்கள் கிடைக்காத அந்த யுத்த காலத்தில், செப்பனிட்ட பழைய எந்திரம் ஒன்றை இங்கிலாந்திலிருந்து தருவித்து அமைக்க உதவி செய்தார். புதுப் புது எந்திரங்கள் பின்னர் அடுத்தடுத்து வந்து இயங்குவதற்கு முன்னால், அந்தப் பழைய எந்திரம்தான், ஒன்பதாண்டு காலம் கல்கி இதழ்களை அச்சடிக்க உதவிற்று...

சுருக்கமாக இதுதான் கல்கிப் பத்திரிகை தொடங்கிய கதை. அதன் வளர்ச்சியில் முதல் பதின்மூன்று ஆண்டுகளின் கதை, அதன் முதல் ஆசிரியரின் உயிருடனும் உணர்வுடனும் இணைந்த கதை; அவருடைய எழுத்தும் புகழும் ஓங்கிய கதை. (தொடரும்)



பையன் : அப்பா ! நீ ஏன் பொய் சொன்னே ?
அப்பா : என்னடா சொன்னேன் ?
பையன் : சொப்பனத்திலகூட உனக்குப் பாசாகாதுன்னியே அன்னிக்கு என் கணக்குப் பேப்பரைப் பார்த்துட்டு. நேத்து இரவு கனவில் எனக்குப் பாஸாகி விட்டதே !

—டி. எம்.

வேண்டாத வேஷம்

~ஷி. சரோஜா~

பிரியா பிடிவாதமாக இருந்தாள்.

"எனக்கு இந்த வேஷம் மட்டும் வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று திடமாகச் சொன்னாள்.

படாதிபதி கெஞ்சினார். "இது எனக்கு மட்டும் இல்லை. உங்களுக்கும் நல்ல சான்ஸ். வங்காளக் கதை. அதில் நடித்த 'ஆர்டிஸ்ட்' கூடச் சாதாரணமாகத்தான் செஞ்சிருக்காங்க.... ஆனாலும் கூட 'அவார்டு' கிடைச்சிருக்கு. நீங்க மட்டும் எடுத்துப் பண்ணினீங்கன்னா உங்க மார்க்கெட்...."

"மார்க்கெட், மார்க்கெட்.... எனக்கு என்று ஒரு மனசு, கொள்கை இருக்கக் கூடாதா? அதை நீங்கள் புரிந்துகொள்ளவே மாட்டீர்களா?" எனச் சிடுசிடுத்தாள் பிரியா.

தயாரிப்பாளருடன் வந்திருந்த டைரக்டர் சற்று இதமாகப் பேசினார்: "உங்களுக்குத் தெரியாததில்லை. 'லைன்'லே இருக்கிற பட்டதாரிகளில் நீங்கள் அலாதி.... இந்த 'ரோல்' உங்களுக்கு அமையற மாதிரி யாருக்கும் பொருந்தாது. வில்லியா எத்தனையோ படத்திலே வந்திருக்கீங்க.... எத்தனையோ படங்கள் உங்க பாகம் டிராஜிடியாக இருந்ததாலேயே 'ஹிட்' ஆகியிருக்கின்றன...... இது ரொம்பவும் சாதாரண விஷயம்..... இதைப் போய் ஏன் நீங்க பெரிதுபடுத்தறீங்கன்னு புரியலே..." என்றார் அவர் உரிமையுடன்.

"எந்தக் காரணத்தையும் நான் சொல்லத் தயாராக இல்லை.... எனக்கு விருப்பம் இல்லை.... விடுங்கள்!" என்று அவள் அங்கிருந்து எழுந்து மாடி ஏறிப் போனாள்.

அவள் காரியதரிசி ஜகன் அவளைப் பின் தொடர்ந்து போனான்.

"மேடம்! ஒரு நிமிஷம்.... சற்று யோசனை செய்யுங்கள். நீங்க மாட்டேன்னு சொன்னப்புறம் அவுங்க அந்த ரம்யாகிட்டத்தான் நேரே போவாங்க. உங்களுக்குப் போட்டியா 'லைன்'லே இருக்கிறவங்க அவுங்க மட்டும்தான். இந்தப் படம் மட்டும் நல்லா அமைஞ்சு போச்சுன்னா, அப்புறம், 'புக்கிங்' அங்கேதான் சாயும். நாம் இரண்டாவது, மூன்றாவது இடத்துக்கு ஒதுக்கப் பட்டுவிடுவோம். உங்கள் நன்மையை மனத்தில் வைத்துக் கொண்டுதான் நான் சொல்கிறேன்!" என எடுத்துச் சொன்னான்.

பிரியா அவனை மௌனமாக ஏற இறங்கப் பார்த்தாள்.

"மிஸ்டர் ஜகன்! இந்த ஒரு படத்தில் நான் நடிக்காவிட்டால் என் 'பொஸிஷன்' பாதிக்கப்பட்டுவிடும் என்று உண்மையில் நம்பினால், உங்கள் எதிர்காலம் பற்றி இப்போதே ஒரு நல்ல முடிவு நீங்கள் எடுப்பது நல்லது. இந்த விஷயத்தில் மட்டும் என்னை வற்புறுத்த வேண்டாம்!"

தன் பிரத்தியேக அறைக்குள் அவள் புகுந்து விட்டாள். ஒப்பனைக்காரர் வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருந்தார். ஒப்பனை முடிந்து அவள் "ஷூட்டிங்"குக்குப் போக வேண்டும்.

"பிரியாக் கண்ணு! இந்த ஓவலைக் கொஞ்சம் சாப்பிடு அம்மா!" எனக் கனிவுடன் கூறியபடி அங்கே வந்தாள் அவள் தாய்.

பிரியா கோப்பையைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

"ஏம்மா, இப்படிப் பிடிவாதமா இருக்கிறே! அவுங்கதான் எது கேட்டாலும் சம்மதம்னு சொல்றாங்க.... வெளிநாட்டிலேகூட 'கால்ஷீட்' இருக்கும்கிறாங்க. வளரும் பயிரம்மா நீ! கொஞ்சம் யோசிச்சுப் பாரம்மா!" எனக் கெஞ்சினாள்.

பிரியா 'டக்' என்று தன் கையிலிருந்த கோப்பையைக் கீழே வைத்தாள்.

"இந்த 'ஓவலு'ம் எனக்கு வேண்டாம்.... அவர்கள் கொடுக்கும் 'சான்ஸு'ம் வேண்டாம். இப்போ நீ என்னைக் கொஞ்சம் நிம்மதியாக விட்டு விட்டு வெளியே போறியா?" என்று எரிந்து விழுந்தாள். மறு வார்த்தை பதில் பேசாமல் தாயார் அங்கிருந்து நகர்ந்தாள்.

* * *

அப்படிப் பிரியா மறுத்தவேஷம் வயதான தாய் வேஷமும் இல்லை. ஒழுக்கம் கெட்ட பெண்ணின் பாத்திரமும் அல்ல.

அது ஒரு இளம் விதவையின் பாகம். திருமணமான அதே மண மேடையில் தன் மாங்கல்யத்தை இழக்கும் ஓர் அபலையின் அவலக் கதையில், அவளுக்கு ஏற்பட்ட அபிலாஷைகளையும், எண்ணச் சுழல்களையும், உணர்ச்சி மோதல்களையும் நெஞ்சை அள்ளக் கூடிய வகையில் அந்த வங்கக் கதாசிரியர் சித்திரித்திருந்தார். கதை கல்யாணத்தில் ஆரம்பிக்கிறது. முதல் காட்சியின் இறுதியில் கதாநாயகி அமங்கலத் தோற்றம் பூண நேருகிறது. கடைசி வரை அப்படியே!

பிரியாவுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. ஆகவே அப்படிப்பட்ட வேஷத்தில் நடிப்பது அச்சானியமாக இருக்கும் என்று நினைப்பதற்கும் அங்கு இடமில்லை.

பின் ஏன் இந்தத் தீவிரம்?

ஒப்பனைக்காரரைக் கொஞ்சம் காத்திருக்கச் சொன்ன பிரியா, தன் பீரோவில் உள்ள 'லாக்க'ரைத் திறந்தாள். அங்கிருந்து பல நீல நிறக் காகித உறைகளில் ஒன்றைப் பிரித்தாள். அதிலிருந்து விமான ஓட்டியின் உடையில் சிரித்த முகத்துடன் நின்ற ஒரு யுவனின் படத்தை எடுத்துப் பார்த்தாள். அதனுடன் அவன் தன் உணர்ச்சிகளையெல்லாம் கொட்டி எழுதிய கடிதம் ஒன்றும் இருந்தது. அதை அவள் படிப்பது ஐம்பதாவது முறையாகக்கூட இருக்கும்.


"....உன் மேல் நான் என் உயிரையே வைத்திருக்கிறேன். உதட்டளவில் சொல்லப்படும் உபசார வார்த்தை அல்ல. 'பிளேனில்' ஏறும்போது எல்லாம் எனக்காக நான் ஆண்டவனை வேண்டுவதில்லை. 'எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், என் பிரியா எங்கே போவாள். அவளுக்காக என்

ஜீவனைக் காப்பாற்று' என்றுதான் நினைத்துக் கொள்கிறேன்.

''உன்னை நான் பரிபூரணமாக நம்புகிறேன். எந்தவிதமான சூழ்நிலையிலும் நீ உன் தாய்மையைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடியவள் என்பதை நான் அறிவேன். ஆனால் என் தாய் தயங்குகிறாள். நீ குடிப்பது பால்தான் என்று நான் கூறினாலும், நீ நிற்கும் பனை மரத்தின் நிழலைச் சந்தேகத்துடன் பார்க்கிறாள். என்னால் என் தங்கையின் வாழ்வு பாழ்பட்டுவிடுமோ என அஞ்சுகிறாள்.

''என் தங்கைக்கு நான் ஓர் இடம் தேடிக் கொண்டிருக்கிறேன், மிகவும் மும்முரமாக. அநேகமாக இன்னும் இரண்டு மாதங்களில் நிச்சயமாகிவிடும். அதற்குப் பிறகு நீயும் நானும் தனியாக ஒரு விமானத்தில் ஏறிக் கொண்டு-பூமிக்கு வெகு உயரத்தில்—சஞ்சரிப்போம்...''

புகைப் படத்தைத் தன் கன்னத்துடன் இழைய விட்ட பிரியா மீண்டும் உறையிலிட்டுப் பத்திரப்படுத்



தினாள். அந்தப் படத்தில் இருந்த சுரேஷ் அவள் கூடக் கல்லூரியில் படித்தவன். சென்னை வரும்போது எல்லாம் பிரியாவைப் பார்க்கத் தவறியதில்லை.

கல்லூரியில் படித்தபோது பிரியா தான் பிற்காலத்தில் நடிகையாகப் போகிறோம் என்று எண்ணிப் பார்த்ததுகூடக் கிடையாது. கல்லூரி நாடகம் ஒன்றுக்கு வந்திருந்த ஒரு டைரக்டர் — அவள் தந்தைக்கு வேண்டியவர் — வற்புறுத்தி அழைத்தார்.

''ஒரே ஒரு படம் மட்டும்!'' என்று சம்மதித்தாள் பிரியா. இப்போது ஐம்பது படங்கள் முடிந்து இன்னும் இருபது படங்கள் கையில் இருந்தன. எத்தனையோ விசிறி களின் கடிதங்

ஸ்ரீகாமாக்ஷி அம்பாளுக்கு லட்சார்ச்சனை

ஸ்ரீ சாரதா நவராத்திரியை முன்னிட்டு 4-10-75 முதல் 14-10-75 வரை ஸ்ரீ காஞ்சி காமாக்ஷிக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்களும், நவாவரண பூஜை, கன்யா பூஜை முதலியவைகளும் நடைபெறும். இவற்றையொட்டி லட்சார்ச்சனையும் நடக்கவிருக்கிறது. இவ்வர்ச்சனையில் பங்கு கொள்ள விரும்புகிறவர்கள் அர்ச்சனை ஒன்றுக்கு 12 ரூபாய் விதம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம் என்ற விலாசத்திற்கு அனுப்பி அம்பாளின் அனுக்கிரகத்துக்குப் பாத்திரர்களாகலாம்.

களுக்கும் சொந்தக்காரர்களின் தபால்களுக்கும் காரியதரிசி நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடும் பிரியா, சுரேஷுக்கு மட்டும் யோசித்து யோசித்து மூன்று நான் பக்கம் பக்கமாக எழுதுவாள்.

அந்தச் சுரேஷுடன் அவள் பல்லாண்டு காலம் சுமங்கலியாக, தொங்கத் தொங்கத் தாலியுடன் வாழ நினைத்திருக்கிறாள். பொட்டிழந்து, பூவிழந்து, வெள்ளைப் புடவை உடுத்தும் ஒரு கோலத்தைப் படத்துக்காகக்கூட அவளால் தாங்க முடியாது. படம் வெளி வருவதற்குமுன் அந்தக் கோலத்தை மூலைக்கு மூலை, சந்திக்குச் சந்தி விளம்பரமாக நிறுத்தி வைத்து அவள் மனத்தைத் துளைத்து எடுத்து விடுவார்கள். அப்படி ஒரு நிலைமையை அவள் எண்ணிப் பார்க்கக் கூட அஞ்சினாள்.

திருமணத் தேதி குறிப்பிட்டவுடன் படத்தில் நடிப்பதை அவள் விட்டுவிடப் போகிறாள். டெல்லியிலோ, காஷ்மீரிலோ ஜாகை. அவளைப் போல் ஒரு பெண். அவனைப் போல் ஒரு மகன். மன நிம்மதியுடன் குடும்ப வாழ்க்கையைப் பற்றிக் கனவு காணும் அவள் விதவையாக நடிக்க வேண்டுமாம்! உம்....! கோடியே கொட்டிக் கொடுத்தாலும் வேண்டாம் அந்த வேஷம் என்ற முடிவுக்கு வந்தாள் பிரியா.

அன்றைய 'ஷூட்டிங்' முடிய இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. உடல் அதிர்ச்சியினால் துவண்டு போன நடையுடன் திரும்பிய பிரியா அவசரம் அவசரமாக 'மேக்கப்'பைக் கலைத்துவிட்டுப் படுக்கப் போனாள்.

எப்போது உறக்கம் கலைந்தது என்று அவளுக்குத் தெரியவில்லை. எங்கிருந்தோ வானொலிச் செய்தி அறிக்கை காதில் விழுந்தது.

''இன்று காலை தில்லிக்கருகில் பம்பாயிலிருந்து வந்த விமானம் பெரும் விபத்துக்குள்ளாகியது. நடு வானத்தில் வெடித்துச் சிதறிய அந்த விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிர் துறந்திருப்பார்கள் என அஞ்சப்படுகிறது.... விமானத்தை ஓட்டிய காப்டன் சுரேஷ்......''

''சுரேஷ்! என அதிர்ச்சியுடன் எழுந்தாள் பிரியா. அவள் படபடப்பு அடங்கச் சில விநாடிகள் பிடித்தன. அத்தனையும் கனவு. மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. யார் வீட்டிலும் ரேடியோ வைக்கப்படவும் இல்லை. எங்கும் செய்தி வாசிக்கப்படவும் இல்லை.

பிரியா தன் காரியதரிசியைக் கூப்பிட்டாள். காலையில் கண்ட கனவு பலிக்கக் கூடாதே! ஸ்டுடியோவுக்குப் புறப்படுமுன் வடபழனி கோயிலுக்கு ஒரு முறை போய் அந்த ஆண்டவனுக்கு ஓர் அர்ச்சனை செய்ய வேண்டும். காரியதரிசி தலையை அசைத்து விட்டுப் போனான்.

குளித்து முடித்த பிரியா, தன் தலையை உலர்த்தியபடி, காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டாள். அன்றைய தபால்கள் ஒரு கட்டு — அவள் பார்வைக்குக் காத்திருந்தன. எல்லாவற்றையும் அவள் பிரிப்பதில்லை. படிப்பதும் இல்லை. அந்த ஆர்வம் எப்போதும் இருந்ததில்லை. எதையாவது ஒன்றிரண்டைப் பிரித்து நோட்டம் விடுவதுடன் சரி.

பதினைந்து நிமிஷங்கள் சென்றன. காரியதரிசிக்கு அழைப்பு போயிற்று. ஓடோடி வந்தான் ஜகன்.

''நேற்று வந்தாரே, புரொட்யூஸர்! அவர் டெலிபோன் நம்பர் உங்களிடம் இருக்கிறதா?'' எனக் கேட்டாள் பிரியா. ''இருக்கிறது, மேடம்!'' என்றான் ஜகன்.

''உடனே போன் செய்யுங்கள். அந்தப் படத்தில் — அந்த வேஷத்தில் நடிக்க நான் தயார் எனக் கூறுங்கள்......''

''மேடம்!'' — திகைத்துப் போய்க் கேட்டான் ஜகன். நேற்று இருந்த அந்த உறுதி இன்று எங்கே போயிற்று?

''ப்ளீஸ்.... நான் சொன்னதைச் செய்யுங்கள்..... கார் நேரே ஸ்டுடியோவுக்குப் போகட்டும்..... வடபழனி வேண்டாம். டிரைவரிடம் சொல்லி விடுங்கள்.''

கீழே தரையில் இளம் சிவப்பு வண்ணத்தில் திருமணப் பத்திரிகை கிடந்தது. ஜகன் அதைக் குனிந்து எடுத்துப் பிரித்துப் பார்த்துத் திகைத்துப் போனான்.

''இது... இது...?'' எனத் தயங்கினான்.

''ஆமாம்.... ஆமாம்.... காப்டன் சுரேஷின் திருமணப் பத்திரிகைதான்..... வரும் ஞாயிறன்று முகூர்த்தம்...வழக்கம் போல் எல்லாருக்கும் அனுப்புவது போல் — ஒரு வாழ்த்துத் தந்தி மட்டும் மறக்காமல் அனுப்புங்கள்!'' என்றாள் பிரியா ஜகனை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல்.

அவன் அங்கிருந்து நகர்ந்தவுடன், தன் கையில் மடக்கி வைத்துக் கொண்டிருந்த அந்தத் துண்டுக் காகிதத்தைப் பிரித்துப் படித்தாள் பிரியா.

''......என்னை மன்னித்துவிடு. என் தாய் சாகக் கிடக்கிறாள். மாலையும் கழுத்துமாக என்னைக் காண விரும்புகிறாள். அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக உன்னைவிட்டு விலகுகிறேன்.... வேறு வழி புலப்படவில்லை. நம்பிக்கைத் துரோகி சுரேஷ்......''

அந்தக் கடிதத்தைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டாள் பிரியா. அவள் மனம் சிதறியது போல் அதுவும் சிறுசிறு துண்டுகளாகக் கூடையில் விழுந்தது.

'' கணவன் உயிர் போன பிறகு மட்டும் ஒருத்தி கைம் பெண் ஆவதில்லை. மனமார வரித்தவனை வேறு ஒருத்திக்கு உயிருடன் பறிகொடுத்த பிறகு அடையும் நிலையும் அப்படித்தான்!'' என நினைத்தாள் அந்தப் பேதை.

திறமைமிக்க திலகங்கள்:

மிருதங்கக்காரர் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். வயலின்காரரின் திறமையைப் பாராட்டுவார்கள். தம்புரா மீட்டுபவரை இலட்சியம் செய்வதில்லை. ஆனால் ஓர் இசைக் கச்சேரி சோபிக்க இன்றியமையாதது தம்புரா.

வானொலியில் நாடகங்களைத் தயாரித்துக் கேட்பவர்கள் கவனத்தை முழுமையாக ஈர்க்குமாறு ஒலிபரப்புவது தம்புரா மீட்டுதல் போலத்தான். இந்தப் பணியில், என்றைக்கும் சுருதி கலையாமல் ஒரே சீராகப் பணியாற்றுபவர் ஸ்ரீமதி பார்வதி ராமநாதன். ஏறத்தாழப் பதினாறு ஆண்டுகளாக அவரது உழைப்பையும், திறமையையும் நான் கவனித்துக் கொண்டு வருகிறேன்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், அவர், பகுதி நேர ஊழியராகச் சென்னை வானொலி நிலையத்தில் சேர்ந்தபோதே அவருக்கு இந்தத் துறையில் முழு அனுபவம் இருந்தது. இவர் சிங்கப்பூரில் வசித்து வந்தவர். கணவர் திரு ராமநாதன், மலேஷியா, சிங்கப்பூர் பகுதிகளில் திறமையுடன் இருபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கிப் பிரபலமானவர். இசையில் பயிற்சியும் ஞானமும் பெற்ற ஸ்ரீமதி பார்வதி அப்போதே சிங்கப்பூர் வானொலியில் பல நாடகங்களையும், நிகழ்ச்சிகளையும் தயாரித்து அளித்துத் தாமும் அவற்றில் பங்கேற்றிருக்கிறார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இவர், சிங்கப்பூரிலிருந்து பினாங்கு போக வேண்டியிருந்தது. இவர் பினாங்கு வருவதை அறிந்த பினாங்கு வானொலி நிலையம், இவரைச் சில நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள வேண்டிவிட்டு அதைப் பத்திரிகைகளிலும் அறிவித்து விட்டது.

பார்வதி குடும்பத்தினருடன் காரில், சிங்கப்பூரிலிருந்து பினாங்குக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இடை வழியே காட்டுப் பிரதேசம். அங்கே திடீரென்று ஐந்தாறு நபர்கள், காரை நிறுத்தச் சொல்லி, சூழ்ந்து கொண்டு விட்டார்கள். என்னமோ ஏதோ என்ற பயத்தில் பார்வதியின் உடல் நடுங்க ஆரம்பித்தது.

சில நிமிடங்களில் விஷயம் தெளிவாயிற்று. அந்தப் பகுதியில், பார்வதியின் வானொலி ரசிகை ஒருவர் வசித்து வந்தார். அவர் பத்திரிகைகள் மூலம் பார்வதி பினாங்கு நகருக்கு வரப் போவதைத் தெரிந்து கொண்டு, அவரை நேரில் சந்தித்து உபசரித்து அனுப்பத் தீவிர ஆர்வம் கொண்டார். அவருடைய சகோதரர்களும் உறவினர்களும்தாம் காரைச் சூழ்ந்து கொண்டவர்கள்!

இப்போதும் இங்கேயும் இவருக்கு இவருடைய குரல் மூலமாகவே பரிச்சயமான ரசிகைகள் உண்டு. பலவித நாடக பாத்திரங்களாக மாறும் இவருடைய குரல் ஜாலத்துக்கு அடிமையானவர், திருச்சியிலுள்ள ஒரு சகோதரி. அந்தச் சகோதரி இதுவரை ஸ்ரீமதி பார்வதியைச் சந்தித்ததில்லை. ஆனாலும், அவருடைய குடும்பப் பிரச்னைகளை யெல்லாம் இவருக்குக் கடிதம் மூலம் எழுதுகிறார். இவர் பதில் எழுதினால் அந்தச் சகோதரிக்கு மன நிம்மதி, ஆனந்தம். குரலுக்கு அத்தனை மனோவசிய, சக்தி!

அவ்வப்போது வெவ்வேறு உணர்ச்சிகளை மையமாகக் கொண்ட பலதரப்பட்ட நாடகங்களை ஒலிபரப்புவதற்காகத் தயாரிக்கும்போது அந்தந்தப் பாத்திரங்களுக்கான நடிகர்களைத் தேர்ந்தெடுத்து ஒலிப்பதிவுக்கு அழைப்பது நடைமுறை. குறிப்பிட்ட தினத்தில் ஒலிப்பதிவுக்காக நிலையத்துக்கு வர முன்கூட்டியே ஒப்புக் கொண்ட நடிகைகள், சில சந்தர்ப்பங்களில் வர இயலாமல் போவதும் உண்டு.


ஒரு யுவதி பாத்திரம் ஏற்க வேண்டிய பெண்மணி வரவில்லையா? பார்வதி ராமநாதன் தயாராக இருப்பார். அதே நாடகத்தில் அம்மா பாத்திரத்தைக் காணவில்லையா? அந்த அம்மாவாகப் பார்வதி மாறிவிடுவார். இல்லை! பாட்டி வேடம் தாங்கும் அம்மையார் 'அம்பேல்' ஆகிவிட்டால், இதே பார்வதி பாட்டியாகவும், வானொலி ஒலிப்பதிவு மைக்கின்முன் பரிணமித்து விடுவார்!

இப்படித்தான் சமீபத்தில் 'சுக்கள்' என்ற ஒரு மணி நேர நாடகத் தயாரிப்பில் நடந்தது. வயதான நோயாளியான மூதாட்டிப் பாத்திரம் ஏற்கவிருந்த பெண்மணி கடைசி நேரத்தில் வரவில்லை. வழக்கம்போல் அந்தப்



பார்வதி ராமநாதன்

சொல்பவர்: 'சுகி' சுப்பிரமணியன்



பொறுப்பு பார்வதி ராமநாதனின் மேல் விழுந்தது.

'சக்கள்' நாடகம் ஒலிபரப்பானபோது வேதனையையும் விரக்தியையும் கலந்து குரலில் காட்டிய அவரது திறமைக்குப் பிரமாதமான பாராட்டுக்கள் அன்பர்களிடம் இருந்து கிடைத்தன.

கோடீசுவரர் வீட்டுப் பெண்மணியின் ஜபர்தஸ்துக் குரலிலிருந்து, குப்பத்துக் கொச்சை மொழி ஒலிக்கும் கல்வி அறிவற்ற குரல் வரை இவருக்கு எல்லாம் இயல்பாகவே வருகின்றன. சமீபத்தில் சென்னை வானொலி நிலையத்தின் மூலமாக ஒலிபரப்பப்பட்ட 'குயில் தோப்பு' தொடர் நாடகத்தில், 'ஆப்பக் கடை அலமேலு' பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஜமாய்த்தார். இடத்துக்குத் தகுந்தவாறு குரலை இப்படி மாற்றிக் கொள்ளும் ஆற்றல் பல பிரபல நடிகைகளுக்குக்கூடக் கிடையாது.

நாடகத் தயாரிப்புப் பணியில் ஈடுபடும்போது, இவர் முற்றிலும் மாறுபட்ட பார்வதியாகிவிடுவார். நடிக்கும்போது எப்படி இவருக்குக் குரல் உதவுகிறதோ, அப்படி இப்போது இவருக்குப் பொறுமை உதவுகிறது.

வானொலி நாடகத்தை எழுதிக் கொடுத்தவரின் கற்பனைக்கு, நடிக்க வந்திருப்பவர்களின் திறமையை இணைத்துப் பொருத்தி, கேட்பவர்களின் காதையும் கவனத்தையும் கவருவது தான், தயாரிப்பாளர்களின் திறமை. இதில் இவர் காட்டும் பொறுமையின் அளவைக் கண்டு பல சந்தர்ப்பங்களில் வியப்பு அடைந்திருக்கிறேன்.

இப்படித் தயாரிக்கும் நாடகங்களுக்கு இவர் பின்னணி இசையைச் சேர்ப்பதிலும் தம் சாமர்த்தியத்தைக் காண்பிப்பார். அதற்கு உதவுவது இவரிடமுள்ள இசை ஞானம். முறைப்படி இசை பயின்றவர். பாடகியாக வரவேண்டுமென்று ஆரம்பத்தில் ஆசைப்பட்டவர். 'இந்தக் கட்டத்தில் இப்படி இசை அமைந்தால் சோபிக்கும்' என்று நான் நினைத்துக் கொண்டிருப்பேன். என் நினைவை எப்படியோ உளவு கண்டுபிடித்தது போல் அதே இசையை இவர் நாடகத்தில் சேர்த்திருப்பார்.

திரைப்படங்களை ஒரு மணி நேர ஒலிச் சித்திரங்களாகச் சுருக்கி ஒலிபரப்பும் கலையிலும் இவருக்கு நல்ல தேர்ச்சி உண்டு. அவ்வப்போது அறிவிப்பாளராகவும் இவர் குரல் ஒலிக்கும்.

கலைப் பணியையும் குடும்பப் பொறுப்புக்களையும் சமநோக்குடன் பார்த்து இரண்டு துறைகளையும் ஒன்றையொன்று பாதிக்கவிடாமல் கவனித்துக் கொள்ளும் திறமைசாலி பார்வதி ராமநாதன்.

கேட்டு எழுதியவர்: **கோமதி சுவாமிநாதன்**

வட்ட மேஜை

இந்திரா பார்த்தசாரதியின் 'நிவுகளைப்' படித்து மகிழ்ந்தேன். 'நிவுகள்' என்ற தலைப்பே ஓர் அழகிய உருவகமாய்க் கவிதைத் தன்மையோடு மிளிர்கிறது. விறுவிறுப்பு மிக்க ஒரு மர்ம நாவலை இலக்கிய ஆழத்தோடும் படைத்துவிடுவது என்பது அத்துணை எளிய செயல் அல்ல. அதைத் திறம்படச் செய்து வெற்றி கண்டிருக்கிறார் இந்திரா பார்த்தசாரதி. 'ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கிவிட்டன'விலிருந்து பெரிதும் மாறுபட்ட முறையில் இந்தக் கதை அமைந்திருப்பது ஆசிரியரின் திறமைக்கு ஒரு சான்று. அரைத்த மாவையே அரைக்காமல் புதிது புதிதாகப் படைத்துத் தரும் இவர் பாராட்டுக்குரியவர். நிவுகளை வெளியிட்டதனால் கல்கியின் பெருமை மேலும் உயர்கிறது.

திருப்பூர், 22-9-75 — க. கிருஷ்ணன்

'இசை பொங்கட்டும். இசைவு தழைக்கட்டும்!' என்ற யஹூதி மெனுஹின்' அவர்கள் கனிவுறு கட்டுரையை இந்த 28-9-75 'கல்கி' இதழில் கண்டு மகிழ்ந்தேன். 'சங்கீதத்துக்குச் சாராம்சமாவது மௌனமே' என்ற கருத்தையும் படித்தேன். இந்த மௌனமாகிற சாராம்சத்தை ஒரு நியதி வகுத்துக் கொண்டு கடைப்பிடித்தொழுகியவர் அண்ணல் காந்தியடிகள். அவர் பிறந்த தின வாரத்தில் இந்தச் சங்கீத வாரம் அமைந்துள்ளதையும் கண்டு குதூகலிக்கிறது உள்ளம்.

பல ஆண்டுகளுக்குமுன் காஞ்சீபுரத்தில் நான் வசித்தபோது அப்புண்ணிய நகருக்கு வயலின் மாமேதை யெஹூதி மெனுஹின் வருகை புரிந்தார். ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கு வந்து பெருமாளைத் தரிசனம் செய்தார். ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸன்னதி முன் நின்று கொண்டு ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்கச் சிறிது நேரம் வயலின் வாசித்தார் மெனுஹின்.


ஆனாலும் நிந்தன் அதிசயங்கள் யாவினுமே
காணுமுதம் படைத்த காட்சி மிக விந்தை
யடா!
காட்டு நெடுவானம் கடலெல்லாம்
விந்தையெனில்
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்
மிசை இல்லையடா!
—பாரதியார்

இசை வெல்க!

சென்னை
25-9-75 — வி. ச. வாசுதேவன்

'நிவுகள்' கதை என்பதைவிட நடைச் சித்திரம். ரொம்பப் பிரமாதமான முடிவு. குற்றம் செய்பவர்கள் தப்பிவிடக் கூடாது என்ற பழைய நெறி தவறாத நேரத்தில் புதுமையான கதைப் படைப்பு மனத்தை அள்ளுகிறது. 'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம், உள்ளே பார்த்தால் ஈரும் பேனும்' என்று ஒரு பாட்டு. அதை நன்கு புலப்படுத்திவிட்டது கதை. விஜயா நெஞ்சோடு ஒட்டி உறவாகிவிட்டாள்.

விட்டலபுரம்
22-9-75 — வேங்கடாச்சாரி


"உன் காதலனைக் கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தியே, கடைசியிலே ஏன் அவரை வேண்டாம்னு சொல்லிட்டே?....."
"எனக்கு ஏற்ற ஹிப்பியா இருக்க அவர் லாயக் கில்லேன்னு தோணித்து... அதனாலேதான்..."
"அப்படி அவர் என்ன செய்தார்?"
"எங்க அப்பா அம்மா சம்மதம் தந்த உடனேயே திருப்பதி போய் மொட்டை அடிச்சுண்டு வந்துட்டார்!"
"எங்க ஆபீஸிலே ஒரு ஹிப்பி இருந்தான்.. அவன் ஆபீஸ் டைப்ரைட்டரைத் தன் தலை முடியிலேயே ஒளிச்சு வெளியே கொண்டு போய் விட்டுட்டான்!"
"இதென்ன பிரமாதம்! எங்க ஆபீஸிலே இருந்த ஹிப்பி இதே போல ஆபீஸ் காரரையே தட்டிண்டு போயிட்டான்!"
"அந்த ஆபீஸிலே இண்டர்வியூவுக்குப் போனியே, என்ன ஆச்சு?"
"வேலை கிடைக்கும் போலத்தான் இருந்தது... ஆனால் நான்தான் வேண்டாம்னு சொல்லிட்டேன். அந்த வேலை செய்ய மனச்சாட்சி இடம் தரலே..."
"அப்படி என்ன வேலை?"
"சோப்பு, சீப்பு, ஹேர் ஆயில் விற்கிற வேலை!"
"அத்தான்! நான் ஸ்நானம் பண்ணி மூன்று மாதமாகிறது!" என்று நாணத்துடன் கணவ னிடம் கூறினாள் ஹிப்பினி.
"இதென்ன பிரமாதம்! நான் குளித்து ஆறு மாதம் ஆகிறது!" என்றான் அப்பாவி ஹிப்பிக் கணவன்.
ஹு... ஹா...
ஹி... ஹீ... ஹிப்பி!
கருத்து: தராஜா
"என்ன சார் அநியாயமா இருக்கிறது! சாமான்கள் அதிகமாக எதுவும் இல்லே.... லக்கேஜ் டிக்கெட் வாங்கச் சொல்றீங்களே?"
"உங்க தலைமுடிக்குத்தான் சார் லக்கேஜ் டிக்கட்!"
"ஹிப்பி மாதிரி தலையை வளர்த்துண்டு இருப்பானே உங்க பிள்ளை, அவனை எங்கே சார் காணோம்?"
"சலூனுக்குப் போயிருக்கான் சார்...."
"ஓகோ! க்ராப் பண்ணிண்டு வர்றதுக்கா?... வெரி குட்!"
"இல்லே சார்! தலையைப் பின்னிண்டு வர்றதுக்காகப் போயிருக்கான்!"
டெலிவிஷன் நிலையத்துக்கு ஒருவர் டெலிபோன் செய்து, "சார்! ஒளிபரப்பு சரியாகவே இல்லே.. எங்க செட்டிலே கறுப்பு கறுப்பா வெறும் நிழல் தான் தெரியறது!" என்று புகார் செய்தார்.
"மன்னியுங்கள் சார்... நீங்கள் பார்த்துக் கொண் டிருப்பது 'ஹிப்பிகளுடன் பேட்டி' நிகழ்ச்சி!... அவர்களுடைய தலைகள்தான் அந்தக் கறுப்பு நிழல்கள்!" என்றார் டி.வி. நிலைய அதிகாரி!



11. இரண்டாவது பலி

போலீஸ் தலைமையகம், துப்பறியும் பிரிவில், புயல் மாதிரிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் ரமேஷ். அப்போது காலை மணி ஐந்து. இன்னும் இருள் பிரியவில்லை.

''சேகர்! உடனே வாரண்டுகளைப் பிறப்பிக்க ஏற்பாடு செய். தாமதிக்கிற ஒவ்வொரு விநாடியும் எதிரிக்கு அனுகூலமாகிவிடும்.... சீக்கிரம்....'' என்று படபடத்தான்.

ஆனால் சேகர் துளிக்கூட அவசரம் காட்டவில்லை. கையிலிருந்த காகிதத்தை நாலாக மடித்து மேஜைமீது சாவதானமாக வைத்து விட்டு, அதன் மீது ஒரு கண்ணாடிக் குமிழை இன்னும் சாவதானமாக வைத்தான். ''முதல்லே உட்காருப்பா ரமேஷ்—''

''நோ....நோ....நோ... சாவகாசமாக உட்கார்ந்திருக்கிற நேரம் இல்லே இது. எதிரி அங்கே அடுத்த கொலைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறான். இன்னொரு பலி விழப் போகிறது....ஒரு குற்றமற்ற உயிர் பறி போகப் போகிறது.''

''அப்படியா?''

''ரமேஷுக்கு இந்தக் கேள்வியின் நிதானம் எரிச்சலூட்டியது. ''சேகர்; நேற்றிரவு டாக்டர் பணிக்கரைத் தீர்த்துக் கட்ட யாரோ முயன்றார்கள். மயிரிழையில் உயிர் தப்பினார்.''

''அது எனக்குத் தெரியும்'' என்றான் சேகர்.''

''உனக்குத் தெரியுமா? எப்படி?'' என்று ஆச்சரியத்தால் கூவினான் ரமேஷ், சேகரின் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''அதுகூடத் தெரிந்துகொள்ள முடியாவிட்டால், இந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கவே நான் லாயக்கில்லை. அப்பனே! மனிதனுக்கு இரண்டு கண்கள்; போலீஸுக்கு ஆயிரம் கண்கள். மறந்து விடாதே!'' மேஜையின் மீதிருந்த பொத்தானை அழுத்தினான் சேகர். ''எஸ், ஸார்!'' என்று ஓர் ஆர்டர்லியின் தலை அடுத்த கணம் உள்ளே நீண்டது. ''இரண்டு நல்ல ஸ்டிராங் காப்பி.''

தலை 'எஸ் ஸார்!' என்று பின்வாங்கி மறைந்தது. சேகர் திரும்பிச் சொன்னான்: ''நேற்று மதுர பவனத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்று சமையல்காரன் புதிதாக உதவிக்கு ஓர் ஆளை அழைத்து வந்தானே கவனித்தாயா?''

''உதவி ஆள் ஒருவனைப் பார்த்தேன். ஆனால் குறிப்பிட்டுக் கவனிக்கவில்லை.''

''போலீஸ்காரர்களை விடப் பத்திரிகை நிருபர்கள் ரொம்ப உஷாராக இருக்க வேண்டும் மிஸ்டர் ரமேஷ்! கண்களையும் காதுகளையும் கூர்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.''

''உபதேசத்துக்கு ரொம்ப நன்றி.''

''பரிகாசத்துக்குச் சொல்லவில்லை ரமேஷ்! மேல்நாட்டில் போலீஸாரை விடப் பல நிருபர்கள் எத்தனையோ சிக்கலான கேஸ்களில் மர்மங்களைத் துப்புத் துலக்கியிருக்கிறார்கள்.''

''நான் அதைவிட ஒரு படி மேலேயே போய்விட்டேன். தாரிணி தேவியின் மரண மர்மத்தைக் கண்டுபிடித்து விட்டேன். கொலையாளிகள் நால்வரில் மூவர் இப்போது மதுர பவனத்திலேயே வசமாக மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். நீ இப்போதே அரை டஜன் கான்ஸ்டபிள்களுடன் வந்தால் 'கபக்'கென்று பிடித்துக் கையில் விலங்கு மாட்டிவிடலாம்.''

சேகர் சிரித்தான். சுழல் நாற்காலியில் ஒரு வட்டம் சுற்றிவிட்டுப் பழைய இடத்துக்கே திரும்பி வந்தான். ''என்ன

சிரிக்கிறாய்?'' என்று ஆக்கிரத்துடன் கேட்டான் ரமேஷ்.

''ஒன்றுமில்லை. ஒரு குற்றவாளிக்கே இங்கே நாங்கள் 'தத்திணைதோம்' போடுகிறோம்.... நீயானால் நாலு பேரைக் கொண்டு வந்து நிறுத்துகிறேன் என்கிறாயே என்றுதான் சிரித்தேன். யார் அந்த நாலு தடியர்கள்?''

''மதுரபவனம் மானேஜர் ஜெயராம் ஒன்று—''

''பேஷ், அப்புறம்?''

''கோவிந்து இரண்டு — டாக்டர் பணிக்கர் மூன்று!''

''நிறுத்து! என்ன சொன்னாய்? டாக்டர் பணிக்கரும் இந்தப் பட்டியலில் வருகிறாரா, என்ன? பேஷ்!''

''ஏன் கூடாது? மதுர பவனத்துடன் சம்பந்தப்பட்ட ஆள்தானே இவரும்? தாரிணியின் மோதிரத்தைத் திறந்து மூடி விஷமம் செய்ததாக அவரே ஒப்புக்கொண்டார்...ஒரு காப்ஸ்யூலேயும் காட்டினார்... அவர் சொன்ன கதை அழகாகத்தான் இருந்தது. ஆனால் அதுவும் ஜோடிக்கப்பட்டதாக ஏன் இருக்கக் கூடாது?''

''அது கதையானால் செங்கற் குவியலை அவர் மீது தள்ளி அவரைக் கொல்ல ஏன் முயற்சி நடந்தது?''

தாரிணியின் கொலைக்கு முன் ஒன்றுசேர்ந்த கொலையாளிகளுக்குள், கொலைக்குப் பிறகு கருத்து வேறுபாடு தோன்றியிருக்கலாம்... இந்த டாக்டரை நம்பக் கூடாது என்று கொலையாளி நினைத்திருக்கலாம்.''

''சரி, நாலாவது ஆள் யார்?''

சர்வர் உள்ளே வந்தான். அவன் கையில் ஆவி பறக்கும் கப்-ஸாஸர்கள் இருந்தன. டிரேயை அவன் வைத்துவிட்டுப் போகும்வரையில் இருவரும் பேசாமல் இருந்தார்கள். போன பிறகு தலா ஒரு 'கப்'பை எடுத்துக் கொண்டார்கள்.

''சரி, அந்த நாலாவது ஆள் யார்?'' என்று மீண்டும் கேட்டான் சேகர்.

''நாலாவது ஆளின் முகம்தான் தெரியவில்லை. அவன் மதுரபவனத்தில் இல்லையென்று தோன்றுகிறது. வெளியிலிருந்து உன்னை கோஷ்டிக்கு உதவுபவனாக



இருக்கலாம். மாமல்லபுரக் காட்டில் விமலாவைத் தூக்கிச் சென்ற இருவரில் ஒருவனாகவும் இருக்கக் கூடும்.''

''கூடும், இருக்கலாம் என்றே சொல்கிறாயே ரமேஷ் — உன் பத்திரிகை பாஷையில். இதை வைத்துக் கொண்டு போலீஸார் ஒருத்தரை எப்படிக் கைது செய்ய முடியும்? உன் செய்தி தவறாக இருந்தால் நீ நாளைக்கே திருத்தம் போட்டுவிடலாம். இங்கே ஆசாமி கோர்ட்டுக்குப் போய்விடுவான் அப்பா!''

''ஆக நீ என்னதான் சொல்கிறாய்?''

''எனக்குத் தீர்மானமான சாட்சியம் வேண்டும். சாட்சியம் கிடைக்கும் வரையில் சந்தேகாஸ்பதமான ஆசாமிகளைச் சுற்றி வலையை விரித்துவிட்டு நான் காத்திருக்கத்தான் முடியும்.''

''அதற்குள் கொலையாளி இன்னொரு கொலையைச் செய்து விட்டால்? தப்பி ஓடி விட்டால்?''

''அந்த இரண்டாவது கொலையில் நிச்சயமாக ஏதாவது தடயம் கிடைத்துவிடும். வலை அவனைச் சுற்றி நெருக்க ஆரம்பித்துவிடும்!''

''அப்படியானால் தாரிணி தேவியைக் கொன்ற ஆளைப் பிடிக்க இன்னொர் உயிரை விலையாகக் கொடுக்கவும் நீ தயார் என்று சொல்?''

''நான் அப்படிச் சொல்லவில்லை.''

''பின்னே உன் பேச்சுக்கும் மெத்தனத்துக்கும் என்ன அர்த்தம்? நேற்றிரவு டாக்டரைக் கொல்ல ஒரு முயற்சி பிரத்தியட்சமாக நடந்திருக்கிறது; அது தொடரப் போகிறது என்று நிச்சயமாகத் தெரியவும் செய்கிறது. இந்த நிலையில்—''

''ரமேஷ்!'' என்று அழுத்தம் திருத்தமாக அழைத்தான் சேகர். ''நான் உறுதியாகச் சொல்கிறேன்.—கொலையாளியின் கை டாக்டரின் கழுத்து வரையில் வரவே வராது. வராதபடி நான் முன்ஜாக்கிரதை ஏற்பாடுகளையெல்லாம் நேற்றிரவே எடுத்து விட்டேன்! இப்போது டாக்டர் தம்பதிகள் மதுர பவனத்திலேயே இல்லை. அது தெரியுமா உனக்கு?'' என்றான்.

''தெரியாது. நான்தான் விடிந்ததும் விடியாததுமாக இங்கே ஓடிவந்து விட்டேனே!''

''அதற்கும் முன்பாகவே டாக்டர் தம்பதிகளை அவர்களுடைய சொந்த வீட்டுக்குப் போகச் செய்து விட்டேன். காலை மூன்று மணிக்கே அவர்கள் கிளம்பிப் போய்விட்டார்கள். தாரிணி தேவி கொலை பற்றி ஒரு ஈக்காக்காயிடம் கூட வாயைத் திறக்கக் கூடாது என்றும், 'காலையில் நான் வந்த பின் என்னிடம் மட்டும்தான் பேசலாம்' என்றும் அந்தப் புது சமையற்காரன் மூலம் டெலிபோனில் சொல்லிக் கிளம்பிப் போகச் செய்து விட்டேன். இப்போது உங்கள் டாக்டர், கொலைகாரனின் கைக்கு எட்டுகிற தூரத்தில் இல்லை. திருப்திதானா?''

''இப்போதுதான் நிம்மதியாயிற்று. எனக்கு டாக்டர் மீது விசேஷ அன்பு ஒன்றுமில்லை. ஒருவேளை அந்த டாக்டரே கூட—''

''அங்கேதான் நீ தப்புச் செய்கிறாய். டாக்டர் மீது சந்தேகப்படக் காரணமே கிடையாது. டாக்டரின் பூர்வோத்தரம் முழுவதும் என் கையில் இருக்கிறது. சின்னக் குருவி ஃபானில் அடிபட்டு விழுந்துவிட்டால் கூட மனிதன் அழுதுவிடுவார்.... அவரை நான் ஏராளமான போலீஸை அனுப்பி ஒரு கோட்டையையே எழுப்பிப் பாதுகாத்துவிட முடியும். ஆனால் அதை நான் செய்யப் போவதில்லை. அவரை நான் தூண்டில் புழுவாக உபயோகித்துக் கொள்ளப் போகிறேன். அதை விழுங்கப் பெரிய மீன் வரும். அப்போது வலையை இழுத்துப் பிடித்துப் போட்டுக் கொண்டுவிடப் போகிறேன்....''

''கொலையாளி டாக்டர் வீட்டுக்கு இதற்குள்ளேயே வந்திருந்தால்–?''

''எந்தக் கொலையாளியும் திட்டமின்றி எதையும் செய்ய மாட்டான். சூழ்நிலைகளை நன்றாக ஆராய அவகாசம் எடுத்துக்கொள்வான். டாக்டர் இப்போது இருக்குமிடம் புது இடம். அந்த இடத்து நெளிவு சுளிவெல்லாம் அவனுக்கு முதலில் தெரிய வேண்டும். அதற்குச் சிறிது அவகாசம் பிடிக்கும்.''

''அப்படியானால் டாக்டருக்கு இன்னும் இரண்டு, மூன்று நாட்களுக்கு 'ஆயுள்' இருக்கிறது என்று சொல்.''

''எனக்குத் தெரியாது. நீ புலி வேட்டைக்குப் போயிருக்கிறாயா? ஷிகாரி மரத்தின் மீது மறைந்திருப்பான். கீழே ஓர் ஆட்டுக் குட்டி கட்டியிருக்கும். ஷிகாரி, அதைத் தின்ன வரும் புலியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பான். எத்தனை நாட்கள் அல்லது மணி காத்திருக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியாது.''

''கரெக்ட்! ஆனால் இந்தக் கேஸில் ஷிகாரி ஸ்தலத்தில் இல்லாமல், இங்கே காப்பி சாப்பிட்டுக் கொண்டு, மின்விசிறி அடியில் ஹாயாக அல்லவா இருக்கிறார்?''

''ரமேஷ்! நம் கால் கட்டை விரலில் ஓர் ஈ வந்து உட்காருகிறது. கண் அதைப் பார்க்கிறது. மூளைக்குச் செய்தி அனுப்புகிறது. மூளை போய் ஈயை விரட்டுகிறதா? மூளையிலிருந்து உள்ளூற ஓர் அர்ஜண்ட் செய்தி கட்டை விரலுக்குப் போகிறது. கட்டை விரல் அசைந்து ஈயை விரட்டுகிறது இல்லையா?''

''வேதாந்தமாகவே 'பேசிக் கொண்டிரு.''

''இது வேதாந்தமில்லை. செய்தி போக்குவரத்துத் தத்துவம். இந்தத் தலைமையகம் என்கிற மூளையிலிருந்து உரிய கட்டளைகள் எப்போதோ கிளம்பிப் போய்விட்டன. டாக்டர் பணிக்கர் வீட்டுக்கு எதிர்ப் பங்களாவில் நேற்றிரவிலிருந்து மாறுவேடத்தில் எங்கள் ஆள் ஒருவர் இருக்கிறார்.... சந்தேகாஸ்பதமான எது தென்பட்டாலும் உடனே அவர் அந்த வீட்டு டெலிபோனைப் பயன்படுத்துவார்.''

அறைச் சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் ஐந்து தடவை அடித்தது. ''ஓ! நன்றாகப் பொழுது விடிந்து விட்டதே! நான் கவனிக்கவே இல்லையே!'' என்று எழுந்தான் ரமேஷ்.

''புறப்படுகிறாயா? சரி – ஆனால் கொண்டு வந்ததைக் கொடுக்காமலே போகிறாயே!'' என்றான் சேகர். திடுக்கிட்டான் ரமேஷ். ''எதைச் சொல்கிறாய்?''

''நீ வேலை மெனக்கெட்டுத் தேடி எடுத்துக் கொண்டு வந்திருக்கிற காஸெட்டைத்தான்!''

''ஓ, ஆமாம். மறந்து போய்விட்டேன். ஆனால், அடப்பாவி! உனக்கு எப்படி, அது தெரிந்தது?'' என்று வியப்புடன் கேட்டான் ரமேஷ்.

''நீ உள்ளே வரும்போதே பார்த்துவிட்டேன். போலீஸ்காரருக்கு ஆயிரம் கண்கள் அப்பா. அது மறைவாயிருந்தாலும் உன் சட்டைப் பையில் அதன் வடிவத்தைக் காண முடிகிறதே!''

''நீ பொல்லாதவனப்பா'' என்று சிரித்துக்கொண்டே காஸெட்டை எடுத்துக் கொடுத்தான் ரமேஷ். ஆனால் அவனால் சிரிக்க முடியவில்லை. பாதியிலேயே அந்தச் சிரிப்பு உடைந்து துயரக் குரலாக வெளிப்பட்டது. ''சேகர்! விமலாவோட ஹாண்ட் பாக்கைத் தேடிக் கண்டு பிடித்து விட்டேன். ஆனால் அவளைக் கண்டுபிடிக்க முடியலையே; இன்றோடு மூன்று நாட்களாகி விட்டதே, அவள் காணாமல் போய். நம்ப விமலா கிடைப்பாளா சேகர்'' என்று வெடிக்கும் குரலில் கேட்டான்.

''நிச்சயம் கிடைப்பாள். எப்போது இந்தக் காஸெட் கிடைத்து விட்டதோ, அப்போதே அவள் இருக்கும் இடம் பற்றிய குறிப்பும் கிடைத்து விட்டது என்றே கொள்ளலாம்.... இரு, இரு... ரிக்கார்டரைக் கொண்டு வருகிறேன். டேப்பைப் போட்டுப் பார்க்கலாம்'' என்றவாறே உள்ளே போகத் திரும்பினான் சேகர்.





மீண்டும்
உபயோகிக்கத்
தக்க பிளாஸ்டிக்
பேக்கில் வருவது
பிஜ் ஒன்றுதான்.
+
மகத்தான
சேமிப்பு!
5-refill pack
BIZ
multipurpose
CLEANING
POWDER
WITH SUPER DETERGENT
3 kg
Made in India
GODREJ SOAPS PVT. LTD.,
BOMBAY-79.
A Godrej PRODUCT
BIZ
CLEANING
POWDER
WITH SUPER DETERGENT
முதலில் மீண்டும்
உபயோகிக்கத்தக்க இந்த
அழகிய பேக்கை வாங்குங்கள் —
அதற்காகத் தனியாக
ஒன்றும் பணம் கொடுக்க வேண்டாம்!
5-தடவை நிரப்பிக்கொள்ளக் கூடிய பாலி-
பையிலிருந்து அவ்வப்போது அதில் மீண்டும்
நிரப்பிக்கொள்ளுங்கள்...ஒவ்வொரு முறையும்,
35%க்கும் அதிகமாக நீங்கள் சேமிக்கிறீர்கள்.
உயர்ந்த சேமிப்புக்கென
ஒரு கி.கி.யில் மற்றும்
இரு கி.கி.யில் பேக்குகளும்
கிடைக்கின்றன.
பிஜ்
கோத்ரெஜ் தயாரிப்பு
தன்னிகரற்ற க்ளீனிங் பவுடர் • உன்னதமான சேமிப்புத் திட்டம்
CMGS-68-172 Tam

'போகாதே நில்! அதைவிட முக்கியமான விஷயம்' என்பது போல் மேஜையின் மீதிருந்த டெலிபோன் அலறியது. 'சட்' டென்று பாய்ந்து ரிஸீவரை எடுத்தான். ''ஸார்—நான் எய்ட்மென்த் கிராஸ் ரோட்டில் 40ம் எண்ணுள்ள வீட்டிலிருந்து—''

''சரி, விஷயத்தைச் சொல்'' என்று கடுகடுத்தான் சேகர்.

''ஸார், காரியம் மிஞ்சி விட்டது. அரை மணிக்கு முன் டாக்டர் பணிக்கர் இறந்து விட்டார்.''

''என்ன? டாக்டர் பணிக்கர் இறந்துவிட்டாரா?'' என்று இருப்பிக் கூவினான் சேகர். ''எப்படி?''

''தினசரி அதிகாலை நாலு மணிக்கு மாடி வராந்தாவில் 'பாத் டப்'பில் அவர் குளிப்பது வழக்கம். இன்று குளிக்கும்போது பாத் டப்பில் மூழ்கி இறந்து விட்டார்.''

''நோ...நோ...நோ...'' என்று அழுத்தம் திருத்தமாக, கோபமாக உறுமினான் சேகர். ''நீ கோட்டை விட்டு விட்டாய். அவரைக் கொலையாளியிடம் விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டாய்....எங்கே போனாய்...அதைச் சொல் முதலில்?''

''சரியாக நாலரை மணிக்கு நீங்கள் போனில் கூறியபடி....''

''என்ன? நாலரை மணிக்கு நான் உனக்குப் போன் செய்தேனா?... என்ன சொன்னேன்?''

''லாடின் தெருவுக்குப் போய் பதினேழாவது தந்திக் கம்பத்தின் அடியில் அரை மணி காத்திருக்கும்படி கூறினீர்களே... அங்கே தான் போயிருந்தேன். அரை மணி வரை தகவல் இல்லாததால் திரும்பி வந்துவிட்டேன். வந்து பார்த்தால் இங்கே டாக்டர் வீட்டில் ஒரே அல்லோலகல்லோலமாக இருக்கிறது.''

''யூ இடியட்!'' என்று கோபம் தாளாமல் கத்தினான் சேகர். ''முதலில் உன்னைச் சீட்டுக் கிழித்து அனுப்பிவிட்டுத்தான் மறு வேலை... நான் எங்கே உனக்குப் போன் செய்தேன்... யாரோ என்போலப் பேசியதை....''

''ஸார்! இன்டலிஜென்ஸ் ஹெட்குவார்ட்டர்ஸ், இன்ஸ்பெக்டர் சேகர் பேசுகிறேன் என்றீர்களே, ஸார்... மேலே கேட்கவிடாமல் 'சொன்னதைச் செய் மடையா!' என்று அதட்டினீர்களே, ஸார்—''

''நீ சரியான மடையன்தான்... உன்னைப் போய் இந்த முக்கியமான வேலைக்கு அனுப்பின நானும் மடையன்தான்.''

''ஸார்....''

''பேசாதே.... பேசவே உனக்கு வாய் இல்லை. ஷட் அப். பத்து நிமிஷங்களில் அங்கே வருகிறேன்'' — டக்கென்று போனைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பினான் சேகர்.

ரமேஷைப் பார்த்ததும் அவன் தலை தன்னையறியாமலேயே தாழ்ந்தது.

''ரமேஷ்! 'நான் ரொம்பக் கெட்டிக்காரன்; எல்லாம் திட்டமிட்டுச் செய்திருக்கிறேன்' என்று சற்று முன் உன்னிடம் ஜம்பம் அடித்துக்கொண்டேனே... அதற்குக் கடவுள் என்னை இதோ தண்டித்து விட்டார், ரமேஷ். டாக்டர் பணிக்கரை அவர்கள் தீர்த்து விட்டார்கள்!'' என்றான். அவன் குரல் கம்மியிருந்தது.


ரமேஷும் வாயடைத்துப் போய்த்தான் நின்றான். (தொடரும்)

சரஸ்வதி தேவிக்குத் தனி ஆலயம்!


சரஸ்வதி தேவிக்கென்று தனி ஆலயம் ஒன்று தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுக்கா கூத்தனூர் கிராமத்தில் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. மாயூரம் - திருவாரூர் பஸ் ரூட்டில் பூந்தோட்டத்தில் இறங்கி ஒரு பர்லாங்கு தூரம் நடந்தால் புராதனமான இக்கோவிலை அடையலாம்.


இக்கிராமத்தில் சிவாலயத்தில் துர்க்கை, விஷ்ணு துர்க்கையாகவும் பெருமாள் கோவிலில் பெருமாள், லட்சுமியை மடியில் அமர்த்தி லட்சுமி நாராயணப் பெருமானாகவும், சரஸ்வதி அம்பாள் தவக் கோலமாகவும் அமைந்து இருக்கின்றனர். இவ்வூரில் எங்கும் காணாத வகையில் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகியோர் தனிக் கோவில்களில் அமைந்திருப்பது விசேஷமாகும். — வீ. கிருஷ்ணமூர்த்தி




ராஜேஷ்
கன்னா

நாள் தோறும் கண்கவர் புதிய தோற்றம்
மக்கள் போற்றும் உயர்தர மாற்றம்





வாரத்திற்கு வாரம் புத்தம் புதிய டிசைன், புதிய பாணி, கலைத்திறன் கொண்ட துணிமணிகள்.வழங்குவதோ பாம்பே டையிங். செயற்கையிழை ஷர்ட்டிங்குகளின் ஒப்பற்ற உயர் தரம் 50/50, 67/33, 80/20 மற்றும் நூற்றுக்கு நூறு பாலியெஸ்டர் பிரிண்டுகள்,பாலியெஸ்டர் டெனிம்கள் மற்றும் டெக்ஸ்சரைஸ்ட் ஸூட்டிங்குகள்.

கபித்தான் பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள்

வாட்ரீன் பாலியெஸ்டர் ஸூட்டிங்குகள்

ஆயிரமாயிரம் வகைகள்—
அன்றாடம் புதுப்புது டிசைன்கள்!

பாம்பே டையிங்

BDM-27A tam



■ தமிழக ஆளுநர் கே. கே. ஷா, கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், திரு முத்தையா செட்டியார் அளவளாவுகின்றனர்.

அன்பு வளரட்டும், ஆராய்ச்சி நடக்கட்டும்!

'நீர் என்ற வார்த்தையின் அடிப்படையில் நீரஜா, நீரதா போன்ற பல வடமொழிச் சொற்கள் வழங்கி வருகின்றன. தண்ணீர் என்ற பொருள்படக் கூடிய நீர் என்ற சொல்லை சம்ஸ்கிருதத்துக்கு வழங்கியதே தமிழ்தான். பண்டைய உபநிடதங்கள், வேதங்கள் போன்ற நூல்களில் 'நீர்' என்ற சொல்லையே காணோம். அந்நாட்களில் 'ஆப' என்ற சொல்லைத்தான் உபயோகித்து வந்திருக்கிறார்கள்.' — இவ்வாறு டாக்டர் சுநீதிகுமார்சட்டர்ஜி கூறியதாக டாக்டர் ராஜமன்னார் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

தமிழ், சம்ஸ்கிருதம், மற்ற இந்திய மொழிகளை ஆராய்வதற்காக நிறுவப்பட்ட கழகத்தின் கருத்தரங்கு அண்மையில் சென்னையில் நடைபெற்ற போதுதான் மேற்கண்ட விஷயத்தை டாக்டர் பி. வி. ராஜமன்னார் குறிப்பிட்டார்.

இந்தக் கழகம் தோன்றிய வரலாறு சுவையானது.

நமது ஆளுனர் திரு கே. கே. ஷா சென்னைக்கு வந்ததிலிருந்தே தமிழ் கற்கத் தொடங்கினார் என்பது நாடறிந்த விஷயம். இதிலிருந்து பல விஷயங்கள் அவருக்குப் புதுமையாகவும் அதிசயமாகவும் தோன்றலாயின. அத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருப்பதி வேங்கடேசுவரா பல்கலைக் கழகத்தில் ஓர் அகில இந்திய மொழி

இயல் மகாநாடு நடைபெற்றது. அதில் பங்கு கொண்ட திரு ஷா அதற்கென இப்பொருள் பற்றிச் சுமார் இருபத்தேழு புத்தகங்கள் படித்தாராம். பின்னர் மூந்நூறு அறிஞர்கள் இருந்த சபையில் தமிழ்தான் மூத்த பாஷை என்றார். பண்டிதர்களில் பெரும்பாலோர் கே. கே. ஷாவின் வாதத்தில் பசை இருக்கிறது. அது ஆராய வேண்டியதுதான் என்றார்கள்.

அத்தகைய விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சி நடத்த செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்கள் நிதி உதவி அளிக்க முன்வந்தார். முன்னாள் ராஷ்டிரபதி வி. வி. கிரி அவர்கள் சென்ற ஆண்டு ஜூன் மாதம் இந்தக் கழகத்துக்கு அடிக்கல் நாட்டினார். திரு மு. அருணாசலம் இக் கழகத்தின் தமிழ்த்துறை இயக்குனராகச் சேர்ந்தார். சமீபத்தில் சம்ஸ்கிருதத் துறை இயக்குனராக திரு பி. திருஞானசம்பந்தம் சேர்ந்திருக்கிறார்.







■ இயக்குனர் திரு மு. அருணாசலம், ■ டாக்டர் வே. ராகவன், ■ டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.

இக்கழகத்தின் முதல் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசிய கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் தொல்காப்பியத்துக்கும் வடமொழி இலக்கண நூலான பாணினீயத்துக்கும் ஒப்புவமைகளையும் வேறுபாடுகளையும் விளக்கினார். தொல்காப்பியனார் பாணினிக்குக் காலத்தால் முற்பட்டவர் என்று குறிப்பிட்டார்.

தலைமையுரை நிகழ்த்திய ஆளுநர் கே.கே. ஷா அவர்கள், 'பிரித்தாளும் கொள்கையில் வல்லுனர்களான பிரிட்டிஷார் வடமொழி-தமிழ் மொழித் துவேஷப் புகையை வளர்த்து விட்டிருக்கிறார்கள். இதன் விளைவாகத் தெளிவான ஆராய்ச்சியும் உண்மையும் நமக்குக் கிடைக்காமற் போய்விட்டது. இனியாகிலும் உண்மையை உணர முயல வேண்டும்' என்று கருத்தைத் தெரிவித்தார்.

தமிழிலும் சரி, சம்ஸ்கிருதத்திலும் சரி, எழுத்துக்கள் 'அ, ஆ' என்றும் 'க ங ச ஞ' என்றும், 'யரலவழ' என்றும் ஒரே மாதிரி வருகின்றன. ஆகவே இவ்விரு மொழிகளும் ஒரு தாயின் சேய்களாக இருக்க வேண்டும். அல்லது இவற்றில் ஒன்று தாயாக இருக்க வேண்டும்.

முதலில் 'க' என்றுதான் இருந்தது. இதிலிருந்து பிரிந்த வடமொழி க, க்க, க, க என்று நான்கு ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்களை உண்டாக்கிக் கொண்டது என்று எண்ணத் தோன்றுகிறது. இக்கருத்தையும் வாதத்தையும் இனியும் வளர்த்துக் கொண்டு போனால் தமிழிலிருந்து வடமொழி வந்தது என்று எண்ணத் தோன்றுகிறது.

புதை பொருள் ஆராய்ச்சி, ஆதி மக்கள் இன ஆராய்ச்சி, மொழி இயல் ஆராய்ச்சி எல்லாம் செவ்வனே செய்யப்பட்டால் இது வரை மேல் நாட்டினர் கொண்டிருந்த கருத்துக்கு மாறுபட்ட புது உண்மைகள் கண்டு பிடிக்கப்படலாம் என்று கவர்னர் உறுதியாக நம்புகிறார். அதற்கு வசதியும் வாய்ப்பும் அளிப்பதே இக்கழகத்தின் நோக்கம்.

கழகத்தின் முதல் மகாநாட்டில் ஆராய்ச்சியுரை நிகழ்த்திய பலப்பல அறிஞர்களையும் கேட்பதற்குக் கூடிய அறிஞர்களின் கூட்டத்தையும் கண்டபோது இந்த ஆராய்ச்சிகள் உண்மைகளை அறியும்பொருட்டே நடக்கும் என்றும், வேண்டாத துவேஷத்தை வளர்த்து விடாது என்றும் உறுதி பிறந்தது.

— எஸ். வி. எஸ்.

விட்டுக்கொடுக்கவும் வீரம் வேண்டும்

கால்பந்தாட்டத்தில் நடுவராக இருப்பவர் கால்பந்தாட்டச் சட்டத்தை வார்த்தைக்கு வார்த்தை பின்பற்றி நடக்க ஆரம்பித்தால் பல பிரச்னைகள் எழும்! சட்டத்துக்கும் பங்கம் இல்லாமல், சூழ்நிலையையும் கவனித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும்.

இலங்கைக் குழுவுக்கும் தமிழகக் குழுவுக்கும் இடையே விட்டல் கோப்பை ஆட்டம் விறுவிறுப்பாக இருந்து முதல் 'லெக்'கில் இலங்கைக் குழு ஒரு கோல் போட்டது. இரண்டாம் 'லெக்' ஆட்டத்தில் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றிக் கடைசிவரை சென்றது. ஆட்ட முடிவுக்கு ஒரு சில நிமிஷங்கள் இருக்கும்போது விசில் ஒலித்தது!

''ஆ! இன்று ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்து விட்டது! இலங்கைக் கோஷ்டி இறுதி ஆட்டத்துக்கு வந்து விட்டது!'' என்று சிலர் குதித்தனர். ஆனால் அடுத்த கணம் நடுவரின் தாக்குதல் இலங்கைக் கால்பந்தாட்டக் குழுவினரை அயர வைத்தது!

''தமிழக ஆட்டக்காரர்கள் இருட்டிவிட்டது (Light failure) என்று கோருவதால் மறுபடியும் ஆட்டம் நடக்கும் (Replay)'' என்று தீர்ப்பு வழங்கினார் நடுவர். அவ்வளவுதான்! எங்கும் ஒரே களேபரம்.

''இந்தத் தீர்ப்பை வாபஸ் வாங்காவிட்டால் நாங்கள் விமானம் ஏறிவிடுவோம்!'' என்றார்கள் இலங்கை ஆட்டக்காரர்கள்.

தமிழகக் கால்பந்தாட்டத் தலைவர் விட்டலும், காரியதரிசி திரு கோவிந்தராஜும் கெட்டிக்காரர்கள்! நடுவரின் தீர்ப்புப்படி தமிழகக் கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற வேண்டிய மறு ஆட்டத்தை வாபஸ் வாங்கினர். இதனால் தமிழகக் கால்பந்தாட்டத்தினரின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை முன்னணிக்கு வந்து தமிழகத்தின் பெருமை உயர்ந்துவிட்டது!

இறுதி ஆட்டத்தில் கர்நாடகமும் இலங்கையும் மோதின. முதல் 'லெக்'கில் இரண்டு கோலும், இரண்டாவது 'லெக்'கில் ஒரு கோலும் போட்டு இலங்கைக் கோஷ்டியை வென்று விட்டது கர்நாடகம்.

விட்டல் கோப்பையை வென்ற கர்நாடகக் கோஷ்டியின் தரமான ஆட்டக்காரர்கள், ஹிந்துஸ்தான் விமானத் தயாரிப்புக் கம்பெனி போன்ற ஸ்தாபனங்களில் பணியாற்றுகிறவர்கள். ஜாம்பியா நாட்டைச் சேர்ந்த 'முடாண்டோ' கர்நாடகக் கோஷ்டிக்கு ஆடி அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தார். இவர் மைசூரில் 'ஃபார்மஸ்யூடிகல்' கல்லூரியில் (மருந்துகள் தயாரிப்பு பற்றிய கல்வி) இறுதி ஆண்டுத் தேர்வுக்குப் படிக்கிறார். கால் பந்தாட்டத்தில் இவரது தேர்ச்சி மாபெரும் வெற்றியைக் கர்நாடகத்துக்குத் தேடித் தந்து விட்டது!

— குண்டுமணி



படம்: ராவ்



அருள்மிகு

தேவி கருமாரியம்மன் திருக்கோவில்

திருவேற்காடு, சென்னை - 600 077

தொலைபேசி எண்: 69220

வேண்டுகோள்

அருள் திரு தேவி கருமாரியம்மனின் அருங்கருணைப் பெரும் புகழ் அகிலமெங்கும் பரவி வருகின்றது. ஆகம முறைப்படி இராஜ கோபுரம் கொண்டு அனைத்து உயிரினங்களையும் பரிபாலித்து அன்னை தேவி கருமாரி திருக்கோயில் கொண்டு உறையும் இடம் **திருவேற்காடு** ஒன்றே.

இருப்பினும், அன்னை தேவி கருமாரியின் அருஞ்சக்திப் பெரும் புகழ் அனைத்துலகும் பரவி வருவதால் ஆங்காங்கு அன்னையின் திருப்பெயரில் ஒரு சில திருக்கோயில்கள் பக்தர்களால் — அன்னை மேற்கொண்டுள்ள ஆர்வ மிகுந்த பக்திப் பெருக்கினால் — அமைக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் அமைக்கப்பட்ட திருக்கோயில்களின் பேரில் நன்கொடைகளும் அவர்களால் பெறப்பட்டு வருகின்றன. அவ்வகை நன்கொடைகளுக்கும் இத்திருக் கோயிலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென இதன் மூலம் தெரி விக்கப்படுகிறது.

திருவேற்காடு அம்மை தேவி கருமாரியின் திருக்கோயிலின் சார்பில் கீழ்க்கண்ட திருப்பணிகள் நடந்து வருகின்றன.

1. மூன்றும் பிரகாரத் திருமதில்
2. சேவார்த்திகளின் ஓய்வுக் கூடங்கள்
3. கடைநிலை ஊழியர் குடியிருப்பு
4. அர்ச்சகர்கள் குடியிருப்புகள்
5. வாகன மண்டபம்
6. சிறுகுடில் இட்டம்

அன்னை தேவி கருமாரியின் உபாசகர் **தவத்திரு இராமதாஸ் சுவாமிகள்** அவர்களின் தலைமையில் உள்ள திருப்பணிக் குழுவின் சார்பில் தெப்ப உற்சவத்துக்காகப் புதிய திருக்குளமும் (திருச்சாம்பர் பொய்கை) அதனை யொட்டி அறுபத்தி நான்கு கால் கருங்கால் மண்டபமும் தொடங்கப்பெற்று திருப்பணிகள் நடந்து வருகின்றன.

அருள்திரு தேவி கருமாரியம்மனின் திருக்கோயில் திருப்பணிகளுக்கு வழங் கப்பெறும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து விதி விலக்குஉண்டு

எனவே, அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு நன் கொடை முதலியன வழங்க விரும்பும் பக்தர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்

திருவேற்காடு - சென்னை-600 077

தவத்திரு **சுவாமி இராமதாசர்**
தேவி உபாசகர்


ரா. கோவிந்தராஜி
அறங்காவலர்

சி. வி. இராஜாராம், பி. ஏ. பி. எல்., நிர்வாக அலுவலர்

கண்ணைக் கவரும் காமிராக் கலை

'ஒரு படம் ஆயிரம் சொற்களுக்கு இணை' என்று சொல்வார்கள். ''ஒரு படத்தின் சிறப்பு, அதைப் பார்ப்பவர்கள் உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளே'' என்கிறார் புகைப் படக் கலை மாணவி கேத்தி ஆண்டிரிஸெவிக். அமெரிக்காவிலுள்ள மிஸ்ஸோரிப் பல்கலைக் கழகத்தில் அவர் செய்திப் புகைப்படக் கலை (ஃபோட்டோ ஜர்னலிஸம்) பயின்று வருகிறார். பயிற்சி முடிந்ததும் அவர் பட்டம் பெறுவார். வகுப்பு அறைகளோடு பயிற்சி நிறைவு பெறுவதில்லை. மாணவ மாணவிகளே வெளியிடும் செய்தி ஏடுகளில் ஆறு மாதங்கள் நேர்முகப் பயிற்சியும் பெற வேண்டும். அவர் பணியாற்றும் ஏட்டின் பெயர் ''கொலம்பியா மிஸ்ஸோரியன்'' ; இது கொலம்பியாவில் வெளியாகும் பிற ஏடுகளோடு போட்டியிட்டாக வேண்டும்.

அவர் எடுத்த சில நல்ல படங்களையும் அவர் பயிற்சி பெறுவதைக் காட்டும் படங்களையும் இங்கு பார்க்கிறோம்.



பொழுது கவிகையில் காவலருடன் உலா.



சித்திரமே பேசும்.



செய் தொழிலில் முனைப்பு




மேலாளரின் கூரிய பார்வையில்.

மழை நடுவே ஒரு நாள் மாலையில்..



புதிய அனுபவம், பேரானந்தம்





செஞ்சுரி
பருத்தித் துணிகள்

ADROIT/925

செஞ்சுரி -100% பருத்தித் துணிகள்

தி செஞ்சுரி ஸ்பின். அண்டு மான்யு.
கம். லிமிடெட், பம்பாய்-400 025

நான் வணங்கும் மனிததெய்வம்-10



பழமொழி பொய்த்தது!...

"மாமியாரை மெச்சிய மருமகள் இல்லை. மருமகளை மெச்சிய மாமியாரும் இல்லை" என்பது பழமொழி. ஆனால் இந்தப் பொது விதிக்கு மாறுபட்டது எனக்கும் என் மாமியாருக்கும் இடையே நிலவும் அன்பு.

என் மாமியார் கோயமுத்தூரில் டாக்டராகப் பணியாற்றி வந்தார். என்னைத் தம் மூத்த மகனுக்கு எடுப்பதற்காகத் தூத்துக்குடிக்கு வந்தார். பெண் பார்க்கும் படலம் முடிந்துவிட்டது. நான் சற்றுக் கறுப்பாக இருப்பதை அவர் சுட்டிக் காட்டியபோது எனக்குக் கணவராக வரப் போகிறவர், "அம்மா! களிமண்ணில்தான் ரோஜாக்கள் மலரும்" என்று எடுத்துக்கூறி என்னைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். ஆனால் சில வருடங்களில் மலர வேண்டிய ரோஜாவைக் களிமண்ணில் புதைக்க ஆரம்பித்து விட்டார். காரணம், குடிப் பழக்கமும், கெட்ட தோழர்களும். இதைக் கண்ணுற்ற என் மாமியார் செடியான என்னை அன்பு என்ற தண்ணீரால் வளர்த்து மூன்று பெண் மொட்டுக்களை மலர வைத்தார்கள்.

வீட்டில் நாத்திமார்களும் உண்டு. அவ்வப்போது குடும்பத்தில் நடக்கும் சண்டைகளை மொட்டி அவர்களுக்கு முன் என்னைச் சற்று அதட்டினாலும் பின்னால் சமாதானப் படுத்திப் போவார்கள். இதற்கு நடுவில் என் கணவரால் ஏற்படும் பூசல்களைச் சமாளித்துக் கொண்டு என்னைத் திருப்திப்படுத்துவதில் ஈடுபட்டார்கள். என் கணவர் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு வீட்டிலேயே நிரந்தரமாகிவிட்டார். வீட்டில் இருந்தால் என்ன நடக்கும் என்பதை யூகித்த என் மாமியார் பல சங்கடங்களையும் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டார்கள். சில சமயங்களில் என்னை அறையில் வைத்துப் பூட்டிவிடும்படியான சந்தர்ப்பங்களும் நேரும். அப்போது என் மாமியார் என்னுடன் 'சிறை'வாசம் அனுபவிப்பார்கள். அன்பைப் பகிர்ந்து கொள்வது போல் துன்பத்தையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். வீட்டில் நடக்கும் கலாட்டாவைக் கூடிய மட்டும் நான் பார்க்காதபடி சினிமாவுக்கோ, நாடகத்துக்கோ அழைத்துப் போவது வழக்கமாகி விட்டது.

ஒருநாள் திடீரென மாலை ஆறு மணிக்கு வந்து என்னை முதல் காட்சிக்கு அழைத்துச் சென்றார்கள். படத்தின் நடுவில் என்னைப் பார்ப்பதும், முகத்தை அலட்டிக் கொள்வதுமாக இருந்தார்கள். நான் அதைக் கண்ணுற்றாலும் படம் பார்க்கும் ஆர்வத்தில் இருந்துவிட்டேன். ஆட்டம் முடிந்து பஸ் நிலையத்துக்கு வந்தோம். ஆனால் என் மாமியார் 'இரண்டாவது காட்சிக்கும் போய்விட்டு வீட்டுக்குப் போகலாமே?' என்றார்கள். நான் சற்றுத் தயங்கினேன். தூக்கம் வரவில்லை என்பதாகச் சொன்னார்களே தவிர கண்கள் இரண்டும் இமைகளை அணைக்கக் காத்திருப்பதை நான் அறிந்தேன். என்றாலும் அவர்கள் சொன்னதால் அவர்களுடன் சென்றேன். வேறு தியேட்டரில் இரண்டாவது காட்சியையும் பார்த்தோம். நடுவில் நான் என் மாமியாரைப் பார்த்தேன். நல்ல தூக்கம். ஏதோ ஒருவிதமாகப் படம் முடிந்து வீட்டுக்கு வந்தோம். கைகால் கழுவிய பின் என் மாமியார் என்னிடம் "இன்றிரவு என்னிடம் படுத்துக் கொள். இந்நேரத்தில் அவனை (என் கணவரை) ஏன் எழுப்ப வேண்டும்?" என்றார்கள். எனக்கும் அலுப்பாக இருந்ததால் அவர்களுடனேயே படுத்துக் கொண்டேன். விடிந்ததும்தான் தெரிந்தது என் மாமியார் என்னை இரண்டு காட்சிகள் காண வைத்தது ஏன் என்று. என் கணவர் நன்றாகக் குடித்துவிட்டு வீட்டில் இரவு ஒரு மணி வரை கலாட்டா செய்திருக்கிறார். "மதியம் என்னிடம்தான் பணம் வாங்கிச் சென்றான்" என்றார் என் மாமியார். மகன் பணம் கேட்கும்போதெல்லாம் கொடுப்பது தவறு என்று தெரியும். என்றாலும் நடுரோட்டில் வைத்துக் கேட்கும்போது வீண் வாக்குவாதம் ஏன் என்றுகொடுத்தார்களாம். என் மாமியார் இறந்து இருபது வருடங்கள் ஆகிவிட்டன. தமக்குப் பின் தம் மகனால் நான் அவதிப்படுவேன் என்று எண்ணித் தம் மகளையும் சில வருடங்களில் அழைத்துக் கொண்டார்கள். என் மாமியார் இருந்தும் அன்பு காட்டினார்கள்; இறந்தும் அன்பு காட்டி வருகிறார்கள்.

என் மூன்று பெண்களையும் நல்ல இடத்தில் மணம் முடித்துக் கொடுத்து விட்டேன். தற்போது என் மாமியாரைத் தேவருலகில் சந்திக்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி ஒரு தனி மரமாக நிற்கிறேன்.

— ஸ்ரீமதி ரேவிநாதன்

திருமதி சின்னம்மாள்

இறைவனடி சேர்ந்தார்



கோவை தொழில்நுட்பக் கல்லூரி ஸ்தாபகர்

திரு V. ரங்கசாமி நாயுடு அவர்கள் துணைவியாரும்,

மதராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட் நிர்வாக இயக்குனர்களும்,
"நவ இந்தியா" தினசரி பத்திரிகையின் உரிமையாளர்களுமான

திரு R. வெங்கடசாமி நாயுடு
திரு P. R. ராமகிருஷ்ணன்
ஆகியோரின் அன்னையாருமான

திருமதி சின்னம்மாள்

23-9-75ந் தேதி நண்பகல் 12-10 மணியளவில்

கோவை ரேஸ் கோர்ஸிலுள்ள தமது இல்லத்தில்
வைகுண்ட பிராப்தி அடைந்தார்.


ஜோதி, ரேஸ் கோர்ஸ், கோயமுத்தூர் - 641018

பிமல் தத்தரின் கதை என்று கூறினாலும் ரிஷிகேஷ் முக்கர்ஜி கதைக்காகச் சிரமப்படவில்லை. ஏறக்குறைய இதே நிலைக்களனில் ஆனந்த் என்னும் படம் எடுத்து அநுபவப் பட்டவர். அந்த ஆனந்த் படத்துக்கும் ஜப்பானியப் படம் ஒன்று ஆதாரம் என்பது பராபரிச் செய்தி.

ஆனந்த் படத்தில் நோய் வாய்ப்பட்டவன் கதா நாயகன். மிலி படத்தில் நோய் வாய்ப் பட்டவள் கதா நாயகி.

மிலி இருக்கும் இடத்தில் எப்போதும் கொண்டாட்டமும் கும்மாளமும் தான். கவலை இல்லாத மனுஷியாக, அவள் வசித்த

மிலி



மாடிக் கட்டிடம் முழுவதற்குமே மகிழ்ச்சி யூட்டி வாழ்ந்து வந்தாள். சேகர் என்பவன் ஒரு ஃப்ளாட்டுக்குக் குடி வந்து அவர்கள் கும்மாளத்துக்குத் தடை விதிக்கிறான். அவன் மனத்தையே 'மாற்றி இன்பம் சேர்க்கும் மிலி பிழைக்க மாட்டாள் என்பது உறுதியாகிறது. அவளையே மணந்து அன்புக்கு அமரத்வம் அளிக்கிறான் சேகர். சுருக்கமாக இதுவே கதை.

உண்மையான காதல் உடலுறவுக்கும் அப்பாற்பட்டது என்பதைக் கலை நுணுக்கத்துடன் நிரூபிக்கும் இந்தப் படத்தின் கதா நாயகன் சேகர் அமிதாப் பச்சன். அந்தப் பாத்திரத்தின் இயல்பு அறிந்து அநாயாசமாக நடிக்கிறார் என்றாலும் மிலியாக வரும் ஜயாபாதுரி அவரையும் மிஞ்சித் தாம் ஏற்ற பாத்திரத்துக்குப் பெருமை சேர்க்கிறார். மிலியின் அண்ணனும், அப்பாவும் அவளைப் பேச வைக்கப் பந்தயம் போடும் இருபது விநாடிகளிலும் அவர் காட்டும் நடிப்பாற்றல் இருபது ஆண்டு ஆனாலும் மறவாது. நுண்ணிய உணர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டும் அவரது உதடுகளும் அதன் பாவங்களும் பல இடங்களில் அமிதாப்பச்சனையே பிரமிக்க வைத்து அவர் நடிப்பைக் கோட்டைவிடச் செய்கின்றனவோ?

மிலிக்குத் தந்தையாக வரும் அசோக் குமாருக்கு அநுபவம் கைகொடுக்கிறது. 'உனக்கு நான் சளைக்க மாட்டேன்' என்று கூறுகிறாற்போல் தம் நடிப்பால் ஜயாபாதுரிக்கு இணையாக உயர்ந்து நிற்கிறார்.

ரிஷிகேஷ் முக்கர்ஜி நடிகர்கள் அனைவரையும் சிறிய பாத்திரங்களை ஏற்பவர்களைக்கூட நன்கு வேலை வாங்கிப் படத்துக்குப் பெருமை சேர்க்கிறார். டாக்டர் ராஹீமாஸாமும் ரஜாவின் உயிருள்ள வசனங்கள் கருத்துக் கனம் சேர்த்தபோதிலும் இயல்பாக அமைந்துள்ளன. பொருளால் பெருமையுறாத பாடல்களை இசையால் பெருமையுறச் செய்துள்ளவர் எஸ். டி. பர்மன்.

சிரிப்பில் தொடங்கிக் கண்ணீரில் முடியும் கதையை உள்ளத்தை உருக்கும் வகையில் எடுத்திருக்கிறார் ரிஷிகேஷ் முக்கர்ஜி. ஆனாலும் மிலி வாழும் மாடிக் கட்டிடத்தை மீண்டும் மீண்டும் காட்டுவதும், சூரியோதய—சூரியாஸ்தமனக் காட்சிகளைப் பலமுறை காட்டுவதும் அவரது இயக்குனத் திறமைக்கு ஒரு திருஷ்டிபரிகாரம்! — ரா. வீ.

கடவுள் விருப்பம்

நீ பெற்றுள்ள பட்டங்களையும், பதக்கங்களையும் டிப்ளோமாக்களையும் கடவுள் கண்ணெடுத்தும் பார்க்கப் போவதில்லை. அவர் உன்னிடம் எதிர்பார்ப்பது (தியாகத்தின்) தழும்புகளைத்தான்!

-- எல்பர்ட் ஹப்போர்ட் - ஆர்பி



கடைசிப் பக்கம்

கண்ணதாசன்

பொருளா—தாரம்?

“ஓர் இந்து, பெண்ணைப் பெறுவதைவிட துர்ப்பாக்கியம் வேறு ஏதுவும் இல்லை. பாவம்! தந்தை பெண்ணை மணம் செய்து தருவதற்குள் சில சமயங்களில் பிச்சைக்காரனாகவும் வேண்டியிருக்கிறது. பெண்ணைப் பெற்ற பரிதாப மனிதன் தன் பெண்ணுக்கு ஒரு நல்ல மணாளனைச் சம்பாதிப்பதற்கு அனைத்தையுமே விற்க நேரிடும்! இந்துவின் வாழ்க்கையில் பெரும் தொல்லையாக விளங்குவது மகள் விஷயமே! பெண்ணைக் குறிக்கும் சொல் வடமொழியில் ‘துஹிதா’ என்பது. முன் காலத்தில் குடும்பத்தில் உள்ள மகள் பசுக்களைப் பால் கறப்பது வழக்கம். ‘துஹிதா’ என்றால் ‘பால் கறப்பவள்’ என்று பொருள். அது முதற் பொருள். அவள் குடும்பத்தின் செல்வத்தை முற்றும் கறந்து கொள்பவள் என்பது இரண்டாவது பொருள்.’’

— இது 1900-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18ம் நாள் அமெரிக்காவில் கலிபோர்னியாவில் பாசதேனா என்னும் நகரத்து ஷேக்ஸ்பியர் கழகத்தில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி.

திருமண விஷயத்தில் இந்துக்களிடையே நிலவும் அநாகரிகத்தை சுவாமிஜி இப்படி நாசூக்காகச் சொல்லியிருக்கிறார்.

அழகான பெண்ணைப் பெற்றவன் தரித்திரனாக இருந்தால், அவளை ஓர் அங்கஹீனனுக்கோ தற்குறிக்கோ கொடுக்க வேண்டி வருகிறது.

குரூபியான பெண்ணைப் பெற்றவன் செல்வந்தனாக இருந்தால், அவளை ஓர் அழகான ஐசுவரியம் மிக்க இளைஞனுக்குக் கொடுத்து விட முடிகிறது.

கரும்பு தின்பதற்கு இந்து கூலி கேட்கிறான்!

கிளியை வாங்கிக் கொள்வதற்கு அவன் பணம் கேட்கிறான்!

வீட்டுக்குத் தேவை நல்ல மனைவி, மருமகள் என்று அவன் எவ்வளவு போதித்தாலும், தன் வீட்டுக்கு ஒரு மருமகளைத் தேர்ந்தெடுக்கும்போது, ‘‘வரவு எப்படி இருக்கும்?’’ என்றே சிந்திக்கிறான்.

‘வது’வுக்கு தட்சிணை கிடையாது; ஆனால் ‘வர’னுக்குத் தட்சிணை வேண்டுமாம்!

அவன் பைத்தியக்காரனாக இருந்தாலும், கட்டியிருக்கிற வேட்டியினால் மட்டுமே ஆடவனானாலும், அவன் பெண்ணிடம் கேட்கிற விலை பெரும் விலையாகும்.

சுவாமிஜி பேசியது 75 ஆண்டுகளுக்கு முன்பு. இந்து சமூகம் இன்னும் இருந்த இடத்தில் தான் இருக்கிறது!

இந்த விஷயத்தில் அது இன்னும் நாகரிகம் அடையவில்லை; காட்டுமிராண்டியாகத்தான் இருக்கிறது என்பதை வெட்கத்தோடு ஒப்புக் கொள்ளுங்கள்.

தாய்மையை—பரிபூரண சக்தியை வணங்குகிற இந்து, அந்தச் சக்தியின் பிரதிபிம்பத்துக்குத் தருகிற மரியாதை இதுதானா?

தெய்வீக உணர்வையே செல்வத்துக்குள் அடக்குவதுதான் ஓர் இந்துவின் லட்சணமா?

‘நல்ல வருமானத்தை எதிர்பார்க்கும் மணமகன், நல்ல மனைவி கிடைக்கும் வாய்ப்பை இழந்து விடுகிறான்’ என்னும் சாதாரண உண்மைகூட நமக்குப் புரியவில்லை.

வருமானம் அதிகம் வரும் என்றால் ஒரு கழுதையின் கழுத்தில் தாலி கட்டுவதற்கும் இந்து தயங்குவதில்லை; அதை ஓர் அவமானமாகவும் அவன் கருதுவதில்லை.

இந்த விஷயத்தில் இந்துக்களின் நடைமுறை மனப் போக்கை நான் கண்டிக்கிறேன்.

இந்து தர்மம் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சீர் வரிசையின் பெருமையைப் பற்றிப் பேசவில்லை. பெண்ணின் — அவள் பிறந்த குடும்பத்தின் பேர்வரிசையைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

அழகான, அற்புதமான பெண்கள் நல்ல துணை கிடைக்காமல் வாடுவதையும், அரக்கத்தனமான ராஜகுமாரிகள் அற்புதமான இடத்தில் வாழ்க்கைப்படுவதையும் எண்ணும் போது, இந்துக்களின் நடைமுறை மீதே எனக்குக் கோபம் வருகிறது; (உண்மையான இந்து தர்மத்தின் மீது அல்ல.)

‘கணவனே தெய்வம்’ என்று கருதுபவள் இந்துப் பெண். ‘கல்லானாலும் கணவன்’ என்பது நடைமுறைப் பழமொழி.

இந்தப் பழமொழியை உண்டாக்கியவர்கள் தரித்திரக் குடும்பத்தில் பிறந்த பெண்களுக்காகவே உண்டாக்கியிருக்கிறார்கள்.

‘மகளே, என்னிடம் பணம் இல்லை. ஆகவே, உன்னை ஒரு கல்லுக்குக் கட்டி வைக்கப் போகிறேன்; அவனே இனி உன் தெய்வம்’ என்று கண்ணீரோடு வழியனுப்பும் தந்தையைத்தான் இந்தப் பழமொழிகளில் காண முடிகிறது.

இந்தப் பழமொழிகளுக்கு அர்த்தம் வேறுதான் என்றாலும், வரதட்சணைக் கொடுமையை எண்ணும்போது எனக்கு இந்த அர்த்தம்தான் தோன்றுகிறது.

ஏ, இந்துக்களே,

மற்ற மதங்களில் இல்லாத பெருமை எல்லாம் நமது மதத்தில், இருக்கிறதே, மற்ற மதங்களில் இல்லாத கொடுமையும்கூட நமது மதத்தில் இருந்தாக வேண்டுமா?

வசதியுள்ள குடும்பத்து இளைஞன் பேரழகான — பண்பான ஏழைப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தால், அவனுக்குத் தெய்வம் கிடைக்கிறது; அவனுக்குச் செல்வம் கிடைக்கிறது.

‘வசதிக்கு வசதி’ என்று அவன் பார்ப்பதானால், பெரும்பாலும் அவன் வாழ்க்கை நரகமாகி விடுகிறது.

புரிகிறதா?

இந்து தர்மம் பொருளாதாரத்தைப் பற்றியும் பேசுகிறது.


ஆனால் அந்தத் தமிழ் வார்த்தையிலேயே அது ஒரு கேள்வியையும் கேட்கிறது.

அது இதுதான்:

‘‘பொருளா—தாரம்?’’

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


பாராட்டுவோர் பலருண்டு
உங்கள் முகத்திற்கு, பகைகள் பல
உண்டு உங்கள் மேனிக்கு.
பக்கபலமாக வைத்துக்
கொள்வீர்—பாண்ட்ஸ்
வானிஷிங் க்ரீம்
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள்
சருமத்தைக் காற்று, தூசி,
சீதோஷ்ண நிலைகளின் கொடுமைகளி
லிருந்து பாதுகாக்கிறது. ஈரத்
தளதளப்பை எழில்பட மேனியிலே
நிலை நிறுத்தும் ஒரு விசேட
'ஹ்யூமெக்டண்ட்' அதில் அடங்கி
யுள்ளது. அது பிசுக்கற்ற மழமழப்
பான பொலிவைத்தருகிறது.
அதைப் பரிபூரணப் பவுடர் படி
மானப் பூச்சாக உபயோகியுங்கள்.
பல மணி நேரங்களுக்கு உங்கள்
'மேக்-அப்'பை புதுமை குன்றாது
அழகுற வைக்கிறது. அல்லது
பூரணமான 'மேக்-அப்'
சாதனமாக வேண்டுமானாலும்
உபயோகியுங்கள்.
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—பரிபூரணப் பவுடர் படிமான க்ரீம்.
POND'S
VANISHING CREAM
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ. எஸ். ஏ. யில் இணைக்கப்பெற்றது)


cali—cloth
காலி-க்ளாத்—
நீங்கள் கண்டு வியந்து
நிற்கும் 100%
பாலியெஸ்டர்,
100% பருத்தி மற்றும்
பாலியெஸ்டர்-பருத்திக்
கலப்பின் சேலைகள்
எமது '75 தீபாவளிப்
படைப்பளிப்பில் சிலவே!
விரைந்து, எவ்வொரு
காலி-ஷாப்பில் அல்லது
பிரபலத் துணிக் கடையிலே
கண்டு, தேர்ந்தெடுத்து
மகிழ்ந்து வாங்குவீர்.
ஆம். அப்படி நீங்கள்
வாங்குவதே மகிழ்வோடு
இனிதான தீபாவளித்
திருநாள் நல்வரவாகும்!